# திருவடி சேரவாரீர்!

156912 7240

சித்தாந்தச் சுடரொளி
நா. செல்லப்பா

4.5
ல்ல

முதலாம் பதிப்பு மார்கழி 1990
பிரமோதூத வருஷம் கார்த்திகை மாதம்

First Edition December 1990

All Rights Reserved

பதிப்புரிமை ஆக்கியோனுக்கே.

விலை—ரூபா 40/=

அச்சுப்பதிவு
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்.

# அணிந்துரை

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்,
தலைவர், இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சைவசித்தாந்தம் எமக்கு வகுத்துக் காட்டும் நெறி திருவடி சேரல் ஆகும். இதனைத் தாடலை என்பர். இருவினையொப்பு, மல பரிபாகம், சத்திநிபாதம் என்ற அனுபவ நிலைகளைக் கடந்து இறுதியில் இறைவனது திருவடி சேர்தலே உண்மை முக்தியாகப் போற்றப்படுகின்றது.

மணிவாசகர் தமது அனுபவத்தின் வெளிப்பாடாகிய திருவாசகத்திலே இறைவனது திருவடிப் பெருமை பற்றிப் பேசுகின்றார். நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க 'எனப் பஞ்சாட்சரத்தினை முதன்மையாகக் கொண்டு துதித்து இறைவனது திருவடிகளைப் போற்றுகின்றார். திருவெம்பாவையில், இறைவனது பொன் மலர் போன்ற திருவடிகளை நாம் உய்ய ஆட்கொண்டருளும் வண்ணம் போற்றித் துதிக்கிறார்:

"போற்றியருளுக நின்னாதி யாம் பாதமலர்
போற்றியருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான் முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
......................................................"

என்று பலநிலைகளில் சிறப்பாகப் போற்றுதல் சிந்தனைக்குரியது. அப்பர் சுவாமிகள் திருவையாறுப் பதிகத்திலே "கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று இறையனுபவத்தில் திளைத்தவராகப்பாடுகின்றார். இறைவனடியார்கள் தமது அனுபவ முதிர்ச்சியின் பேறாய்ப் போற்றித் துதிக்கும் திருவடிகளைச் சேர்வதற்கு மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியும் உள்ளன்பும் பெரிதும் துணை புரியவல்லன. அத்திருவடிகளைச் சேர்ந்தால் எமக்கு என்றுமே துன்பமில்லை என்பதை வள்ளுவப் பெருந்தகை:

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்ற குறட்பாவால் தெளிவுறுத்துகின்றார். இவ்வகையில் அடியார்களின் உயர் இலட்சியப் பொருளாக விளங்கும் `திருவடி சேர்தலுக்கு வேண்டப்படும் சாதனா மார்க்கத்தை எளிய நடையில் விளக்க முற்படுகின்றது இந்நூல்.

இந்நூலின் ஆசிரியர் அன்பர் நா. செல்லப்பா அவர்கள் தான் கற்றுணர்ந்த சைவசித்தாந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டும் தத்துவ ஞான மேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களது சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டும் இந்நூலை உருவாக்க முற்பட்டுள்ளார். திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தியின் விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள் ஆசிரியரின் இந்நூலுக்கு உதவியுள்ளன. சமயப் பற்றுடைய மனம் பற்றித் தத்துவ மேதையின் கருத்து சிந்தனைக் குரியதாகும்.

> ''உண்மை பிறரால் ஒருவருள்ளத்தே திணிக
> கப்படும் இயல்புடையதன்று, அஃதொருவர்
> உள்ளத் தெளிவின் விளைவாக வெளிவரவேண்டும்.
> பிறரது அனுபவம் என்ற மாசுமறு வொன்றுமின்றி
> வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடு சிறிதுமின்றி
> ஒருவர் தெளிந்த உள்ளப் புலப்பாடே உண்மை
> அனுபவமாகும். அத்தகைய தெளிவைத் தோற்று
> விக்கும் மனமே உண்மையான சமயப்பற்றுள்ள
> மனமாகும்,,

என்ற கருத்துக்கள் உண்மையான சமயப்பற்றினை விளக்குவனவாக அமைகின்றன. இந்த உண்மை நாட்டம் பற்றி ஆசிரியர் கூறுமிடத்து, சுட்டறிவைத் தாண்டினாற்றான் வியாபக அறிவைப் பெறமுடியுமென விளங்குகின்றார். 'தெளிவறியார் சிவனை அறியார்' என்ற திருமந்திர மறை வாக்கிற்கேற்ப, திருவடி சேரலின் தெளிவு அறியாது மோட்சம் பெறுதல் சாத்தியமாகாது என்ற உண்மையை ஆசிரியர் வற்புறுத்துகின்றார். இக்கருத்தினை ஆசிரியர் தொடர்ந்து வரும் பல கட்டுரைகளில் பல்வேறு விளக்கங்களையும் உதாரணங்களையுங் காட்டித் தெளிவு படுத்த முனைகின்றார். திருவடிப்பேறு என்பது சைவசித்தாந்தம் சிறப்பிக்கும் சத்திநிபாதம் பெறுதலாகும். மக்களது இதயத்தில் திருவருட்சக்தி பூரணமாகப் பதிதலையே சைவசித்தாந்தம் சத்திநிபாதம் எனக் கூறுகிறது. இதற்கு வேண்டப்படும் முக்கிய சாதனா மார்க்கத்தையே ஆசிரியர் இந்நூலில் இடம் பெறும் பல கட்டுரைகளில் விளக்கிக் கூறுகின்றார். இந்நூலில் 'திருவடி சேர வாரீர்' என்ற கட்டுரையை முதன்மையாகக் கொண்டு பதினெட்டுக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

இக்கட்டுரைகளில் இழையோடி நிற்கும் கருப்பொருள் ஒருவனுக்கு ஆன்ம விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதாகும். இது வள்ளுவன் கூறும் மெய்யுணர்தல் என்பதனோடு தொடர்புடையது. ஆன்மீக விழிப்புணர்வினால் சுயமாகவே மலரப் பெறும் தெளிவு அறிவாகும். இவ்விழிப்புணர்வினை அடைவதற்கு சிவோகம்பாவனை, பஞ்சாட்சர செபம். மனத்தின் விருப்பு வெறுப்பு அற்ற சமநிலையாகிய சமாதி ஆகியன துணை புரியவல்லன என்பதை ஆசிரியர் நன்கு விளக்குகின்றார். மற்றும் செம்பொருள் காணும் சிவராத்திரி பற்றிக் கூறுமிடத்து, சிவபக்தர்கள் ஒரு நாளேனும் முழுமையாகவே சிவபுண்ணியம் செய்வதில் செலவிட வேண்டும் என்ற தூய நோக்கினைத் தெளிவுபடுத்துகின்றார். மனம் இறைபணி நிற்றல் பெரிதும் உதவக்கூடியது. கந்தஷஷ்டி விரதமகிமை பற்றி விபரிக்கையில் 'இருள் நீக்குமாறு வேண்டும் கந்தஷஷ்டி' என அதனைப் போற்றுகின்றார். முருகனை ஆத்மீக அழகோடு ஒப்பிடுகின்றார். இருளாகிய அஞ்ஞானத்தையும் இருவினையாகிய கருமத்தையும் நீக்குதலே நவராத்திரி சாதனை என விளக்கந் தருகின்றார்.

இவ்வாறு ஆன்மீக விழிப்புணர்வுக் கேற்ற விளக்கங்களை ஆசிரியர் தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம், சம்பந்தர், அப்பர் ஆகியோரது திருமுறைகள், கந்தபுராணம், திருவாசகம், சிவஞானபோதம், நாலடியார், கந்தரலங்காரம் போன்ற நூல்கள் தரும் கருத்துக்களின் அடிப்படையில் விளக்கந் தர முற்படுகின்றார். விஞ்ஞான உண்மைகளின் அடிப்படையிலும் உளவியல் அறிவின் அடிப்படையிலும் சைவசித்தாந்த உண்மைகளையும் ஆளுமையுடன் திகழ்வதற் கேற்ற வழிமுறைகளையும் கூறுகின்றார். ஐன்ஸ்டீன், சீனக்கவிஞர் போயூச்சியென், உளவியல் ஞானி பியாஜே ஆகியோரது சிந்தனைகளையும் இந்நூலில் அடிப்படை விடயங்களை விளக்குவதற்கு ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார். சித்தாந்த மறை பொருள் விஞ்ஞானத்தில் பொதிந்திருக்கும் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றார். விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஒப்பிட்டுப் பல கருத்துக்களை ஆசிரியர் விளக்கிக் காட்டுகின்றார். பஞ்சாட்சர செபத் தியானத்தின் சிறப்பினையும் கூறுகின்றார். உண்மை அறிவாகிய வியாபக அறிவே சிறந்தது என்ற உண்மையையும் ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார். ஒருவனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் தீக்கையின் சிறப்பு இந்நூலில் எடுத்துக் கூறப் படுகின்றது. சீவன்முத்தர் பற்றிய விளக்கத்தினைப் பௌத்தம் கூறும் கருத்துக்களோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார். பாரத நாட்டு இதிகாசக் கருத்துக்களையும் எகிப்திய நாட்டு இதிகாசக் கருத்துக்களையும் மெய்ஞ்ஞான நெறி பற்றிய விளக்கத்திற்கு எடுத்துக் காட்டுகின்றார். இருவினைகளால் தொடரும் இறப்பு பிறப்பு ஆகியவற்றை நீக்கி, மோட்சம் பெறவேண்டின், அறிவு அறியாமை இரண்டையும் அகற்றிச் செறிவறிவாகிய மெய்ஞ்ஞானத்தைப் பெறல்

வேண்டும் என்பதை திருமூலரது கருத்தினை அடிப்படையாக் கொண்டு நிறுவுகின்றார்.

ஆசிரியர் நா. செல்லப்பா அவர்கள் சைவசித்தாந்த உண்மைகளையும் சாதனைச் சிறப்புக்களையும் எளிமையான நடையில் தெளிந்த உதாரணங்கள் மூலமும் மூலநூல்கள் தரும் விளக்கங்கள் மூலமும் ஒப்பிட்டு அடிப்படையிலும் எடுத்துக் கூற முயன்றிருப்பது பாராட்டிற்குரியதாகும் 'இறைபணி நிற்றல்' என்ற நூலையும் வேறு சில நூல்களையும் ஆக்கிய அனுபவத்தின் பயனாய் மறைஞானப் பொருள் பற்றிய இந்நூலை இயன்றவரை எளிமையாக்கி மாணவர்களும் மற்றும் இத்துறை பற்றி அறிய விழைபவர்களும் பயன் பெறத்தக்க வகையில் உருவாக்க முயன்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிரியரின் இச்சீரிய பணியைச் சைவ உலகு வரவேற்குமென நாம் நிச்சயமாக நம்பலாம். அன்பர் செல்லப்பா அவர்கள் இத்தகைய முயற்சியினை மேன்மேலும் தொடர்வதன் மூலம் சைவ உலகுக்கு நற்பணியாற்ற வேண்டுமென விழைகின்றோம். அவர் தம் பணி சிறக்க இறைவன் திருவருள் பொலிவதாக!

ப. கோபாலகிருஷ்ணன்

இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
*10 – 12 – 1990.*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

யாழ்ப்பாணம், சித்தாந்த சைவப் பாதுகாப்புச்சேவை,

கௌரவ இயக்குநர், சைவசித்தாந்த கலாநிதி

**மகாவித்துவான் க. கணபதிப்பிள்ளை பி. ஏ. உவந்தளித்த**

# சிறப்புரை

மெய்ப்பொருள் சிவம். மனம் வாசகங் கடந்த பொருள் அது. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமான அதன் நிலை சிவப் பிரகாச நிலை. அது சிவமயம் எனப்படும்.

சிவம் சமயமாகவும், சமயங்கடந்த சமயாதீதமாகவும் உள்ள செம்பொருள். சிவநடனம் ஊனநடனம், ஞானநடனம் என இருவகை. ஊனநடனம் உலகியல் பற்றியது. ஞான நடனம் மறைஞானம் பற்றியது.

சைவசித்தாந்தம், ஞானநடனமாகிய மறைபொருள் ஞானத்தையே விளக்க எழுந்தது மெய்கண்டாரின் சிவஞானபோதம், அதனை விளக்க எழுந்த சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் என்பன சைவ சித்தாந்த மறை ஞானத்தை இருவகையாக வகுத்து உரைக்கின்றன. அவை பொது அதிகாரம், உண்மை அதிகாரம் எனப் பெயர் பெற்றுள்ளன. உண்மை அதிகாரத்தினைச் சிறப்பதிகாரம் எனவும் கூறுவர்

பொதுவதிகாரம் முப்பொருள்கள், முப்பத்தாறு தத்துவங்கள் உள என்பதனைப் பிரமாணத்தாலும் இலக்கணத்தாலும் நிலை நாட்டுகின்றது; படிப்பறிவாகிய அறிவு ஆராய்ச்சிக்குரியது. கேட்டல், சிந்தித்தலுக்குரியது. உண்மை அதிகாரம் கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் ஆகிய நான்கிற்கும் உரியது. கல்வி கேள்வி அறிவிற்கு அப்பாற்பட்ட திருவருளால் உணரப் பெறும் அநுபூதி ஞானத்திற்குரியது. சாதனை பயனைத் தன்னகத்தே கொண்டது.

பொது அதிகாரம் கூறும் சைவசித்தாந்த தத்துவ விளக்கமே சைவ சித்தாந்த மறைஞானம் எனக் கருதும் சைவசித்தாந்திகள் பொதுவாக நாடெங்கும் உளர். இதனால் சைவசித்தாந்த உண்மை அதிகாரத்திற்குரிய மறைஞானம் மறைவான ஞானமாகவே பெரிதும் கொள்ளப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் உண்மை அதிகாரம் கூறும் சைவ சித்தாந்த மறைஞானம் பற்றிப் பலவாறு சிந்தித்துத் தெளிந்து பொதுமக்களும் அறியத்தக்கவகையில் சொற்பொழிவு ஆற்றவும், பத்திரிகையில் எழுதவும் ஆற்றலுடையவராக விளங்கும் சிறப்புக் குரியவர் சித்தாந்தச் சுடரொளி நா. செல்லப்பா அவர்களாவர்.

கலைமகள் விளக்கம், அறிதுயில், இறைபணி நிற்றல் என்பன முன்னர் வெளிவந்த ஆசிரியரின் மறைஞான விளக்க நூல் களாகும்.

சிவஞானபோதம் பத்தாம் சூத்திரம் உண்மை அதிகாரத் தைச் சேர்ந்த மறைஞானச் சுரங்கம். முப்பொருளை இருபொரு ளாக்கி இருமையை ஒருமையாகக் காட்டுவதாகும். அது பற்றிய நூலே இறைபணி நிற்றல்.

திருவடி சேர வாரீர் என்னும் இந்நூலின் முதற் கட்டுரை 'திருவடி சேர வாரீர்!'' என்பது. அது பதினொராஞ் சூத்திரம் பற்றியது அதன் முதற் பந்தி,,

> '' மறைபொருள் விளக்கத்தை மறைஞானம் என விபரிப்பர்: அதற்கு இலக்கண இலக்கியப் பொருள் உரைப்பதனால் அதன் உண்மை விளக்கத்தைப் பெறுதல் அரிதாகும் மறைபொருளை தாரணை தியான சமாதி மூலம் ஒவ் வொருவரும் சுயமாகவே பெறுதல் வேண்டும் ''

எனக் கூறுகின்றது.

வீரகேசரி வார வெளியீட்டில் வெளிவந்து பலரின் பாராட்டு தலைப் பெற்ற கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். ஆசிரியரால் பல்வேறு சந்தர்ப்பத்தில் எழுதப்பெற்றவையாயினும் மேற்கூறிய உண்மை அதிகார மறைஞானத்திற்குரியவையாக விளங்குகின்றன. இவ்வாறு உண்மை அதிகாரம் கூறும் மறைஞானம் பற்றிய விளக்க நூல்கள் தமிழில் ஒரு சிலவே வெளிவந்துள்ளன.

உலகியல் பற்றிய நூல்களே தமிழில் வெளிவந்து பலரின் பாராட்டுதலைப் பெற்றுவரும் இக்கால கட்டத்தில் ஆசிரியரின் மறைஞானச் சிவத்தமிழ்ப்பணி சிறப்புமிக்க அரியபணி என்பதற்கு எட்டுணையும் ஐயம் எழ இடமில்லை.

மறைஞானக் கருத்துக்களை நூலாசிரியர் உலகியல் உளவியல், அறிவியல், அறவியல், அருளியல், மெய்யியல், தமிழியல் தருக்கவியல் முதலிய பல்வேறு துறைகளைத் தழுவி விளக்கும் சிறப்பு மறைஞானம் மறுமலர்ச்சி பெற்று தலைநிமிர்ந்து பீடுநடை நடக்கச் செய்யும் செயற்பாடாகும்.

மறைஞானம் கற்றோர்க்கு மாத்திரம் உரித்தானதன்று. கல்லாதாரும் திருவருளினால் மறைஞானியாகத் திகழலாம். சீவன்முத்தராக உலகிலே வாழலாம்.

கற்றோரும் கல்லாதோரும் மறைஞானிகளாக விளங்கும் சிறந்ததோர் ஞானபரம்பரை நம்மிடையே உண்டு: செல்லப்பாச் சுவாமிகள், சிவயோகசுவாமிகள், பாரதியாரின் ஞானகுருவாகிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள், ஆன்ம விசாரம் தந்த சுப்பிரமணிய ஐயர், சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி முதலியோர் ஒரு சிலராவர்.

மறைஞான நூல்களை எழுதிய கற்றோர் வரிசையில் தாயு மானவரை மேனாட்டார்க்கு அறிமுகஞ் செய்த சேர். முத்துக் குமாரசுவாமி, அவர் மகன் சிவநடனம் பற்றி எழுதிய கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி. சேர் பொன் அருணாசலம், இராமநாதன் திருவிளங்கதேசிகர், நீராவியடி விசுவநாதன், சிவபாதசுந்தரனார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களில் ஒரு சிலராவர்.

இடைக்காடர், வித்துவான் இராமலிங்கம், சோமசுந்தரப் புலவர் முதலியோர் நாவல், நாடகம் முதலியவற்றாலும் மறை ஞானத்தை வளர்த்தனா. பொதுவாக 1930க்குப் பின்னர் ஈழத்தில் சைவசித்தாந்த மறைஞானம் பற்றிய எழுச்சி மலர்ச்சி அடையவில்லை. தளர்ச்சியே அடைந்தது என்பதற்குரிய சான்று தாரங்களே நிறைய உண்டு. பல்கலைக்கழகத்திலே ஆழமான ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலமேதான் மறைஞான சிந்தனை நன்கு விரிவடைய முடியும்.

கலாநிதி பொன்னையா எழுதிய சைவசித்தாந்த ஞான விளையாட்டு, பண்டிதமணி அவர்களின் சமயக் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. முன்னவரின் நூல் பிரசித்தி பெருமையால் மறைஞான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தவறிவிட்டது. பண்டிதமணி அவர்கள் மறைஞானத்திலும் இலக்கியத்திற்கே முதன்மை அளித்தமையால் முழுமையான மறைஞான மலர்ச்சி அவரைப் போற்றுவோர் மத்தியில் ஏற்படவில்லை.

மறைஞான மலர்ச்சி கற்றோரிடையே ஏற்படப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு சிறப்பாக அமைதல் வேண்டும். அதற்கு உதவும் வகையில் இந்நூல் அமைந்துள்ளமை இதன் சிறப்பியல்பில் ஒன்றாகும். திருவள்ளுவரின் ''மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்பதனையே மெய்கண்ட சாத்திரங்கள் விளக்கி உரைக்கின்றன. அதனைச் சுருங்கிய அளவிலே விளக்கிய இந்நூலாசிரியர் காஞ்சி மெய்கண்டார் ஆதீனப் பரமாசாரியர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளால் நிறுவப்பெற்ற கொழும்பு, திருநெறிய தமிழ்மன்ற ''மெய்கண்டார் நெறி'' யின் கௌரவ ஆசிரியர்;

பன்மொழி அறிஞர்; ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த மேடைப் பேச்சாளர்: பல்வேறு சமய தத்துவங்களை உணர்ந்தவர்; பட்டம் பதவி, பாராட்டு, பரிசு, புகழ் முதலியவற்றிற்காகத் தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவர். எவருடனும் மெய்ப் பொருளைப் பற்றிப் படாடோபமின்றி உரையாடுபவர். எல்லா வற்றிற்கும் மேலே அநுபூதிமான். அண்மையில் இந்து கலாசார அமைச்சின் சார்பில் கொழும்பில் நிகழ்த்திய சொற்பொழிவும் யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்த்திய சொற்பொழிவும் பலரது பாராட்டுக்களைப் பெற்றவையாகும். ஆசிரியர் இலங்கை மெய்கண்டான் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகளுடன் கொண்டிருந்த ஆன்மீகத் தொடர்பும் குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தகைய பெருந்தகை "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதற்கேற்ப அளித்த இந்நூலினைப் பலதடவை வாசித்து சிந்தித்துத் தெளிந்து சீவன் முத்தராக வாழ முயல்வோமாக. சமயநிலையிலுள்ளோர்க்கும் சமயாதீதநிலையிலுள் ளோர்க்கும் உரியதாக இந்நூல் மிளிர்வது இதன் தனிச்சிறப்பாகும். எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க.

★

உ

யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபை
கௌரவ செயலாளர்
த. சண்முகலிங்கம் J.P. அவர்கள்

## வழங்கிய வாழ்த்துரை

சைவபரிபாலன சபை நூற்றாண்டு கண்ட சபை. இச்சபையுடன் நூறாண்டுகளாக நற்றொடர்பு பூண்டொழுகும் சைவப் பெருமக்கள் வழித் தோன்றல் சித்தாந்தச் சுடரொளி நா. செல்லப்பா அவர்கள்.

அன்னார் பரந்த நூலறிவும், சிறந்த பேச்சாற்றலும், எளிமையாகவும் இனிமையாகவும் எழுதவல்ல எழுத்தாற்றலும் வாய்ந்தவர்கள். பல நூல்களின் ஆசிரியர். அன்னார் விஞ்ஞான நோக்கோடு மெய்ஞ்ஞானம் பற்றிப் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் பலரின் பாராட்டினைப் பெற்றவைகள். அவை பல்கலைக் கழகம் வரை பயன்தர வல்லவை. காலத்தை வென்று என்றும் நின்று நிலைக்கத்தக்க வகையில் நூல் உருவம் பெற்று வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்க மெய்ஞ்ஞானப் பணியாகும்.

தமிழ் அறிந்தார் யாவர்க்கும் பயன்தரத்தக்க நூலாசிரியரின் மாசறு காட்சி சேர் தொண்டுள்ளம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருவடிசேர வாரீர் | 1—7 |
| 2. | திருவடி சேரும் சாதனை | 8—14 |
| 3. | இறத்தலில் உருவாகும் இறை பணி | 14—20 |
| 4. | இந்துசமயக் கல்வி வளர்ச்சி | 20—25 |
| 5. | செம்பொருள் காணும் சிவராத்திரி | 26—30 |
| 6. | அருள் நல்கும் ஆறுமுகத்தை இருள் நீக்கு மாறு வேண்டும் கந்தசஷ்டி | 30—34 |
| 7. | நவராத்திரியின் விடிவு விஜயதசமியாகும் | 34—37 |
| 8. | இயற்கையோடு இசைந்து வாழும் யதார்த் தமான வாழ்க்கை | 37—40 |
| 9. | விஞ்ஞானமேதை ஐன்ஸ்ரின் கூறிய சைவசித்தாந்த உண்மைகள் | 41—46 |
| 10. | ஆளுமையைப் பெற வழி ஆக்கபூர்வ சிந்தனையை வளர்ப்பதே | 46—52 |
| 11 | செம்பைப் பொன்னாக்கும் இரஸவாதம் | 52—56 |
| 12. | முளைச்சலவையின் மர்மம் | 57—61 |
| 13. | மனதில் எதனையும் காவிச் செல்லாதவனே மெய்ஞ்ஞானி | 62—65 |
| 14. | சாம்பரில் உருவாகும் விநோத சிருஷ்டி | 66—69 |
| 15. | இருளும் மருளும் அற்றதே அருள் | 69—71 |
| 16 | பிறை பார்த்தலின் மறைபொருள் | 72—77 |
| 17. | ஆணை அருட்பா | 78—82 |
| 18 | மூண்டெரியும் அனலில் மெய்ஞ்ஞானத்தைப் பார்க்க விழையும் விமலாதக்கர் | 83—85 |


# திருவடி சேர வாரீர்!

வேதாகமங்களையும், திருமந்திரத்தையும், திருமுறைகளையும் தமிழ் உலகம் மறையெனப் போற்றி வழங்கி வருகிறது. மறை வான உள் அர்த்தம் உள்ளதை மறையெனக் கூறுதல் மரபாகும். மறைபொருள் விளக்கத்தை மறைஞானம் என விவரிப்பர். அதற்கு இலக்கண இலக்கியப் பொருள் உரைப்பதனால் அதன் உண்மை விளக்கத்தை முழுமையாகப் பெறுதல் அரிதாகும். மறை பொருளைத் தாரணை தியான சமாதி மூலம் ஒவ்வொருவரும் சுயமாகவே பெறுதல் வேண்டும். சத்திய சொரூபமான இறைவன் ஒப்புவமை யற்றவன் என்பது ஆகமங்களின் துணிபாகும். எனவே ஒப்பு வமைக்கு உட்பட்ட கல்வி கேள்வி அறிவுடைமையினால் இறை வனைப் பற்றிய பூரணமான தெளிவு பெறுதல் இயலாதெனப் புலப்படுகிறது.

தனக்கு உவமை இல்லாதவன் இறைவன் எனின் அவனு டைய திருவடியும் உவமையற்றதாகும். திருவடியின் மெய்ப் பொருள் மறையாக உள்ளது. அதற்கு மனிதனுடைய காலை உவமை கூறி வழிபடுதல் பொருத்தம் அற்றதாகும். மனிதனுடைய கால் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்தைச் சேர்வதற்கு உதவி யாக உள்ளது. இறைவனும் அவனுடைய திருவடியும் காலம் இடம் காரணம் என்னும் முப்பரிமாணங்களையும் கடந்தனவாகும். ஆகவே வியாபகமாக உள்ள இறைவன் மனிதனைப் போல ஓரி டத்தை விட்டு இன்னோரிடத்தைச் சேர வேண்டியதில்லை. எல்லைக் கோட்டுக்குள் நிற்பவன் ஒருவன் அதைத் தாண்டினாற்றான் வியாபக நிலை அடைதல் இயலும். சுட்டறிவுக்குள் நின்று திருவ டிக்கு உவமைகூறி அதைச் சேரவேண்டும் என முப்பரிமாணங்களுக்கு ஊடாகப் பூசை புனஸ்காரம் செய்வதனால் எவரும் வியாபக உணர்வு பெறுதல் முடியாது. சுட்டறிவைத்தாண்டினாற்றான் வியாபக அறிவு பெறமுடியும்.

திருவடிசேரலின் மறை பொருளைச் சரிவரத் தெளியாது அதை அடையஎடுக்கப்படும் முயற்சிகள் யாவும் வீணாகும். 'தெளிவறியார் சிவனை அறியார்' என்பது திருமந்திர மறைவாக்காகும். திரு வடி சேரலின் தெளிவு அறியாது திருவடிப் புறப்பூசை செய்வதனால்

மோட்சம் பெறுதல் சாத்தியமாகாது. எல்லோரும் ஏறும் வண்டியில் சக்கடத்தாரும் ஏறிச்சறுக்கி விழுந்தவாறு போல நேயர்களைச் சாதாரணசுட்டறிவுப் பூசைசெய்து திருவடிசேரும் வண்ணம் நாம் அழைக்கவில்லை. அது இயலாத காரியம் என்பதை வலியுறுத்துகிறோம்.

சமய சாதனா முறையின் ஆரம்ப நிலையாகிய சரியை நெறியை அனுசரித்த திருநாவுக்கரசுநாயனார் செய்த திருவடி வழிபாட்டின் மறைபொருளைக் கற்று அதற்குத் தக நிற்றல் சிறந்த திருவடி சேரற் சாதனையாகும். சூலை நோயினால் பீடிக்கப்பட்டிருந்த போது அவர் இறைவனுடைய திரோதான சக்தியை ஊன்றிய திருவடியாகப் பாவனை செய்து நோய் நீக்கப் பெற்றார். உடல் சம்பந்தமான நோய் நீங்குவதற்கு இறைவனுடைய திரோதான சக்தி உதவுவதை உணர்ந்தே அவர் திருவடியின் துடத்த மறை பொருளான திரோதான சக்தியைத் தெளிந்து வழிபட்டார். அவர் அருள் பெற்றது புறத்தோற்றத்தையுடைய ஒரு காலால் அல்ல. இவ்வுண்மையைக் ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்னும் தேவாரத்திற் காணலாம். இப்பதிகம் வீரட்டானத்துறையில் உள்ள திருத்தலத்தில் புறப்பூசை செய்யும் போது பாடப்பட்ட தாகும். எனினும் இதன் மறைபொருள் திரோதன சக்தியைக் குறிப்பதாகும்.

பின்பு கொடிய சமணர்களால் சுண்ணாம்பு அறையில் பூட்டப் பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட போது அவருக்குப் புறப் பூசை செய்யும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அங்கு அவர் அகப் பூசை செய்தே இறைவனுடைய சுத்தசக்தியைத் தூக்கியதிருவடியின் மறை பொருளாகப் பெற்று விடுதலை அடைந்தார். சமணர்களால் அவரை மீண்டும் மதமாற்றம் செய்யவோ அல்லது இம்சைப் படுத்தவோ முடியவில்லை. இவ்வுண்மையை அவர் ''மாசில் வீணையும் மாலை மதியமும்'' என்னும் தேவாரத்தை அருளிப் புலப்படுத்தினார். அவர் அருளிய தேவாரங்கள் மூலம் அவர் இணையடிகளையும் வழிபட்டார் எனத் தெளிகிறோம். இதன்மறை பொருள் அவர் இறைவனுடைய திரோதான சக்தியைச் சரியை கிரியை மூலமும், சுத்தசத்தியை யோக ஞானம் மூலமும் விளங்கப் பெற்றார் என்பதாகும். அவர் சைவசித்தாந்தம் தெளிவுபடுத்தும் நான்குமார்க்கங்களையும் அனுசரித்தே மோட்சம் அடைந்தார். சரியை மார்க்கத் தீவிர அபிமானிகள் கூறுவது போல, சரியை மார்க்க மூலமாக மட்டும் விடுதலை பெற்றார் என்பது பொருத்தம் அற்றதாகும். இதிலிருந்து நாம் கிரகித்துத் தெளிய வேண்டியது யாதெனின் திரோதான சக்தியைப் புறப் பூசை மூலமும், சுத்தசக்தியை அகப் பூசை மூலமும் பெறலாம் என்ப



தாகும். புறப் பூசை மூலமும் சுத்த சக்தியைப் பெற முயற்சித்தல் வீணாகும். சுத்தசக்தியில் திரோதான சக்தியும் அடங்குமாதலின் சுத்தசக்தியைக் கொடுக்கும் தூக்கிய திருவடி வழிபாடு சிறந்த தாகும்.

திருவடிக்கு அற்புதமான விளக்கம் கொடுக்கும் திருமந்திர மறை இதோ:-

மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதுந் தானங்கள் ஆவதும்
சுந்தர மாவதுந் தூய்நெறி ஆவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே!

திருவடி காட்டும் இறைவனுடைய இருசக்திகளும் பல்வேறு விதமாகப் பரிணமித்து விளங்குவதை இத்திருமந்திரம் மூலம் உணர்கிறோம். திருவடிப் பேறு என்பது சக்திநிபாதம் பெறுதலாகும். மக்களுடைய இதயத்தில் திருவருட்சக்தி பூரணமாகப் பதிதலையே சைவசித்தாந்தம் சக்திநிபாதம் என வருணிக்கிறது. இதற்குரிய முக்கிய மறைசாதனை இருவினை ஒப்பாகும். இதை விளக்கும் திருமந்திரத்தைப் படித்துணருங்கள்.

இருவினை ஒத்திட இன்னருட் சக்தி
மருவிட ஞானத்தில் ஆதன மன்னிக்
குருவினை கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல நீங்கப் பிறவாமை சுத்தமே!

சுத்த சக்தியினாலேயே பிறவாமை என்னும் மோட்சவீடு கிட்டும் என்பதும் அச்சக்தியைப் பெறுவதற்கு வேண்டிய சாதனை இருவினை ஒப்பாகும் என்பதையும் திருமூலர் இச்செய்யுள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். இருவினை ஒப்புக்குரிய சாதனையை இருமைவகை தெரிதல் எனத் திருவள்ளுவர் தெளிவுபடுத்தும் திருக்குறளை இவண் தருகிறோம்.

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

இதிலிருந்து கிரகித்து உணர வேண்டியது இருமைவகையாகிய எதிர்ப்புச்சக்திகளை மனத்திலிருந்து நீக்குதலே அறம் பூணுதல் என்பதும் அதுவே தூக்கிய திருவடி சேரல் என்பதுமாகும். திருக் கோயிலிலே எழுந்தருளி இருக்கும் ஆனந்தநடராஜனின் திருவுருவம்

ஊன்றிய திருவடியையும் தூக்கிய திருவடியையும் உடையதாகும். இவ்விரு அடிகளும் திரோதான சக்தியையும் சுத்த சக்தியையும் குறிப்பனவாகும். தூக்கிய திருவடி சுட்டிக்காட்டுவது பேருவெளி சிதாகாசத்தையாகும். ஊன்றிய திருவடியை மட்டும் தரிசிப்போர் சிதாகாசத்தைத் தரிசியாதவராவர். சுட்டிக் காட்டப்படும் பொருளை விட்டுத்தான் அதனால் சுட்டிக்காட்டப்படும்பொருளைத் தரிசித்தல்வேண்டும். ஏனெனின் ஒரே தடவையில் இருபொருள்களைச் சரிவரத் தரிசிக்கும் ஆற்றல் ஆன்மாவுக்கு இல்லை என்பதாகும்

சிவாலய தரிசனத்தில் திருவடிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துச் சிதாகாச தரிசனம் பெரும்பாலும் புறக்கணிக்கப் பட்டு வருவதால் இன்று இந்துக்களிடையே ஒருசிலர்தான் மெய் யுணர்தல் பெற்றும், ஏனையோர் உண்மை விளக்கம் பெறாதும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை மாறுதல் வேண்டுமாயின் திருவடிவழிபாட்டில் சிதாகாச தரிசனத்துக்கு முதலிடம் கொடுத்து வியாபக உணர்வு பெறுவதற்கு வேண்டிய சிறந்த சாதனா முறைகளைச் சாதகர்கள் செய்வதற்குரிய வழி காட்டுதல் வேண்டும். இது சம்பந்தமான சைவசித்தாந்த நூல்கள் வெளிவர வேண்டும். குருமார்கள் பயிற்றப்படுதல் வேண்டும்.

புறப்பூசையிலும் பார்க்க அகப்பூசையானது பதினாயிரம் பங்கு கூடிய பலனைக் கொடுக்கும் என்பது மெய்கண்டசாத்திரங் களின் முடிபாகும். அகப்பூசையை அந்தர்யாக பூசையென விளக்கி யுள்ளனர். இத்தகைய பூசையைப்பற்றியும் அதன் மூலம் தான் பூரணமான சிவதரிசனம் பெற இயலும் என்பது பற்றியும் கூறும் திருமந்திரம் தியான விசாரணைக்கு உகந்ததாகும்.

> வாக்கு மனமும் மறைந்த மறைப்பொருள்
> நோக்குமின் நோக்கப் படும்பொருள்; நுண்ணிது
> போக்கொன்றும் இல்லை; வரவில்லை; கேடில்லை
> ஆக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே!

இச்செய்யுளின் மூலம் சாதகர்கள் அவசியம் தெளிந்து சாதனை செய்ய வேண்டியதைப்பற்றிச் சற்று விரிவாக விசாரணை செய் வோம். நுண்ணிய பரம்பொருள் போக்கும் வரவும் இல்லாத தென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. பரம் பொருளைச் சாதகர்கள் சென்றடைதல் வேண்டியதும் இல்லை; அதே போலப் பரம்பொருள் பக்தர்களை வேறு எங்கிருந்தோ வந்து அடைதல் வேண்டியதும் இல்லை என்பது உண்மை விளக்கம் ஆகும். எனவே திருவடி சேரல், சுட்டறிவுக்கு உட்பட்ட எந்த ஓர் அடியையும் சென்ற டைதல் அல்லவெனப் புலப்படுகிறது.



இறைவனைச் சிவாகமங்கள் ஆன்மாவுடன் அந்நியமின்றி உள்ளான் எனவும் நீக்கமறஎங்கும் வியாபகமாக இருக்கிறான் எனவும் விளங்குகின்றன. இவ்வியற்கை இயல்புடைய இறைவனு டைய திருவடியைச் சேரவோ அல்லது சென்றடையவோ முயற் சிப்பவர் ஆன்மாவும் இறைவனும் அந்நியமாக உள்ளதென ஏற்ப வராவர். இவ்விதம் ஏற்பவர் சிவாகம நிந்தனை செய்பவராவர். அதே போல இறைவன் ஆன்மாவை வந்தடைதல் வேண்டும் என நினைந்து வழிபடுவர் அவனுடைய வியாபகத் தன்மையை மறுப் பவராவர். இதுவும் சிவாகம நிந்தனையாகும். இத்தகைய தப்பித மான கொள்கையுடன் திருவடி சேரப் பூசை செய்வோர் குளிக்கச் சென்று சேறு பூசிக் கொள்பவர் போல் ஆவர்.

சேரல் என்னும் பதத்துக்கு இலக்கணப் பொருள் கூறுவதை விட்டு அதன் மறைபொருளாகிய தியானித்தல் என்பதைக் கொள் ளுதல் சிறப்பாகும். வாக்கு மனம் மறைந்த மறை பொருளைச் சாதகர்கள் வாக்கு மனத்தைக் கடந்த மௌன சாதனை முறை யாகிய தியான சமாதி நிலை எய்துவதனால் மட்டுமே முழுமை யாகத் தரிசிக்கலாம். மற்றும் அரைகுறையான தரிசனம் எதுவும் பூரணமான மாசறு காட்சியாகாது. வாக்கு மனம் கடக்கும் நெறி யைச் சைவசித்தாந்தம் நிவிருத்தி மார்க்கம் எனத் தெளிவுபடுத்து கிறது. இதற்குரிய சாதனைகள் யாவும் மனத்தில் எழும் சகல எண்ணங்களையும் கற்பனைகளையும் நீக்குவதாகவும் தடுப்ப தாகவும் இருத்தல் வேண்டும். இச்சிறு கட்டுரையில் அவற்றை எல்லாம் விரித்து விபரமாக ஆய்வதற்குத்தக்க அவகாசம் இல்லை. அவற்றை மிகவும் சுருக்கமாகக் கொடுக்கிறோம்.

திருவடி சேரலின் குறிக்கோள் இறைவனிடம் சரணாகதி அடைவதன் மூலம் மறைஞானம் பெறுதலாகும். இத்தகைய சரணா கதி அச்சம் கொண்டு எவருடைய காலையும் கட்டிப்பிடிப்பதல்ல. இறைவனிடம் ஒருவர் தன்னைப் பூரணமாக ஒப்புவித்தலே சிறந்த சரணாகதியாகும். நான் எனது என்னும் செருக்கறுப்பதே சரணா கதியின் நோக்கமாகுதல் வேண்டும். இதற்குரிய திருவருட்பாக் களைப் பாராயணம் செய்தல் நன்றாகும். தம்மை இறைவனிடம் ஒப்படைப்போர் செயலற்றுச் சும்மா இருக்க வேண்டியதில்லை. மனச்சார்பற்ற நிலையில் மனவிருத்தி இன்றி உள்ளம் சும்மா இருக்க இதயம் திருவருட்சக்தியைக் கொண்டு செயற்படுதல் வேண்டும். இங்ஙனம் செயற்படுவோர் ஆகாயத்தில் பறக்கும் பறவைகளைப் போலும் தண்ணீரில் நீந்தும் மீன்களைப் போலும் எவ்விதமான இறந்த காலச் சிந்தனைச் சுவடும் படாமல் செயற்

படுதல் வேண்டும். இதை நாவுக்கரசநாயனார் ''உயிராவணம் இருந்து உற்று நோக்குதல்'' என்றும் ''யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைதல்'' என்றும் அழகாகக் தெளிவுபடுத்தியுள்ளார்.

மன இந்திரியங்கள் எவ்வகையிலும் அபிவிருத்தியடையாத வகையிலும் விருப்பு வெறுப்பற்ற மனோநிலையிலும் இருந்து பொய்யானவற்றைப் பொய்யென நன்கு உணரும் பொருட்டு யாவற்றையும் உற்றுநோக்குதல் வேண்டும். இங்ஙனம் உற்று நோக்குதலை நவீனதத்துவ ஞானிகள் விழிப்புணர்வு எனவழங்குவர். விழிப்புணர்வு பெற்றால் மட்டும் போதாது. இந்நிலையில் அவதான ஆற்றல் உதிக்கும். இந்த அவதான ஆற்றலை ஆதி சங்கராச்சாரியசுவாமிகள் விவேகம் என விளக்கி அரிய நூல் ஒன்று படைத்துள்ளார். எனவே விவேகம் மட்டும் இருந்தாற் போதாது என உணர்ந்து அத்துடன் கூடிய விசாரணை செய்தல் வேண்டும். விசாரணை என்பது பிறருடன் வீண் வாக்குவாதப் படுதல் அன்று. அது திருவருட்பாக்களை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து இலக்கண இலக்கியச் சுவை ஆய்வு செய்வதல்ல. விசாரணை செய்வோர் மனச்சார்பற்ற நடுநிலையில் இருந்து மனோ விகாரங்களின் மூல வேரைக்கண்டு பிடிக்கும் பொருட்டு ஆய்வு செய்தல் வேண்டும். விவேக விழிப்புணர்வு பெறுவதற்குப் பஞ்சாட்சர செபதியானம் ஆதாரமாக உள்ளதாகும். முறைப்படி பஞ்சாட்சர மந்திரத்தை மாற்றி அமைத்துக் கிரமமாக அவற்றின் எழுத்துக்களை ஒவ்வொன்றாகக் குறைத்துத் திருமூலர் வழிகாட்டிய வண்ணம்:-

அங்கமும் ஆகம வேதம் அதோதினும்  
எங்கள் பிரான்எழுத்து ஒன்றில் இருப்பது  
சங்கைகெட்(டு) அவ்வெழுத்(து) ஒன்றையும் சாதித்தால்  
அங்கரை சேர்ந்த அருங்கல மாமே!

எனத் தெளிந்து ஓதுதல் வேண்டும்.

மேலும் செபதியானத்துக்கு ஆதாரமான தேனினும் இனிய திருவாசகம் ஒன்றை இவண் தருகிறோம். படித்து விசாரணை செய்து நடுவுநிலையிலிருந்து நீங்களாகவே மெய்யுணர்தலுடன் கூடிய உண்மை விளக்கம்பெறுங்கள்:

ஊசல் ஆடும்இவ் வுடல்உயி ராயின  
இருவினை அறுத்தென்னை  
ஓசை யாலுணர் வாக்குணர்(வு) அரியவன்  
உணர்வுதந்(து) ஒளியாக்கிப்



பாசம் ஆனவை பற்றறுத்(து) உயர்ந்தனன்  
பரம்பெருங் கருணையான்  
ஆசை தீர்த்தடி யார்அடிக் கூட்டிய  
அற்புதம் அறியேனே!

நன்மை தீமை, பாவ புண்ணியம், அறிவு அறியாமை, சுவர்க்க நரகம், இன்ப துன்பம் ஆகியவற்றின் இடையே ஊசலாடி இருவினையிற் செயற்படும் மனோவிகாரங்களிடம் இருந்து விடுதலை பெறுவதற்குவேண்டிய உத்தம சாதனை திருவடிசேரலாகும். இதற்கு விசேடமாக வேண்டுவன விழிப்புணர்வுடன் கூடிய விவேக மலர்ச்சி பெறுதல், விருப்பு வெறுப்பற்ற வைராக்கியம் அடைதல், நடுவு நிலைமையுள்ள விசாரணை செய்தல் ஆகியனவாகும். இக்குறிக்கோளைப் பெறுவதற்குரிய தாரணை, தியானம் சமாதி மூலம் திருவடி சேரவாரீர் என நேயர்களை அழைக்கிறோம். தூக்கிய திருவடியாகிய சுத்த சத்தியைப் பற்றி உயர்ந்து சிதாகாசத்தில் வியாபித்து மெய்யுணர்தல் பெற்று மாசறு காட்சி மினிர்ந்து சிறப்பெனும் செம்பொருளுடன் ஒன்றுபடுவோமாக!

இது விடயமாக முடிவில் நினைவுறுத்த வேண்டிய உண்மை ஒன்றுண்டு. அது சிவஞானபோதம் பதினோராம் சூத்திரப் பொழிப்புரையில் கூறப்பட்ட ''கப்பின்றாம் ஈசன் கழல்'' என்பதாகும். அதன் விளக்கம் ஈசனுடைய திருவடி சேர்ந்த பரமுக்தர்கள் மீளுதல் இல்லை என்பதாகும். திருவடியை விட்டுத் திரும்பி வரமுடியாதவர்களுடைய காலடியை வழிபடுதல் பிரயோசன மற்றதாகும். அது உண்மையான இறைவன் திருவடி வழிபாடாகாது. அதனால் தூக்கிய திருவடி சுட்டிக் காட்டும் சுத்த சத்தியை அடைதல் அசாத்தியமாகும். மோட்சத்தைக் கொடுப்பவன் சங்கரனேயன்றிச் சீவன் முக்தர்கள் அல்லர். எனினும் சீவன் முக்தர்களிடம் அன்பு பராட்டுதல் எமது நன்றிக் கடனாகும்.



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# திருவடி சேரும் சாதனை

திருவடியை அரன் கழல் எனச் சிவஞானபோதம் உரைக்கிறது. வேற்றுமைத் தொகையாயுள்ள இச் சொற்றொடர் விரியும் போது அரனுடைய பாதம் என்னும் பொருளைக் கொடுக்கிறது. திருவடியிலும் பார்க்க அரன் கழல் சிறந்த சாதனா முறைகளை மறைமுகமாக எடுத்துக் காட்டுகின்றது. அரன் என்பவன் ஆன்மாவின் மும்மலங்களையும் மறைத்து அருள்பவன் ஆவான். மறைத்து அருளும் செயல் எதிர்மறை நிலையில் ஆற்றப்படுவதாகும். திருவடியை அழகிய பாதம் எனக் கருதி அரன் அழகில் மயங்குவோர் உடன்பாட்டுநிலையில் ஒருவகையான இன்பம் அடைதல் கூடும். ஆனால் அவர்கள் எதிர்மறையான சாதனா முறைகளை அனுசரித்து மலபரிபாகமோ அல்லது இருவினை நீக்கமோ பெறுதல் சாத்தியமாகாது. இவை இன்றி எவராலும் சக்திநிபாதமும் மோட்சமும் பெறுதல் அரிதாகும்.

உடன்பாட்டு நிலையில் சரியை கிரியை முதலிய சாதனாமுறைகளைச் செய்வோர் பசித்து உண்டு பின்னும் பசிபெறுவானைப் போன்று மீண்டும் மீண்டும் பசிப்பதும் புசிப்பதுமாகப் பிறப்பதும் இறப்பதுமாகக் காலத்தைக் கழிப்பார்களேயன்றி ஒருபோதும் சிவஞானபோதமும் விடுதலையும் பெறமாட்டாரென்பது மெய்கண்டார் உபதேசமாகும். இவ்வுண்மையைக் கூறும் வெண்பா இதோ:

> பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
> இசைத்து வருவினையில் இன்பம் — இசைத்த
> இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தால்
> மருவுவனாம் ஞானத்தை வந்து.

இவ்வெண்பாவில் பொதிந்துள்ள சிறந்த மறைபொருளை நாம் தெளிதல் வேண்டும். அதாவது, தவசாதனையில் முதிர்ச்சி அடைந்தோருக்கு இறைவனே தம்முதற் குருவாக உள்நின்று சிவஞானத்தை அருள்வார் என்பதாகும். இவ்விடத்தில் ஒரு சந்தேகம் எழுகின்றது. மனித குருவின்றிச் சிவஞானத்தை எங்ஙனம் பெறுதல் முடியும்? மதகுருமார்களும், ஆசிரியர்கள் அறிவை வழங்குவதில்லையா? என்பதே அச்சந்தேகமாகும். இச்சந்தேகத்தை நீக்காது செய்யப்படும் சாதனை பிரயோஜன மற்றதாகும். இதன் பொருட்டு அறிவுக்கும்



சிவஞானத்துக்கும் உள்ள வேறுபாட்டை முதலாவதாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். சாதாரணமான கல்வி கேள்வி மூலம் குருவிடமிருந்து பெறக்கூடியது அறிவாகும். சிவஞானபோதம் என்பது பிற மனிதரிடம் இருந்து பெறக்கூடிய பொருள் அல்ல. அது மெய்யுணர்தல் மூலம் உள்ளிருந்து இயற்கையாகவே திருவருளால் பூப்போல மலர வேண்டியதாகும். அப்படியாயின் சிவஞானபோதத்தை மக்கள் பெறுவதற்குக் குருமார் ஆற்ற வேண்டிய பங்கு யாது? ''குருவில்லாத வித்தை பாழ்'' என்பதன் மெய்ப்பொருள் என்ன!

இரண்டாவதாக எழும் சந்தேகத்தையும் நாம் சரிவர நிவர்த்தி செய்தல் அவசியமாகும். இன்றேல் திருவடி சேரும் சாதனை சாத்தியமாகுதல் துர்லபமாகும். விஞ்ஞான ஆய்வுகூடத்தில் ஆசிரியர் ஆற்றவேண்டிய பங்கு என்ன? ஆய்வு முறைகளைச் சரிவரவிளக்கி மாணவர்களைச் சுயமாகவே பரிசோதனை செய்து உண்மையைக் கண்டுபிடிக்க விடுவதே ஆசிரியரின் கடமையாகும். ஆய்வுக்குக் கொடுக்கப்பட்ட பொருளை இன்னதென இனங்கண்டு பிடிக்க வேண்டியது மாணவர்களின் பொறுப்பும் திறமையுமாகும். சமய இலக்கிய சரித்திர பாடங்களைப் பயிற்றும் ஆசிரியர்களும் பயிலும் மாணவர்களும் இந்த ஆய்வுச் சாதனா முறைகளை அனுசரிப்பதில்லை. அவர்கள் நேரடியாகவே அறிவைக் கொடுப்பதிலும் வாங்குவதிலும் பங்கு பற்றுகின்றனர். அதில் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டிய சாதனை எதுவும் இல்லை. பரம்பொருள் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டியதொன்றாகும்.

தத்துவ ஞானமாகிய சிவஞானமும் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு தரிசனமாகும். இத்தரிசனத்தை மாசறு காட்சியாகப் பெறுதலே திருவடி சேரலின் திவ்விய இலட்சணமாகும். இந்த இலட்சியத்தைப் புதிதாகப் பெறுவதற்கு வேண்டிய சாதனா முறைகளைக் காட்டிக் கொடுப்பவரே சிறந்த மத குருவாவர். குறிக்கப்பட்ட ஆய்வு சாதனைகளை ஆற்றிச் சுயமாகவே தத்துவ தரிசனம் பெறுவோர் மெய்ஞ்ஞானிகள் ஆவர். புறத்தீப தூபதரிசனம் கொடுப்போர் பூசகராவர். அவர்களுக்கும் சைவசமயத்தில் உரிய இடமுண்டு. ஆனால் அவர்கள் உத்தம குருமார்கள் ஆவதைக் காணுதல் அரிதாகும்.

மேற்குறித்த சிவஞானபோத வெண்பாவில் வரும் ''இருவினை ஒப்பில், இறப்பில், தவத்தால்'' பெறவேண்டிய சிவஞான தரிசனத்தை எத்தகைய சாதனை செய்து ஒவ்வொரு சீடனும் சுய

மாகவே கண்டுகளிக்க வேண்டியதெனும் ஆய்வு முறைகளைக் காட்டிக் கொடுப்பதே மெய்கண்டார் நெறியாகும். இருவினை ஒப்புக்குரிய சாதனை யாது? இறப்பதற்கு வேண்டிய செயல் முறை என்ன? தவம் புரிவதற்கு யாது செய்தல் வேண்டும்? என்பதைத் தெளிந்து செயற்படுத்திச் சுயமாகவே பூரணமான மெய்ப்பொருளைக் கண்டுபிடிக்க உதவும் கல்வி நிலையங்களாகவே பண்டைய முனிவர்களுடைய ஆச்சிரமங்கள் விளங்கின. இன்றைய கல்வி நிலையங்களில் விஞ்ஞானத்துக்குள்ள மதிப்புச் சமயபாடத்துக்கு இல்லாது போனதேன்? என்பது ஆய்வுக்குரியதாகும். விஞ்ஞானத்தைக் கூடுதலாக விரும்பிப்பயிலும் மாணவர்களைக் குறை கூறிப் பலனில்லை. கலைத்துறைக்கு மதிப்புக் குறைந்து வரும் காரணம் கவனிக்கப்பட வேண்டியதாகும். சுருங்கச் சொல்வதாயின் இன்றைய கலைக்கல்வி முறையால் மாணவர்களிடமுள்ள படைப்பு விவேகச் சக்தியை வெளிக் கொண்டு வரமுடியவில்லை என்பதே அதன் மதிப்புக் குறைவுக்கு மூலகாரணமாகும். அளவைரீதியில் படிமுறைக் கிரமத்தில் சிவஞானக் கல்விமுறையை எதிர்மறை நிலையில் விளக்கிச் சாதனை செய்ய வழிகாட்டும் சிவஞானபோதத்தைப் போல வேறொரு உத்தமமான நூலைக் காணுதல் குறைவாகும். அதிற் கூறப்பட்டுள்ள படிமுறைக் கல்விக் கிரமம் உயிர்களின் பரிணாமவளர்ச்சி நிலையைப் பொறுத்துள்ளதாகும். உயிர்களின் பரிணாம நிலையை நான்கு படிகளில் வைத்து மெய்கண்டார் சித்திரித்துள்ளார். அறிவற்றுச் செயலற்றுக் கல்லுப் போல ஆணவ மலத்தில் கிடக்கும் உயிர்களின் நிலை கேவலம் எனப்படும். இந்நிலையிலுள்ள உயிர்களை இரட்சித்து உய்விக்கும் பொருட்டே சீவர்களாகச் சிவன் சிருஷ்டித்துத் தமது சுயஆற்றல் மூலம் பரிணாம வளர்ச்சியடைந்து சகலர் நிலையைப் பெறும்படி அமைத்துள்ளான். சகலர் நிலையிலே தான் உயிர்களிடம் பகுத்தறிவு உருவாகின்றது. இது மனஇந்திரிய சார்புடையதாகும். உலகியலுக்கு அவசியம் வேண்டியதாகும். இதிலுள்ள குறைபாடு யாதெனின் இதன் திரிபுணர்ச்சியாகும். இதனாலேயே மனிதன் மயக்கம் உறுகிறான். இதை இன்னொரு வகையில் பாசஞானம் எனக் கூறுவர். ஜீவனோ உபாயத்தின் பொருட்டு இது வேண்டப்படுவதாகும். இதனையே மனித குருவால் வழங்க முடியும்.'

சகலர் எனப்படுவோர் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் உடையவராவர். இம்மூன்று மலங்களில் இருவினை ஒப்புமூலம் கன்மம் நீங்கப்பெற்ற இருமலமுடையோரே பிரளயாகலர் ஆவர். இவர்கள் பெறும் ஞானம் பசுஞானம் எனப்படும். உடலும், உள்ளமும், இந்திரியங்களும், நான்தான் ஆன்மா எனக் காட்டிக் கொள்ளும் திரிபு உணர்ச்சியிலிருந்து விடுதலை பெறும் போது பெறப்படுவதே பசுஞானமாகும். இந்தப் பசுஞானமும் பதிஞானமாகாது. ஆன்ம ஞானக் கல்வியே சிவஞானத்தைக் கொடுக்கும் எனச் சிலர் சைவசித்தாந்தத்துக்கு முரணான கொள்கையைப் பரப்பி வருகின்றனர். இக்கொள்கை உடையோர் தம்மையுணரும் யோகியரேயாவர். இவர்கள் தமக்கு முதல்வனான தலைவனை உணரார் என்பது சைவசித்தாந்தத் துணிவாகும். இத்தகையோர் ''நான் பிரமம்'' என்னும் போலி மயக்கத்திலிருந்து விடுதலை பெற்றால் தான் மெய்ஞ்ஞானம் பெறுவர். இத்தகையோரே சிவஞானியராவர். இதைப் பெறுவதற்கு முன்பு மாயா மலமும் ஆணவ மலத்தின் பகுதியும் நீக்கப் பெறுதல் வேண்டும். இங்ஙனம் நீக்கப் பெற்றவர் விஞ்ஞானகலர் நிலை அடைந்தவரெனப்படுவர்.

இந்த மூன்று நிலையில் உள்ளவர்களும் தாம் அவற்றை விட்டு நீங்கும் படிமுறைக் கிரமப்படியே திருவருளாற் பாலிக்கப்படுவர். அதாவது சகலர்க்குப் படர்க்கையிலும் பிரளயாகலருக்கு முன்னிலையிலும், விஞ்ஞானகலருக்குத் தன்மையிலும் சிவனே குருவாக நின்று அருள்புரிவார். படர்க்கை முறையிலே மட்டும் சிவன், மனித சிவாசாரியார் மூலம் உபதேசம் செய்வார். பிரளயாகலருக்கு ஏதாகிலும் சிவரூபம் எடுத்து முன்னிலையில் அருள்வார். தன்மை நிலையில் விஞ்ஞானகலருக்கு அருவமாக அந்நியமின்றி உயிருடன் ஏகனாக நின்று அருளுவார். இவ்வுண்மையை இம்மியளவும் வழுவாது உரைக்கும் சிவஞானபோத வெண்பா உரைப்பதை உன்னி உணருங்கள். இதோ அவ்வெண்பா:-

> மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலருக்கு
> அஞ்ஞான அச்சகலருக்(கு) அக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
> பின்உணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
> முன்உணர்த்துந் தான்குருவாய் முன்.

சிவஞானம் மூலம் விஞ்ஞானகலர்நிலையையும் கைவிட்டு நீங்கியவரே சீவன் முத்தராவர். இவர்கள் இப்பிறவியிலேயே மோட்சம் பெற்றவராவர். இங்கே மோட்சம் எனக்குறிப்பது மும்மலங்களிலிருந்தும் பூரண விடுதலை பெறுதலையாகும். இவர்கள் இறந்த பிற்பாடுதான் வேறு சுவர்க்கலோகத்தில் இன்பம் அனுபவிப்பார் என்பதில்லை. இப்பூவுலகமே இவர்களுக்குச் சுவர்க்கத்தின் மேலாகும். இவர்கள் திருவாதவூரடிகளைப் போன்று ''வானேயும் பெறில்வேண்டேன்; மண்ணாள்வான் மதித்தும் இரேன்; தேனே! எம்மலர்க் கொன்றைச் சிவனே!'' என இவ்வுலகை வெறுக்காதும் வறட்டல் வாதம் புரியாதும் தனிமையே இனிமையென இன்புற்றிருப்பர்.

இவர்களை இருபிறவியாளர் எனக் கூறுதல் சித்தாந்த மரபாகும். மானிடப் பிறவியிலேயே இவர்கள் மும்மலமும் இறக்கப் பெற்றுத் திருவடி நிழலாகிய மறுபிறப்புப் பெற்றவர் சீவன் முத்தர்களாவர். மன இந்திரிய உணர்ச்சிகள் இறக்கப் பெற்று மெய்யுணர்தற் பிறப்பு எய்திய சிவஞானியரே சீவன் முத்தரெனப்படுவர். இத்தகைய சீவன் முத்தர் நிலையை அடைய விரும்பும் அடியார்கள் இருவினை ஒப்பு - இறத்தல் - தவம் முதலிய மூன்று சாதனைகளையும் விளங்கி அனுசரித்தல் வேண்டும். அச்சத்தைக் கொடுக்கும் அழித்தற் கடவுளாகிய அரன் சழல் சேரவேண்டியதில்லையெனவும் பாதுகாப்புக் கொடுக்கும் விஷ்ணுவுடைய திருவடிகளையே தொழுதல் வேண்டும் எனவும் சிலர் பிரசாரம்செய்து வருகிறார்கள். இவர்கள் உடன்பாட்டு நிலையில் சுலபமாகத் திருவடியைப் பூசிப்பதால் மோட்சம் பெறலாம் என வழிகாட்டுகின்றனர். இந்த இலகுவான வழியைப் பின்பற்ற முற்படுவோர் மெய்கண்டார் நெறியிலிருந்து விலகிப் பிறவிப் பெருங்கடலை நீந்த இயலாது தத்தளிப்பர்.

இதைச் சொற்பம் விரிவாக ஆய்ந்து நோக்குவோம். சைவ சித்தாந்திகள் சரீரத்தைத் தூல சரீரம் எனவும் சூக்கும சரீரம்எனவும் இருவகையாகப் பகுத்துள்ளனர். தூல சரீரம் பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்ட உடலாகும். சூக்கும சரீரம் என்பது மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களினால் ஆக்கப்பட்டதாகும். இருவினைக்கு இதுவே காரணமாகும். தூல உடம்பு இறக்கும் போது சூக்கும உடம்பு இறப்பதில்லை. அதுவே ஆன்மா மீண்டும் மீண்டும் முடிவிலாது தோன்றி மறைந்து இன்பதுன்பங்களை அனுபவிக்க ஏதுவாகின்றது. தூல உடம்பு இறப்பதனால் ஆன்மா மோட்சமாகிய விடுதலை பெறுவதில்லை. மோட்ச சாதனங்களில் மிகவும் முக்கியமானது சூக்கும சரீரத்தையும் இறக்கச் செய்தலாகும். இதற்கு உறுதுணையாக உள்ளது அரனுடைய அழித்தற்சக்தியாகும். விஷ்ணுவினுடைய பாதுகாப்புச் சக்தியால் இந்தச் சூக்கும சரீரத்துக்கு முடிபு கொண்டு வர இயலாது. பிறவிப் பிணியை நீக்க விரும்பும் அடியார்கள் சூக்கும சரீரம் இறத்தலுக்கு வேண்டிய சாதனை செய்தல் மிகவும் அவசியமாகும். சிவஞான போதப் படைத்தல் காத்தல் அழித்தலாகிய இறைவனின் முத்தொழிலைப் பற்றிச் சிறப்பாக விளக்குகின்றது.

இம் முத்தொழில்களில், திதியாகிய காத்தற் தொழிலே மனிதனுக்குச் சுலபமாகப் புலப்படக் கூடியதாகும். இங்ஙனம் புலப்படும் ''திதியே ஒடுங்கி மலத்து உளதாம்'' எனச் சிவஞானபோதத்துச் சூத்திரம் தெளிவுபடுத்துகிறது. எனவே திதியாகிய காத்தற்



தொழில் தற்காலிகமானதெனத் தமிழ்ச்சிவமறை சொல்லாமற் சொல்லும் அற்புதத்தைச் சிவனடியார்கள் நன்கு புரிந்துகொள்ளுதல் வேண்டும். இந்தச் சரீரம் உள்ள பொழுதே — இந்தச் சொற்ப காலத்திலேயே உரிய சாதனை செய்து மோட்சம் அடைவதற்காகவே விஷ்ணு மூர்த்தி எமக்குத் தற்காலிகமான பாதுகாப்பு அளிக்கிறார். எமது சொற்ப ஆயுட் காலத்தில் இந்தப் பாதுகாப்பு இருக்கும் போதே நாம் சூக்கும சரீரம் இறந்து போவதற்கு வேண்டிய சாதனையை வெற்றிகரமாகச் செய்வதற்கு உகந்த வழி காட்டுவதே சிவஞானபோதமாகும்.

இதற்குரிய சாதனா முறையைச் சுவைபட எதிர்மறை முறையில் எடுத்துக் காட்டும் சிவஞானபோதப் பொழிப்புரை வெண்பாவை இவண் கொடுக்கிறோம். படித்துத் தெளிந்து காட்டப்பட்ட சாதனையைச் சரிவரப் புரிந்து பலனடையுங்கள்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலன் உணர்வில் தீர்ந்து — சிறைவிட்(டு)
அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல் மீளா(து)
உலைவில் அரன் பாதத்தை உற்று.

ஆற்றுநீர் அணையிடப்பட்டதனால் தேங்கி நிற்கிறது. அதேபோலப் பாசஞானமாகிய அணையால் உயிரின் வியாபகமான பதிஞானம் தடைப்பட்டு நிற்கிறது. இத்தடை நீங்கியபோது ஆற்றுநீர் சமுத்திரத்தைச் சென்றடைதல்போல ஆன்மாவைத் தடைசெய்கின்ற மன இந்திரிய உணர்ச்சிகள் நீங்கும் பொழுது, அது சிவனுடைய தூக்கிய திருவடியைச் சார்ந்து அதனிடம் ஒன்று கலந்து மீளாது இருக்கும். இங்கு கூறப்பட்ட சாதனாமுறையானது தடைநீக்கம் ஒன்றேயன்றி வேறெதுவும் இல்லை. சைவசமய பாடசாலை நூல்களில் இச்சாதனையைப்பற்றிய விளக்கமும் வழிகாட்டுதலும் இல்லாதிருத்தல் விசனத்துக்குரியதாகும். மனஇந்திரிய உணர்ச்சி இறத்தலையே இங்கு தடைநீக்கமென உதாரணத்துடன் சுவைபட எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சமுத்திரத்தை அடைந்த ஆறுபோல பரமுக்தர்கள் திரும்பி வர மாட்டார். எனவே அவர்களுடைய திருவடியைக் கும்பிட்டுப் பிரயோசனமில்லை. சூக்கும சரீர இறப்பென்பது வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியான மனத்தைப் பெறுதலாகும் என அருணகிரிநாதர் விளக்குகிறார். இது உண்மையில் ஒரு பூரணமான அழிவு அல்ல: இதை மறைத்தல் என்னும் சிறப்புச் சொல்லால் சைவசித்



158013

தாந்தம் விளக்குகிறது. எனவே அழித்தலின் மறைபொருள் மறைத்தலாகும். மனத்தினால் சிந்தனை செய்யப்படும் பொருளும் மனமும் ஒன்றேயாகும். ஆனால் மனமானது தான் தொடர்ந்து நிலையாக நிற்கும் நோக்குடன் தன்னை விடத் தான் சிந்திக்கும் பொருள் வேறாக உள்ளதெனத் திரித்து காட்டுகின்றது. அதனால் திரிபுடி ஞானம் மக்களிடம் உருவாகிறது. திரிபுடி மூன்று அம்சங்களைக் குறிப்பதாகும். அவையாவன காண்பவன் - காணப்படும் பொருள் - காட்சி என்பனவாகும்.

மனக் கற்பனை மூலம் காணப்படும் பரம் பொருளும் சிவதரிசனமும் வெறும் போலிக்காட்சியாகும் இத்தகைய காட்சி ஒருபோதும் திருவள்ளுவர் மெய்யுணர்தல் மூலம் காட்டும் மாசறுகாட்சி ஆகாது. பொய்யான காட்சிகளை யெல்லாம் ஆன்மீக விழிப்புணர்வுடன் சதாகாலமும் இடைவிடாது அவதானித்துப் பொய்யெனவே காணுதல்தான் மெய்கண்டார் நெறியாகும். திரிபுடிஞானம் அற்றுப் போதலே இதன் சாதனா முறையாகும். இதன் பொருட்டே திருவடி சேரவாரீர் என மீண்டும் அழைக்கிறோம்.

---

## இறத்தலில் உருவாகும் இறைபணி

சிவஞானபோதச் சாதனை இயலில் விசேடமாகக் காட்டப்பட்ட இருவினை ஒப்பு, இறப்பு, தவம் ஆகிய மூன்று சாதனைகளுள் நடுநாயகமாக விளங்குவது இறத்தற் சாதனையாகும். இருவினை ஒப்பைப் பற்றியும், தவத்தைப் பற்றியும் ஏராளமான உரைகள் எழுதப்பட்டுள்ளன. எனவே இவை இரண்டையும் பற்றிச் சிவனடியார்கள் ஓரளவேனும் அறிந்திருப்பார்கள். இறத்தலைப் பற்றி, யதார்த்த பூர்வமான உரை எழுதி அதற்கு வேண்டிய சாதனா முறைகளைச் சிறப்புற விளக்கிய உரையாசிரியர்கள் அரிதாகவே உள்ளனர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கூட இத்துறையில் அவ்வளவு அக்கறை காட்டியதாகப் புலப்படவில்லை.

இறத்தலைப் பற்றிய முழுமையான மெய்யுணர்தல் பெறாத பலர் அதனை வாழ்க்கையின் முடிபாகக் கொள்கின்றனர். சைவ சித்தாந்திகள் அதை ஒரு முடிபாகக் கொள்ளாது அற்புதமான இயற்கை மாற்றம் எனவே திடமாகக் கருதுகின்றனர். இறந்தபின்



நடப்பதென்ன? என்பதைப் பற்றி வீண் கற்பனைகள் செய்து அவர்கள் மன எறிவை மூலம் நூல்கள் ஆக்குவதில்லை. திருமந்திரம் திருக்குறள் சிவஞானபோதம் போன்ற நூல்களில் இத்தகைய கற்பனைகளைக் காணுதல் அரிதாகும். ''உறங்குவது போலுஞ் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' எனவே திருவள்ளுவர் குறித்துள்ளார். திருமூலர் இறத்தலைச் சங்காரம் என்னும் வடசொல்லால் விளக்கி அதனை நான்காகப் பகுத்துக் கூறும் பாடல் இதோ:-

நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாஞ்
சுத்தசங் காரம் மனுதிதந் தோய்வுறல்
உய்த்தசங் காரஞ் சிவன்அருள் உண்மையே!

நான்கு வகையான இறத்தலைப் பற்றிக் கூறும் இப்பாடல் சாதகர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. சங்கீத இலக்கிய ரசனையுடன் இதைச் சேர்ந்து பாடி இன்புற முற்படுவோர் இறைபணி நிற்கத் தவறியோர் ஆவர். இதை நன்கு விசாரணை செய்து இதிற்கூறப்பட்ட நெறி நிற்போரே இறைபணி நிற்பவராவர். அவர்களே மோட்சமாகிய விடுதலை பெற்றவராவர்

சங்காரம் செய்வதற்கு அருள்பவனே சங்கரனாகிய சிவனாவான். அருள் செய்பவன் அவன். சாதனை செய்ய வேண்டியது அடியார் என்பதைத் தெளிதல் அவசியமாகும். நித்த சங்காரம் எனப்படுவது நாம் ஒவ்வொருநாளும் கொள்ளும் உறக்கமாகிய நித்திரையை ஆகும். இந்நிலையில் உடல் உணர்ச்சியும் இந்திரிய மன நினைவுப் புல் எண்ணங்களும் இயற்கையாகவே இறந்து விடுகின்றன. நித்திரையால் நாம் புத்துயிரும் புதிய தெம்பும் பெற்று உற்சாகத்துடன் எமது பணிகளை ஆற்ற முடிகிறது. இம் முதலாவது சங்காரம் எமக்கு இன்றியமையாததென்பது புலப்படுகிறது. இதைத் தேவை இல்லை என்போர் ஒருவாரம் எவ்வித நித்திரையுமின்றி இருந்து பார்க்கச் கடவர். அப்பொழுது இதன் அத்தியாவசியம் புலப்படும்.

இங்கே இரண்டாவதாகக் குறிக்கப்படும் இறத்தல் தூலசரீரமாகிய உடம்பு மட்டும் இறத்தலைக் குறிப்பதாகும். நித்திரையைப் போலும் இது உயிர்களுக்கு ஓர் ஓய்வைக் கொடுப்பதாகும். இதனையே வைத்த சங்காரம் எனத் திருமூலர் சுட்டிக் காட்டுகிறார். இதனால் மட்டும் உயிர்கள் மோட்சம் அடைவதில்லை; நியமமான இறைபணி நிற்பதும் இல்லை. இம்மரணத்தை ஏற்காது அஞ்சி நடுங்குவோர் பலர். சிவனடியார்கள் இந்த இறத்தலுக்கு

அஞ்சாத ஆத்ம வீரர்கள் ஆவர். மரண அச்சத்தையே ஆசாரமாகக் கொண்ட மக்களைத் திருவள்ளுவர் கயவர் எனக் கூறுதல் காண்க. இறப்பதும் பிறப்பதுமாகச் சம்சார சாகரத்தில் ஓயாது உழலும் சீவர்கள் இப்பிறவியிலேயே அதனின்றும் பூதவுடலுடனேயே விடுதலை பெற வேண்டின் சாதனை மூலம் அடைவதற்குரிய இறப்பு ஒன்றுண்டு. இதனையே திருமூலர் சுத்த சங்காரம் எனும் மூன்றாவது இறத்தலாகத் தெளிவு படுத்தியுள்ளார். நான்காவது இறத்தல் பரமுத்தியாகும். அதைப் பற்றிக் கற்பனை செய்தல் வீணாகும்.

மூன்றாவது இறத்தலை அறிதுயில் எனச் சைவசித்தாந்தம் விளக்குகிறது. இந்த அறிதுயில் நிலை பெறுவதற்கு ஆதாரமாக உள்ள சாதனைகள், சிவோகம்பாவனையும், பஞ்சாட்சர செபதியானமும் அத்துடன் கூடிய ஆத்மீக விழிப்புணர்வுமாகும். இம்மூன்று சாதனைகளிலும் வெற்றி பெறுவோர் சுத்த சங்காரமாகிய மன அதீத நிலையடைவர். மன அதீதம் என்பது மனத்தைக் கடத்தலாகும். இதனைத் தத்துவ ஞானிகள் துரியம் என விளக்குவர். இத்துரிய நிலையைப் பற்றிய விரிவான விளக்கம் மாண்டூக்கிய உபநிடதத்தில் உள்ளது. இத்துரிய நிலையை விட உயர்ந்த துரியாதீதம் எனும் ஓர் உன்னத நிலை இருப்பதாகச் சிவஞான பாடியம் விளக்குகிறது. சொற் பதங்களைக் கொண்ட மனவாசக விளக்கங்களில் எமது கருத்தைச் செலுத்துதல் மன விருத்தி மார்க்கமாகும். இதனால் எவரும் துரிய நிலை அடைதல் இயலாது. தூக்கிய திருவடி சேரல் மன நிவிருத்தி நெறியாகும். மனம் விருத்தி செய்யும் சகல கற்பனைகளையும் நீக்குதலே நிவிருத்தியாகும். இதன் மறைபொருளே சிவஞானபோதத்தின் எட்டாவது சூத்திரத்தில் இறத்தலாகக் கூறப்பட்டுள்ளது. உரையாசிரியர்கள் இதிற் போதிய கவனம் செலுத்தி இதற்கு வேண்டிய சாதனா முறைகளைச் சரிவர நெறிப்படுத்தாது வேறு துறைகளில் விலகி ஓடுதல் சைவர்களின் துரதிஷ்டமாகும். பாடசாலைகளிலிருந்து சர்வகலாசாலை வரையில் போதிக்கப்படும் இந்துசமய பாடநூல்களில் இச்சாதனா முறையைப்பற்றிச் சிறிதேனும் இல்லாதிருத்தல் விசனத்துக்குரியதாகும். அங்கு போதனையே சரிவர இல்லாத போது சாதனையைப் பற்றிப் பேசுதல் வீணாகும்.

இறைபணி நிற்க வேண்டுவோர் சன்மார்க்க நெறியில் சாதனை செய்தல் வேண்டும். சன்மார்க்கம் என்பது துன்மார்க்கம் இறக்கப் பெறுதலாகும். இதை இன்னொரு வகையில் திருமூலர் துரிசு அற்ற துரிய மார்க்கம் எனக் கூறுகிறார். துரிசு என்பது மன அழுக்காகும். மனமாசு நீங்காதார் இறைபணி நிற்றல் கைகூடாது. மன மாசு



நீங்குதலும் மனம் இறத்தலும் ஒன்றேயாகும். மன விருத்தியின்றிலேயே மனம் மாசுபடுகிறது. எனவே மனமாசு நீங்குவதற்கு வேண்டிய சாதனை மன நிவிருத்தியாகும். இது மன விருத்தியால் வரும் சுட்டறிவைப் பெருக்கிப் பெரிய அறிவாளியாகுதல் அல்ல. இதற்கு வேண்டியது ஆன்மீக விழிப்புணர்வினால் சுயமாகவே மலரப் பெறும் தெளிவு அறிவாகும். தெளிவறிவைப் பற்றித் திருமந்திரம் கூறுவதைப் பயின்றுணருங்கள்:-

தெளிவறி யாதார் சிவனை அறியார்
தெளிவறி யாதார் சிவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே!

இத்தகையதோர் தெளிவைப் பெற விரும்புவோர் ஆறு அந்தம் அடைதல் வேண்டும் எனத் திருமூலர் வழிகாட்டுகிறார். அந்தம் முடிபு - இறத்தல் என்பன ஒரே பொருளைக் கொடுப்பனவாகும். ஆறு அந்தங்களைப் பற்றிக் கூறும் திருமந்திரமாவது:-

வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத் தகும்எட்(டு) யோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே.

இந்த ஆறு அந்தங்களையும் தெளிவறிவு மூலம் வழுவற உணராத உரையாசிரியர்கள் தமது மனவிருத்தியினால் எடுக்கப்படும் கொள்கை முடிபுகளை எடுத்துக்காட்டி அந்தக் கருத்து முடிபுகளே வேதாந்தசித்தாந்த உண்மை விளக்கமெனக் கூறும் மனவாசக விளக்கங்கள் வேதாந்தமாகுமா? அல்லது சித்தாந்தமாகுமா? மன விருத்தியால் ஆக்கப்படும் கலாசார நூல்களும் நிகழ்ச்சிகளும் திருமூலர் குறிப்பிடும் கலா அந்தமாகுமா? சங்கார காரணனாகிய அரனின் திருவருட்சக்தியாலேயே இந்த ஆறு அந்தங்களும் செய்யப்படும். இவ்வாறன்றி வேதாந்த சித்தாந்த நூல் அறிவு விருத்தியால் அல்ல என்பதை அடியார்கள் உணர்தல் வேண்டும். சந்தான குரவர்களோ அல்லது நாயன்மார்களோ நூல் அறிவு விருத்தியினால் தெளிவறிவு பெற்றதைக் காணோம். எனவே நாம் இதில் ஈடுபட்டு என்ன பயன்?

தெளிவறிவு பெறவேண்டியது விவேகப் படைப்புச்சக்தியின் ஆற்றலினாலாகும். மறைந்துள்ள விவேக ஆற்றலை வெளிக்கொணர்வதற்கு வேண்டியது முக்கியமான விழிப்புணர்வாகும். இங்கே

குறிக்கப்படுவது மன இந்திரிய விழிப்புணர்ச்சியை அல்ல. உணர்ச்சி வேறு உணர்வு வேறு என்பதை விளங்காத சாதகர்கள் மெய்யுணர்தல் பெறுதல் முடியாத காரியமாகும். இன்றைய மதவழிபாடுகளும் புறப்பூசைகளும் உணர்ச்சிகளைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன. தேவாலயங்களில் உணர்ச்சி வசப்பட்டு உருக்கொண்டு ஆடுபவர்களைப் பார்த்து அவர்கள் திருவருளும் மெய்யுணர்தலும் பெற்று விட்டார்கள் என முடிபுசெய்தல் பேதைமையாகும். சுருக்கமாகச் சொல்வதாயின் மனஇந்திரிய மெய்ப்பாடே உணர்ச்சியாகும். இங்கே மெய் என்பது உடலையாகும். மனஇந்திரிய உணர்ச்சி இறந்த திருவருட் புலப்பாடு தான் மெய்யுணர்தலாகும். இங்கே மெய் என்பது சத்தியமாகிய பூரணத்தையாகும். மெய்ப்பாட்டுக்கும் மெய்யுணர்தலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைத் தெளியாதவர்கள் உணர்ச்சியும் உணர்வும் ஒன்று தான் என மயங்குவர். இந்த மயக்க நிலையில் உண்மை விளக்கம் பெறுதல் அசாத்தியம் ஆகும்.

மனம் படைத்த மனிதனுக்கு மனத்தை விட மெய்ஞ்ஞானம் பெறுவதற்கு வேறு வழி தோன்றவில்லை. மனத்தை அடக்குவதற்கு மார்க்கம் புரியவில்லை. தண்ணீருக்குள் அமுக்கப்பட்ட பந்து போல மனமானது அடக்கி விட விட மீண்டும் மேலெழுந்து விருத்தியடைவதையே நாம் அனுபவ வாயிலாக விளங்குகிறோம். இதை உணர்ந்த திருமூலர் அட்டாங்க யோக முயற்சி கூட அந்தம் ஆகுதல் வேண்டும் என அறிவுறுத்துகிறார். அட்டாங்க யோகம் அட்டமா சித்திகளைக் கொடுக்க வல்லதேயன்றி மெய்யுணர்தலைக் கொடுக்கக் கூடியதன்று. உடல் நலத்தையும் உளநலத்தையும் பேணுவதற்கு யோகப்பயிற்சி உதவுகின்றதென்பதை மெய்கண்டார் மறுப்பதில்லை. சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் வரைதல் வேண்டும் என்பது அவர்களுடைய விளக்கமாகும். மேலும் தமது உடலைத் தாமே சித்திரவதை செய்யும் மூடப்பழக்க வழக்கங்களால் எவரும் மெய்ஞ்ஞானமோ அல்லது இருவினை நீக்கமோ பெறுதல் முடியாதென்பது அவர்களுடைய விளக்கமாகும். ஆலயங்களிலே இத்தகைய பழக்கவழக்கங்களைக் கட்டாயமாக நீக்குதல் வேண்டும். இதனால் இந்துமதத்துக்கு இழிவு ஏற்படுகின்றது.

மனவிருத்தி செய்வதன் மூலம் இறைபணி நிற்க நினைப்பவர்களும் முயற்சிப்பவர்களும் போலி அடியார்களாவர். எனவே அவர்களுடைய உபதேசங்களை விட்டு மன நிவிருத்தி செய்ய வேண்டிய சாதனையை இவண் கவனிப்போம். மனதுக்கு உள்ள ஒரு சிறந்த இயல்பைச் சாதகர்கள் தெளிய வேண்டியது அவசிய



மாகும். பிரகிருதி மாயையில் கட்டுண்டு சுட்டறிவாக எமக்குப் புலப்படும் மனம் தனது உண்மையான சுத்த நிலையை உணர்ந்து கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை அடைந்து சிவதத்துவத்துக்குப் பாத்திரமாக மாறக் கூடியதே அதன் சிறப்பம்சமாகும். ஆணவத்தின் கருவியாக இயங்கும் பிரகிருதி நிலையில் உள்ள மனத்தின் இயற்கையான இயல்பு வியாபித்து விளங்கும் தன்மையுடையதாகும். இங்ஙனம் வியாபிக்கும் நிலையடையும் போது தான் திருவருளால் அது ஒருகை விளக்குப் போல ஆன்மாவுக்கு வழிகாட்டி உதவக் கூடியதாகும். திருவருளுக்கு மனம் பாத்திரமாகும் போது தான் சீவாத்மா இறைபணி நிற்க இயலும். மனஆதிக்கத்தின் கீழ் நின்று பணிபுரிவோர் இறைபணி நிற்பதாகத் தங்களைக் காட்டிக் கொள்ளுதல் போலியாகும்.

மன இறத்தலை வடமொழியில் மனோலயம் என வழங்குவர். கலைகள் மூலம் உணர்ச்சிப் பெருக்கு ஏற்படும் போது ஒருவகையான தன் மறதி உருவாகுதல் உண்டு. சில இலக்கியவாதிகள் இதை மனோலயம் என நம்பி மோசம் போகின்றனர். உணர்ச்சி வசப்படும் போது உண்டாகும் பரவசத்தைச் சித்தாந்திகள் ஒரு போதும் மனோலயம் எனக் குறிப்பிடுவதில்லை. அது திருவருள் உணர்வு மூலமே வரும் என்பதையும் அது மன வாசகம் கடந்ததென்பதையும் அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் கூறுவதைக் கவனியுங்கள்.

''வாக்கும் வடிவும் முடிவும் இன்றி ஒன்று
வந்து வந்து தாக்கும் மனோலயம் தானே தரும்''

என்பது அவருடைய விளக்கமாகும். மனோலயம் பெறுவதற்கு நாம் செய்ய வேண்டிய சாதனை விவேகம், வைராக்கியம், விசாரணை ஆகிய மூன்றிலுமே தங்கியுள்ளது. சிவோகம்பாவனை மூலமும் பஞ்சாட்சர செபதியானம் மூலமும் முதலில் விவேகத்தை உள்ளிருந்து மலரச் செய்தல் வேண்டும். பெற்ற விவேக மலர்ச்சியை நிலைபெறச் செய்யும் பொருட்டு வைராக்கியம் பூணுதல் வேண்டும். இன்றேல் விவேகம் நிலைத்து நிற்காது. வைராக்கியம் என்பது மனோதிடம் அல்ல. அதன் மெய்ப்பொருள் ராக துவேஷமாகிய விருப்பு வெறுப்பு அற்ற மனத்தின் சமநிலையாகும். இதை நடுவு நிலையெனத் திருவள்ளுவர் விளக்குகிறார்.

மனஇந்திரிய ஆத்ம விசாரணை செய்வோர் வைராக்கிய நிலையிலிருந்தே சாதனையை ஆரம்பித்தல் வேண்டும். இந்த விசாரணையின் போது மன இயக்கத்தின் தன்மையையும் அது

எவ்வாறு செயற்படுகிறதென்பதையும் விழிப்புணர்வுடன் கணந்தோறும் கவனித்த வண்ணமே இருத்தல் வேண்டும். மனத்தில் உருவாகும் இருமைவகையான எண்ணங்களும் குணாதிசயங்களும் அதனிடம் உள்ள எதிர்ப்புச் சத்தியினாலே தான் உண்டாகின்றன. மன இயக்கம் இன்றேல் காமம், வெகுளி, மயக்கம் முதலிய குணங்கள் உருவாவதில்லை. பொருள் அல்லாத இந்தக் குணங்களைப் பொருள் எனக் கருதி அவற்றை நீக்க முயற்சித்தல் பேதைமையாகும். மனோ இயக்கமே ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு குணமாகப் புலப்படுகின்றது. மாயை பொய்யல்ல. இந்த மனஇயக்கத்தில் புலப்படும் காட்சியே பொய்என விசாரணை மூலம் உணரும் போது மனம் சுயமாகவே இயக்கமின்றி அமைதி பெறுதல் திண்ணம். இத்தகைய அமைதி நிலையே சமாதியும் சாந்தியுமாகும். இது மனோலயத்தின் விளைவாகும். திருவருளுக்குப் பாத்திரமாகிய புனிதமான சுத்தமாயாதத்துவ நிலையிலேயே மக்களால் இறைபணி நிற்க இயலும்.

## இந்து சமயக் கல்வி வளர்ச்சி

மாணவர்களிடம் சமயக்கல்வி வளர்ச்சியை உண்டாக்கும் பணியை மேற்கொள்வோர் முதலில் வளர்ச்சியைப் பற்றிய உண்மை விளக்கம் பெறுதல் அவசியமாகும். வளர்ச்சி இருவகைப்படும். ஒன்று செயற்கையானது. மற்றது இயற்கையானது. மாணவர்கள் இயற்கையாகவே வளரும் பயிர்போன்றவர்கள் அவர்களிடம் இயற்கையாகவே மெய்யுணர்தல் பூவினிற்கந்தம் பொலிந்தவாறு மலர்ந்து இறை மணம் கமழச் செய்யும் வளர்ச்சியே ஏற்படுதல் வேண்டும். இத்தகைய இயற்கை மலர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளது அவர்களுடைய விவேகப்படைப்புச் சக்தி வளர்ச்சியே யாகும். இது விழிப்புணர்வின் பாற்பட்டதாகும். தியானமே இதன் உயிர் நாடியாகும். விவேக ஆற்றல் விருத்தியடையாத போது மாணவர்களிடம் உண்மை விளக்கம் உண்டாகுதல் அருமையாகும். சமயச் செய்திகளையோ அல்லது அறிவுக் கொள்கைகளையோ திணித்து நெட்டுருச் செய்யும் செயற்கை முறையால் விவேகப் படைப்பு ஆற்றல் எவரிடமும் மலர்வதில்லை.



இன்றைய சமயக் கல்வி முறையில் அறிவுத் திணிப்புக்கே முதலிடம் கொடுக்கப்படுவதால் மாணவர்களிடம் விவேக ஆற்றல் மலர்ச்சி அடைதல் அரிதாக உள்ளது. இந்நிலை மாறுதல் வேண்டும். அறக் கல்வி வளர்ச்சியே உண்மையான ஞான மலர்ச்சியாகும். அதுவே மெய்யுணர்தலாகும். இருமை வகை அற்றது மெய்யுணர்தலாகும். இதை விளக்கும் பொருட்டே திருவள்ளுவர் அறத்துப்பாலில் பொதுக்கல்வியை வலியுறுத்தி ஒன்றும் கூறாது மெய்யுணர்தலையே பிரதானமாகக் கட்டிக் காட்டியுள்ளார். பொருட்பாலிலே பட்டும் கல்வி, கேள்வி அறிவுடைமையைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளார். இதை அனுசரித்து இன்றைய இந்துசமயக் கல்வித் திட்டம் வகுக்கப்படாது இருத்தல் துரதிஷ்டமாகும். மெய்யுணர்தல் வளர்ச்சிக்கு முக்கிய இடம் கொடாத கல்வி சமயக் கல்வி யாகாது.

சிவாகமங்களின் சாரமாக விளங்கும் திருமந்திரத்தில் கல்வியைப்பற்றிக் கூறப்பட்டுள்ளவை இந்து சமயக்கல்வி வளர்ச்சிக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளன. அதில் திருமூலர், ''நிலையுடையான் கழல் கற்கின்ற செய்மின்'' எனக் கல்வியாளரை நெறிப்படுத்துகின்றார். சமயக் கல்வி கற்போர் பெற வேண்டிய பயன் நான்காகும். அவையாவன, குறிப்பறிதல் — செறிப்பறிதல் — மறிப்பறிதல்— கறிப்பறிதல் என்பனவாகும். இவையாவும் நிலையுடையான் கழல் கற்பதனாலேயே கைகூடும் என்பது ஆகமமுடிபாகும். கல்வியைப் பற்றிய அச்செய்யுள் இதோ;-

குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே!

திருமூலர் காட்டும் நிலையுடையான் கழலின் மறைபொருள் திருவருட்சக்தியாகும். இச்சக்தியானது ஊன்றிய திருவடி மூலம் திரோதான சக்தியாகவும், தூக்கிய திருவடி மூலம் சுத்தசக்தியாகவும் நீக்கமற எங்கும் பரிணமித்துள்ளது. திரோதான சத்தி பொருளியற் கல்விச் சம்பாத்தியத்துக்கும் சுத்த சத்தி மெய்யுணர்தல் மலர்ச்சிக்கும் ஆதாரமாக உள்ளனவாகும். இதன் குறிப்பறிதல் என்பது, பொருளியற்கல்வி வளர்ச்சியால் மெய்யுணர்தலின் ஆற்றல் மலராதென்பதாகும். எனவே வெறும் சமய பாட அறிவுச் சம்பாத்தியத்தை எவ்வளவு வளர்த்தாலும். மாணவர்களிடம் மெய்யுணரும் ஆற்றல் மலராதென்பதைக் கல்வியாளர் குறிப்பறிந்து பாடத்திட்டங்களை இதற்குத்தக அமைத்தல் வேண்டும். சுட்டறிவு விருத்தியினால் வியாபக அறி

வைப் பெற முடியாது. பாசஞானம் பதிஞானத்தைக் கொடுக்காது. பாடசாலைகளில் வழங்கப்படும் சமய நூல் அறிவு பாசஞானமேயாகும்.

வியாபகத் தன்மையுடைய பதிஞானத்தைப்பற்றிய உண்மை விளக்கம் பெறுதலே செறிப்பறிதலாகும். செறிப்பறிவைத் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாகச் ''செம்பொருள் காணும் அறிவு'' எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இன்றைய சமய பாடத்தின் மூலம் எவரேனும் செறிப்பறிதல் பெற்றதைக் காணோம். சாதாரண சர்வகலாசாலைப் பட்டம் கூடச் செறிப்பறிவை நல்குவதைக் காணோம். இதற்குக் காரணம் மாணவர்கள் இராப்புகல் அற்ற இடத்தே பராக்கற இருந்து கட்டுவிட்டு அகன்று பாழ்பட நோக்கித் தமது இதயமொட்டு மலரப் பெறாமையேயாகும். அறிவு அறியாமை இரண்டையும் நீக்காத கல்விமுறையால் பதிஞானம் பெறுதல் குதிரைக்கொம்பாகும். இருவினை ஒப்பு நோக்கின்றிச் சக்திநிபாதம் நிகழாது.

இக்காரணம் பற்றியே திருமூலர் மறிப்பறிதலைப் பற்றிக் கூறிச் சாதகர்களை நெறிப்படுத்துகிறார். ''சிறைபெறா நீர் போல் சிந்தைவாய்ப் பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே!'' என மாணிக்கவாசகப் பெருமான் அருளிய ''சிறைபெறா நீர்'' என்னும் சொற்றொடரின் உண்மை விளக்கம் பெறுதலே மறிப்பறிதலாகும். சிறையும் மறியலும் ஒரே பொருளைக் கொடுப்பனவாகும். எனவே மறியற்பட்ட நீர் பாய முடியாது கட்டுண்டு நிற்பதுபோல திருவருட்சக்தியாகிய மெய்யுணர்தல் ஆற்றல் மக்களிடம் தடைப்பட்டு நிற்கும் தன்மையை உணர்தலே மறிப்பறிதலாகும். மாணிக்கவாசகரிடம் திருவருட்சக்தி மடைதிறந்து பாய்வதை அவருடைய திருவாசகம் மூலம் நாம் அறிகிறோம். அவர் நான் கல்வி எனும் பல் கடல் பிழைத்தநாக அவர் கூறுகிறார். அவர் தன்னிடமுள்ள தடைகளை நீக்கியதாலேயே திருவருள் பொலியப் பெற்றார். இதை விட்டுப் பிறருடைய பாடல்களை மனனம் செய்து மூளையில் இருத்தி மீட்டு எடுத்துப் பிறருடைய திறமையால் திருவருட்பொலிவு பெற்றார் எனக் கூறுதல் பொருத்த மற்றதாகும். மறிப்பறிதலின் பிரகாரம் மாணவர்களிடம் உள்ள தடைகளை நீக்க உதவும் கல்வித் திட்டமே சமய வளர்ச்சிக்கு வேண்டுவதாகும் எனப் புலப்படுகிறது.

நல்ல சமையல் மூலம் ஆக்கப்பட்டதே சிறந்த கறியாகும். எனவே கறிப்பறிதல் என்பது நன்றாக ஆக்கப்படும் சாதனா முறைகளை அறிதலாகும். சமயம் என்னும் பதம் சமை என்னும் வினையடியாகப் பிறந்ததாகும். நன்றாக ஆக்கப்பட்ட சாதனா முறைகளை



கொண்டது இந்துசமயமாகும். இச்சாதனா முறைகளை வழுவற விளக்கி மாணவர்களுக்கு வேண்டியவற்றை நெறிப்படுத்தி அனுசரிக்கத் தூண்டுவதே சிறந்த சமயக் கல்வியாகும். இதைத் திருக்குறள் வாக்கு மூலம் விளக்குவதாயின் மாணவர்கள் மாசறு காட்சியைச் சுயமாகவே பெறுவதற்கு வேண்டிய வழிகாட்டும் சாதனையுடையதே மெய்யுணர்தலுக்குரிய கல்வி முறையாகும். வள்ளுவன் காட்டிய மாசறு காட்சியைத் திருமூலர் நான்கு தந்திரங்களில் 69 பாடல்கள் மூலம் — அதோமுக தரிசனம், சிவகுரு தரிசனம், முச்சொரூபதரிசனம் குருமடதரிசனம், திருக்கூத்துத் தரிசனம், ஞானகுருதரிசனம், சிவதரிசனம், சிவசொரூபதரிசனம் என விமர்சித்துள்ளார்.

மாசறு காட்சியின் தத்துவப் பொருளை அருவநிலையில் விளக்கிக் கொள்ள முடியாத சாதகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, திருமூலர் 69 பாடல்களில் இரண்டுபாடல்களில் மட்டும் உருவநிலையிலுள்ள ஆலய தரிசனத்தைப் பற்றி விளக்கியுள்ளார். அவற்றில் அவர் ஆலயத்தைப் பற்றிக் குறிப்பிட்ட அடிகளை மட்டும் இவண் தருகிறோம். ''ஐந்தின் பெருமையே ஆலயம்'' என்பதும் ''ஆலயம் அதாக அமைந்த பஞ்சாக்கரம்'' என்பதுமே குறித்த இருஅடிகளுமாகும். ஆலய வழிபாட்டின் ஆணிவேர் பஞ்சாக்கர செபதியானமாகும். ஆலயத்திலே வழிபாட்டுக்குரியது சிவலிங்கம் என்பதை மேலும் இரண்டுபாடல்கள் மூலம் விளக்கியுள்ளார். அவற்றிலுள்ள இரு அடிகள் பின்வருமாறுள்ளன.

1. சத்தி சிவன் வடிவாய சிவலிங்கம்
2. அகார உகாரம் இலிங்கம் அதாமே''

அருவமான பஞ்சாக்கரத்தை உருவகமாக்கி விளக்கும் அமைப்பே ஆலயம் என்பதும், மேலும் அருவமான பிரணவ மந்திரத்தை உருவகமாக்கி விளக்கும் அமைப்பே சிவலிங்கம் என்பதும் தெளிவாகப் புலப்படுகிறது. சிவலிங்க வழிபாடு பிரணவப் பொருளை விளக்குவதாகும். சாதனைக்குரிய வழிகாட்டு நெறியில் மாணவர்களுக்கு இவற்றைச் சரிவர விளக்கும் சமயபாட நூல்கள் அரிதாகும், இறைவன் சன்மானமும் தண்டனையும் கொடுப்பான் என்ற அடிப்படையில் சில புறச் சமயத்தவரைப் பின்பற்றி எழுதப்பட்ட இந்துசமய பாடநூல்கள் நீக்கப்படுதல் வேண்டும். இந்து மதத்தில் மீளா நரகம் என்பதில்லை. எனவே அச்சம் ஊட்டும் வகையில் பாவம் செய்யும் மாணவர்கள் மீளா நரகத்தில் தள்ளப்படுபவார்கள் என்னும் அச்சுறுத்தலுடன் செய்யப்படும் சமய போதனைகள் பாலபாட புத்தகங்களில் இடம் பெறுதல் இந்துமதத்துக்கு முரணாகும். அச்சம் விபரீத விளைவுகளை உண்டாக்குமே

யன்றி மெய்யுணர் தலைக் கொடுக்காது. ''அச்சமே கீழ்களது ஆசாரம்'' என்பது திருக்குறள். மக்களைக் கயவர்களாக்கும் அச்சம் ஊட்டும் சமயக்கல்வி எட்டிப்பழம் போன்றதாகும். அதை எட்டாது செய்வோம். உளவியல் ரீதியிலும் அச்சம் அழிவு பூர்வமான செயல்களுக்கே தூண்டுகோலாகும் எனப்படுகிறது. அச்சத்துக்குப்பதிலாக விழிப்புணர்வை ஊட்டும் கல்விமுறையே விரும்பத்தக்கதாகும்.

இந்துக்கள் வழிபடும் கோயிலை ஆலயம் என வழங்குவர். புறப்பூசை செய்து வழிபடுவோருக்குக் கோயிற் கட்டிடம் அவசியமாகும். ஆனால் அகப்பூசை செய்வோருக்குப் புறக்கோயில் அவசியம் இல்லை. ஆலயத்தின் அகப்பொருள் மறைபொருளாக உள்ளது. ஆன்மா இலயம் அடையும் இடத்தையே ஆலயமெனப் பொருள் கொள்ளுதல் பொருத்தமாகும். இலயம் என்பது இறத்தலைக் குறிப்பதாகும். பலிபீடம் இதற்குச் சான்றாகும். எனவே ஆன்மாவைப் பீடித்த பந்த பாசம் இறக்கும் இடத்தையே ஆலயமெனக் கருதுதல் சிறப்பாகும். இத்தகையதோர் இடத்தை ''வெறும்பாழைப் பெற்ற வெறும் தனி'' என அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். இதையே சைவசித்தாந்தம் சிதாகாசம், சிதம்பரம், சிற்றம்பலம், தில்லை அம்பலம் எனப்பல வகையாகப் பகர்கின்றது. ஆலயத்திலுள்ள சிதாகாசத்தைத் தரிசிக்கும் முறையை உரையாசிரியர்கள் சமய பாடப்புத்தகங்களில் வழிகாட்டி இருப்பதாகப் புலப்படவில்லை. ஆலய தரிசனம் உண்மையான சிவதரிசனத்துக்கு வழிகாட்டுதல் வேண்டும். சிலையைத் தரிசித்து அதற்கு அப்பால் உள்ள சிதாகாசத்தைத் தரிசியாதவர்கள் சிவதரிசனம் பெறமாட்டார்கள். சிலை கண்டவர் சிலையே காண்பர். அதைவிட்டு அப்பாற் பார்ப்பவரே பரம் பொருளைத் தரிசிப்பவராவர். இத்தகைய காட்சி, கற்பனையும், மனவிருத்தியும் சத்தமும் அற்ற மௌன இடத்திலே தான் நிகழும்.

பாடசாலைகளில் உபயோகிக்கப்படும் இந்துசமய பாடபுத்தகங்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்குமார்க்கங்களுடைய புறப்பொருளே பெரும்பாலும் உரைக்கப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. சிவஞானபோதத்திலும் அதன் உரைகளாகிய மெய்கண்டசாத்திரங்களிலும் கூறப்பட்ட நிவிருத்தி மார்க்கத்தைப்பற்றியோ அல்லது நான்குமார்க்கங்களுக்கும் மேற்பட்ட தசகாரிய சாதனையைப் பற்றியோ தெளிவு பெற்ற ஆசிரியர்கள் நூற்றுக்கு இரண்டொருவரே உள்ளனர். தசகாரியசாதனையிற் கூறப்பட்ட தத்துவ சுத்தி, தத்துவதரிசனம், ஆன்மசுத்தி ஆன்மதரிசனம். ஆன்மலாபம், சிவதரிசனம் என்பனவற்றைப் படிமுறைக் கிரமப்படி — சகலர், பிரளயாகலர், — விஞ்ஞானகலர்



ஆகியோர் எப்படிப் பெறுதல் வேண்டும்? படிமுறைக் கிரமசாதனைகள் யாவை? அவற்றைத் தீக்கை மூலம் எப்படிப் பெறுதல் வேண்டும்? என்பனவற்றைச் சரிவரத் தெளிந்து அனுட்டிக்கும் பட்டதாரி மாணவர்களைக் கூடக் காணுதல் முயற்கொம்பாகும். இந்நிலையில் புற்றீசல் போலப் புறப்பொருள் நிறைந்த பாடப் புத்தகங்கள் வெளிவந்து என்ன பிரயோசனம்? சாதனையற்ற போதனை வேதனைக் குரியதாகும்.

கலை, கலாசாரம், பூசை என்ற பெயரில் புறச் சடங்குகளையும் கிரியைகளையுமே நாம் வளர்க்கக் கற்றுள்ளோம்? நுண் அகப்பொருளாகச் சிவதத்துவத்தில் அடங்கியுள்ள நிவர்த்திகலை பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீத கலை ஆகிய ஐந்து கலைகளையும் படிமுறைக் கிரமப்படி சாதகர்கள் அனுட்டித்துப் படைப்புச் சக்தியை வளர்த்துச் சுயமாகவே போலிக் கலைகளைக் கலைத்து மெய்யுணர்தல் பெறும் வகையிலான வழி காட்டி நூல்கள் வெளிவர வேண்டும். கல்வி வளர்ச்சியை மதிப்பீடு செய்தல் அவசியமாகும். அறிவைப் பரீட்சிப்பதை விட மாணவர் கிரகிக்கும் ஆற்றலை மதிப்பீடு செய்து ஆவன புரிதலே மேலானதாகும்.

## செம்பொருள் காணும் சிவராத்திரி

பலன் கருதிச் செய்யப்படுவது பசு புண்ணியம், பலன் கருதாது செய்யப்படுவது சிவபுண்ணியம். பசுபுண்ணியத்தால் உலக சுகங்கள் பெறப்படுகின்றன. சிவபுண்ணியம் ஈவது சுதந்திரமாகிய மோட்ச வீடு பேறாகும். இதைப் பரம பதமாகிய பேரின்பம் எனவும் பகர்வர் வருடம் பூராகவும் பசு புண்ணியம் புரிவதிலேயே தமது காலத்தைப் பெரும் பாலும் செலவிடும் சிவபக்தர்கள் ஒரு நாளேனும் முழுமையாகவே சிவபுண்ணியம் செய்வதில் செலவிட வேண்டும் என்னும் தூய நோக்குடன் அமைக்கப்பட்டதே சிவராத்திரியாகும். இதைக் கேலிக்கூத்துக்களிலும் வேடிக்கை விழாக்கள் கொண்டாடுவதிலும் களித்தல் பொருத்தமற்றதாகும். குளிக்கச் சென்றவன் சேறுபூசிக் கொள்வது போலாகும்.

சிவ புண்ணியத்தைப் பற்றி வழுவற விளங்காதோர் அதைச் சிவனுக்குப் பிரியமான புறப்பூசைகள் செய்து அவனைத் திருப்திப் படுத்தி அதன் மூலம் தமது காரியங்களில் சிவனைக்கை கொடுத்து

உதவச் செய்தல் என வீண் கற்பனை செய்கின்றனர். பிரியம் அபிரியம், திருப்தி அதிருப்தி என்னும் இருள் சேர் இரு வினைகள் சிவனுக்கு இல்லையென்பதை உணராத வரைக்கும் சைவ மக்கள் தவராத்திரியாகிய சிவராத்திரியை அவராத்திரியாகவே செலவிடுவர். சிவபுண்ணியத்தை அந்தர் யாக பூசையினால் மட்டுமே பெற முடியும் எனச் சந்தேகத்துக்கு இடமின்றிச் சிவஞானபோதம் விளக்குகிறது.

பகிரங்கமாகச் செய்யப்படும் புறயாக வேள்விப் பூசைகளுக்கு எதிரானதே அந்தரங்கமாகச் செய்யப்படும் அந்தர்யாக பூசையாகும். இப்பூசை செய்வதற்கு எவ்வித பணச் செலவும் தேவையில்லை. இதைப் புரிவதற்கு எந்த ஒரு புறப் பூசகரும் வேண்டியதில்லை. முதல் இரவை எங்ஙனம் நாயகனும் நாயகியும் நேரடித் தொடர்பு கொண்டு பரஸ்பரம் இன்பம் பெறுவதில், செலவிடுகிறார்களோ அங்ஙனமே சிவராத்திரியைச் சிவ பக்தர்கள் மாணிக்கவாசகப் பெருமான் நெறிப்படுத்திய சன்மார்க்கத்தில் நாயகி நாயக பாவனையில் செலவிடுதல் சிறந்த பேரின்பமாகும். நாயகி பெறும் இன்பம் தன்னைத் தலைவனுக்கு முழுமையாக ஈய்ந்து தன் மறதி பெறுவதிலேயே தங்கியுள்ளது. ஆன்மா பெறும் பேரின்பம்தன்னைப் பரமாத்மாவுக்குப் பூரணமாக அர்ப்பணித்துச் சரணாகதி அடைவதிலேயே தங்கியுள்ளது.

சைவ சித்தாந்த மெய்கண்ட சாத்திரங்கள் யாவும் ஒரே முகமாகக் கூறும் மோட்ச ஏதுவான சாதனைகள் மூன்றாகும். அவையாவன: இருவினை ஒப்பு, சிவோகம் பாவனை, பஞ்சாட்சர ஜெப தியானம் என்பனவாகும். இவற்றை முறைப்படி சாதனை செய்தல் சிவராத்திரி நோன்புக்குரியதாகும். இவற்றைச் சரிவரச் செய்யும் சாதனா முறைகளைச் சைவ மக்கள் நன்கு பயிற்றப்பட்டுள்ளதாகப் புலப்படவில்லை. இதற்கு வேண்டிய சமய குருமார்களோ அல்லது வழிகாட்டி நூல்களோ சைவ உலகில் போதியளவு இல்லாதிருத்தல் துரதிர்ஷ்டமாகும்.

இரவு பகலற்ற இடத்தே இருக்கும் சிவனை இருமை வகைக்கு உட்பட்ட இரவுடன் தொடர்புறுத்துதல் சிவஞானமாகாது. இருள் நீக்கி இன்பம் பெற வேண்டியது ஆன்மாவேயன்றிச் சிவனல்ல. தீப ஆராதனை யாவும் ஆன்மா ஞான ஒளி பெறும் பொருட்டே எடுத்துக் காட்டாகச் செய்யப்படுவனவாகும். சிவவிக்கிரகத்துக்கு ஒளி யூட்டுவதனால் ஆன்மாவுக்கு உள்ளொளி கிடைக்கும் என்ற கொள்கை பேதமையாகும். சத்தாகிய பரம் பொருளின் முன்பு அசத்தாகிய செயற்கை ஒளி விளங்கித் தோன்றாது. சூரிய ஒளி



முன் மின் மினி வெளிச்சம் புலப்படுதல் எங்ஙனம்? மெய்கண்ட சாத்திரத்துக்கு முரணான முறையில் மக்களைத் தூண்டிச் சிவராத்திரி நோன்பிருக்கச் செய்தல் எமது நோக்கமல்ல.

பூமியைச் சார்ந்து வாழ்பவருக்குத் தான் இரவும் பகலும் புலப்படுகிறது. பூமியின் சார்பு நீங்கி ஆகாச வெளியில் சஞ்சரிக்கும் விண்வெளி வீரர்களுக்கு இரவு இருள் என்னும் பிரச்சினை ஏற்படுவதில்லை. மன இந்திரியச் சார்புடையவருக்கே அறிவு அறியாமை, இருள் மருள் என்னும் பிரச்சினை உண்டாகிறது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உகந்ததே சிவராத்திரியாகும். பிரச்சினையிலிருந்து விலகி ஓடுபவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மாட்டார்கள். சிவராத்திரி வேளையில் இருள் சேர் இரு வினைக்கு முகங்கொடுத்து நோக்கி அவதானித்து இருவினை ஒப்பு மூலம் உண்மை விளக்கம் பெறாதவர்கள் இருவினை நீக்கிச் சக்திநிபாதம் அடைதல் ஒருபோதும் கைகூடாது. துரதிஷ்ட வசமாக ஆத்மீகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சைவ மக்கள் இன்று உளவியல் ரீதியில் விலகி ஓடுவதையும் வேறு குறுக்குப்பாதைகளை நாடுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் ஆத்மீகப் பிரச்சினையோ அல்லது வேறு எந்தப் பிரச்சினைகளையோ தீர்த்தல் இயலாது.

சிவராத்திரி நோன்பிருப்போர் உணர வேண்டிய உண்மை விளக்கம் வள்ளுவப் பெருந்தகை காட்டிய வண்ணம் மருள் நீங்கி மாசறு காட்சி பெறுதலாகும். இருளாகிய அறியாமையும் மருளாகிய மன மயக்கமும் சிவனருள் பெறுவதற்குப் பெரும் தடையாக உள்ளன. எனவே இருளையும் மருளையும் நீக்குவதே மக்களுடைய பிரச்சினையாகும். இதற்கு வேண்டிய திருவருள் எம்மிடம் இல்லை என்று கவலை வேண்டாம். திருவருள் பாலித்தே நாம் பிறந்துள்ளோம். அது எப்பவோ முடிந்த காரியம். அந்நியமின்றி அது ஆன்மாவுடன் இரண்டறக் கலந்துள்ளதென்பது முழுதும் உண்மை. எனவே பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதே நோன்பாகட்டும்!

செம்பொருள் என்பது நீக்கமற எங்கும் செறிந்து வியாபித்துள்ள பரம் பொருளாகும். சிவதரிசனம் என்பது இச்செம்பொருளைக் காண்பதாகும். இக்காட்சியை நாம் ஊனக்கண் பார்வை மூலம் பெறுதல் இயலாது. செயற்கை ஒளியை ஊனக் கண்ணால் தரிசிப்பவர்கள் தாம் மாசறு காட்சி பெறுவதாகக் கற்பனை செய்தல் மூட நம்பிக்கையாகும். ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதியே சிவசோதியாகும். சூரியஒளியைப் பூமியின் நிழலானது இரவிலும், மேகக்கூட்டங்கள் பகலிலும் மறைத்தல் போலச் சிவசேச

தியை ஆணவ நிழலும் மாயா மேகங்களும் மறைத்துள்ளன. இந்த மறைப்பை நீக்கிச் சிவசோதி தரிசனம் சுயமாகவே பெறுதல் மாசறு காட்சியாகும். ஆலயத்திரை நீக்கம் இதைக் குறிக்கிறது.

இவ்வுண்மையைக் கந்தபுராணம் அடி முடி தேடுபடலம் இனிது எடுத்துக் காட்டுகிறது. பிரம்மாவும், விஷ்ணுவும் தொடக்கமும் முடிவும் உள்ள பரிவார தெய்வங்களாகும். எனினும் அவர்கள் தாம் பூரணத்துவம் அடைந்துள்ளதாக அகங்காரம் கொண்டனர். அவர்கள் தம்முள்ளே யார் பெரியவர் என வாதாடி மோதுப்பட்டனர். அவர்களுக்கு உண்மையை உணர்த்த முற்பட்ட பரம்பொருளாகிய சிவன் ஓர் அகண்ட சோதியாகக் காட்சியளித்தார். அப்பொழுது சிவன் அவர்களை நோக்கி, உங்களில் யார் இந்த அகண்ட சோதியின் அடியையோ அல்லது முடியையோ தேடிக் கண்டு பிடிப்பீர்களோ அவரே பூரணத்தைத் தெளிந்த பெரியவர் ஆவார்' எனக் கூறி மறைந்தார்.

பூமியின் அடியைத் தோண்டி அகண்ட சோதியின் ஆரம்பத்தைக் காண விஷ்ணு மூர்த்தி முயன்றார். ஆகாயத்தில் பறந்து அதன் முடியைத் தேட பிரம்மதேவன் பிரயத்தனப்பட்டார். இங்ஙனம் இருவரும் தேடித்தேடிச் சக்தியிழந்தனர். சோர்வுற்றனர். அடிமுடியைத் தேட முடியாது களைத்து முயற்சியைக் கைவிட்டனர். தம்முடைய அகங்காரச் செயற்கைச் சார்புப் பணியால் அகண்ட சோதியின் அடிமுடியைத் தேடிக் காணமுடியாதென்பதை உணர்ந்து வெட்கித் தலை குனிந்தனர். இந்த அகண்ட சோதியின் உருவ அமைப்பாகவே சிவலிங்கம் உள்ளது. இதை வைத்துக் கொண்டு அற்புதம் புரிந்து காட்டுவதனால் சிவபக்தர்களுக்கு மாசறு காட்சி ஒருபோதும் கிடைக்கமாட்டாது. கண்டம் என்பது பகுதியாகும். அகண்டம் பகுதியற்ற பூரணமாகும், கண்டமான சிவலிங்கத்தைச் சிருஷ்டித்து அற்புதம் புரியலாமேயன்றி அகண்டமான சிவலிங்கத்தை எவராலும் சிருஷ்டிக்க இயலாது. அவதார புருஷர்களாற் கூடத் தேடிக்காண முடியாத அகண்ட சோதியைத் தன்னுள்ளே தேடிக் கண்டதாகத் திருநாவுக்கரசு நாயனார் கூறியது எமக்குப் பெரும் வியப்பளிக்கிறது. மேலும் இந்த அகண்ட சோதியை அவர் 'கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' எனக் குறிப்பிடுகிறார். ஊனக்கண்ணாலும் கண்டறிய முடியாததொன்றை எங்ஙனம் காண முடியும்? என்பது தான் இச் சிவராத்திரியில் எழும் பிரச்சினை. மன இந்திரியத்தை விட வேறு வழி எமக்குப் புலப்படவில்லை. மனிதனுக்கு மனம் தான் முக்கியமான கருவி. அதன் உதவி



யின்றி அதன் ஆய்வின்றி எதையும் அறிய முடியாதென நாம் நம்புகிறோம். ஆனால் திருநாவுக்கரசு சுவாமிகளோ அது முடியும் என எமக்குத் தைரியம் ஊட்டி வழிகாட்டுகிறார்.

இதை மாணிக்கவாசகப் பெருமான் சுட்டறுத்தல் என்னும் தலைப்பில் தாம் திருவருள் மூலமாகவே கேளாதனவெல்லாம் கேட்டுக் காணாதனவெல்லாம் கண்டதாகத் தெளிவுபடுத்துகிறார். மன மாசுகளைச் சுட்டறுத்து அதைத்திருவருளுக்கு நல்லதொரு பாத்திரமாக்கினால் அகண்ட சோதியை நவையறு காட்சியாகத் தரிசிக்க இயலும் என்பது நால்வர் காட்டிய நன்னெறியாகும். நாலுபேர் சொன்னதைக் கேளாது உலகாயதப் பூசகர்கள் சொன்னதைக் கேட்டு மனப்பிரயத்தினால் சிவனைத் திருப்திப்படுத்தும்புறப் பூசைகளை மட்டும் செய்யும் சைவ உலகம் மாசறு காட்சி பெற்றதாக புலப்படவில்லை.

மன இயக்கத்தாலும் கற்பனைகளாலும் எண்ண விருத்தியாலுமே மனம் மாசடைகிறது. மனமாசை நீக்குவதற்குச் சுலபமான நெறி அதை ஒரு கருவியாக உபயோகித்துத் திருப்தி காண்பதற்கு வீண் முயற்சிகளும் கிரியைகளும் செய்யாது திருவருள் பெறுவதற்கு உகந்த பாத்திரமாக்குதலேயாகும். மனக் கருவியை மாற்றி அமைத்து ஒரு பாத்திரமாக்குதல் வேண்டும். நாயகியுடைய கருப்பையில நாயகனுடைய கருப்பதிந்து மெய்ஞ்ஞான உயிராக உருப்பெறுதல் வேண்டும். இறைவனிடம் பூரணமான சரணாகதி அடைதலே இதற்குரிய சிறந்த நெறியென நமது நால்வர் சொல்கின்றனர், சரணாகதி அடையும் மனம் சாந்தியடைந்து திருவருளுக்குப் பாத்திரமாகும். இங்ஙனம் பாத்திரமாகும் மனம் தான்தோன்றித்தனமாக இயங்காது இறை பணி நிற்கும் என்பது நிச்சயம். சரணாகதி அடையும் மனம் எவ்விதத்திலும் இருமை வகை எண்ணங்களை விருத்தி செய்வதில் ஈடுபடாது மணிவாசகர் அறிவுறுத்திய வண்ணம்,

'சிந்தனைநின் தனக்காக்கி நாயினேர்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே! மலையே! யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டுமிலித் தனிய . னேற்கே!

எனச் சிவராத்திரி நோன்பிருப்பவர் தியானித்திருத்தல் பொருத்தமர்கும். இத் திருவாசகத்தில் வரும் 'இரண்டும் இலித்தனியனேற்கு உன்னைத் தந்தனை' என்னும் வாக்கியம் எமது சாதனைக்கு வழி காட்டுவதாக அமைந்துள்ளது. இதன் மெய்ப்பொருள் திருக்குறளில் வரும் இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டிருத்தலை ஒத்திருக்கின்றது. இரண்டும் இலியாக வேண்டுமாயின் எமது மனம் எதிர்ப்புச் சக்திகள் எதையும் சாராது நடுவு நிலையில் நின்று சம நோக்குடன் எதையும் அவதானித்து மாசு நீங்க வேண்டும். அப்பொழுது தான் அது சாந்தியும் சமாதானமும் அடைந்து திருவருளுக்குப் பாத்திரமாகும். இங்ஙனம் வெறும் தனிப் பாத்திரமாகும் போது தான் அந்த மனத்தில் சக்தி நிபாதம் நிகழும். இந்நிலையிற்றான் சிவன் தன்னை எமக்குத் தந்து அருள்வான். இங்ஙனம் திருவருளுக்குப் பாத்திரமாகும் எமது மனம் ஒரு புதிய பரிமாணத்தில் இயங்கும். அதனால் இருள்சேர் இருவினை நீங்கி விடுதலையாகிய மோட்சம் அடைதல் திண்ணம். இதனை நல்கக்கூடிய செம்பொருள் காணும் சிவராத்திரி நோன்பை உரிய முறையில் சரிவர அனுஷ்டிப்போமாக! இயற்கையான இறைபணி நிற்போமாக!

# அருள் நல்கும் ஆறுமுகத்தை இருள் நீக்குமாறு வேண்டும் கந்தசஷ்டி

ஐப்பசி மாதத்தில் அருட்சக்தியை வேண்டி ஒன்பது நாட்கள் வழிபடுகிறோம். கார்த்திகை மாதத்தில் ஆறுமுகனை நோக்கி அருந்தவம் புரிந்து வேண்டிய வேண்டியாங்கெய்த முயற்சிக்கிறோம். ஐந்து முகம் உடைய சிவனின் அருள் நோக்குச் சாதாரணமாக நான்கு திசைகளையும் மேலேயும்தான் குறித்துள்ளது. கீழேயுள்ள பூவுலகைப் பார்த்தல் குறைவாகும். எனினும் துன்புற்றுப் பாதுகாப்பு வேண்டும் பக்தர்களுடைய புனிதமான உயர்ந்த தவத்துக்கு இணங்கி, அவன் அருள் அதோ முகமாகக் காட்சியளித்துக் காக்கும். இந்த அதோ முகம் கீழ்நோக்கி இருப்பதாகும். இதுவே ஆறுமுகமாக எம்மைக் காத்தருளச் சரவணப் பொய்கையாகி எமது இதயத்தில் என்றும் உதிக்கக் கூடியதாகும்.

நாம் அடையும் துன்பங்களுக்குக் காரணம் இருள் சேர் இருவினையாகும், இருவினையை நீக்கி ஆள்பவனை நாம் ''குமரன்'', எனக் கும்பிடுகிறோம். 'கு' என்பது இருளாகிய இருவினையையும்



'மரன்' என்பது அழிப்பவனையும் குறிப்பதாகும். குமரனைக் கந்தனெக் கொண்டாடுகிறோம், உயர்ந்தமலைக்கு நாயகனே கந்தனாகும் எனவே கந்தசஷ்டி விரதநாட்களில் நாம் உள்ளுவதெல்லாம், வள்ளுவன் உபதேசித்த எண்ணம் உயர்வு உள்ளுதலாகவே இருத்தல் வேண்டும். அங்ஙனமாயின் நாம் முருகன் என்னும் ஆத்மீக அழகைப் பெறுதல் நிச்சயமாகும்.

இருள் சேர் இருவினை என்பது அறியாமையிற் செய்யப்படும் கருமங்களாகும். அறியாமையும் அகங்காரமும் உருவாகப் பெற்ற மாயையின் புதல்வனே சூரபதுமனாகும். ''நான் — எனது'' என்னும் அழியா வரம் பெற்ற சூரன், தீவினை புரிந்து தேவர்களை வருத்தினான். இங்ஙனம் தீயவை புரிந்த சூரன் கூட குமரவேள் திருமுன் உற்றபோது தூயவனாகித் தொல்கதி அடைந்த வரலாற்றைக் கந்த புராணம் கூறுகிறது.

இது இவ்வாறாக, சூரனளவு தீமை செய்யாத மானுடர் எதற்காக அவனைப் போல இரட்சிக்கப்படாது இருத்தல் வேண்டும்? என்பது கந்தசஷ்டி விரத விசாரணையாகும். இது யாருடைய குறை? குமரனுடைய பாராமுகமா? அல்லது எமது தவ விரதக் குறைபாடா? சூரபதுமனைப் போலத் தவமியற்றி உள்ளோமா? அவன் ஆற்றிய தவத்தில் ஒரு குறைபாடு இருந்தது. அது இருள் சேர் இருவினைக்கு உட்பட்டதாக இருந்ததே தவறாகும். எனினும் அவன் புரிந்த தவப்பேறாகவே முருகனுடைய தூய காட்சியைப் பெற்றான். பெற்ற மாத்திரமே அவன் தனது தவறை உணர்ந்து இருவினை நீக்கி ஆளும் வண்ணம் வேலனை வேண்டினான். வேண்டிய வேண்டியாங்கெய்தினான்.

கந்தபுராணம் இறந்த காலத்தில் நிகழ்ந்த கட்டுக் கதையன்று. அது ஒரு முடிவில்லாத தொடர்கதையாகவே மனித வாழ்க்கையில் உள்ளது. மாயா தேவியின் மைந்தர்களே சூரன், சிங்கன், தாரகன் ஆகிய மூவருமாவர். இவர்கள் மூவரையும் சைவசித்தாந்த ஞானியர் எமது மனதில் எழும் தாமதகுணம், இராசதகுணம், சத்துவகுணம் என வர்ணிக்கின்றனர். இம்மூன்று குணங்களுள் ஒன்று மேலோங்கும் போது மற்றவை அடங்கி நிற்கும். மூத்தவனாகிய தாமதகுணமுடைய சூரனே எந்நேரமும் மேலெழுந்து நிற்பதை நாம் எமது மன இயக்கத்தை அவதானித்துக் காணலாம். கந்தபுராணத்தில் இளையவர்களாகிய சிங்கனும், தாரகனும், (இராசத குணமும், சத்துவ குணமும்) இடையிடையே மேலெழுந்து காணப்படுகின்றனர். ஆனால் அவர்கள் சூரனுடைய அதட்டலுக்கு அடங்குபவராகவே உள்ளனர்.

மேலும், இந்த மூன்று குணங்களும் எமது மன இயக்கத்தின் மூன்று நிலைகளே அன்றி இவைகள் மெய்யான பொருள்கள் அல்ல கந்தசஷ்டி விரதமூலம் இந்தப் பொய்யான பொருளின் தன்மையை வழுவற விளக்கம் பெறுவோமாயின், நாம் திருமுருகனை மாசறு காட்சியாகப் பெறுதல் திண்ணமாகும். கந்தசஷ்டி விரதத்தின் இலட்சியம் இந்த முக்குணங்களையும் நீக்குவதாக அமைதல் வேண்டும் இம் மூன்று குணங்களும் எமது மனக் கற்பனையில் வளர்வனவாகும். மனவிருத்தி அற்ற இடத்தே இவை சுயமாகவே அடங்கும் சுபாவமுடையனவாகும். இவ்வுண்மையைத் திருமூலர் :—

கற்பனை யற்றுக் கனல்வழியே சென்று
சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் தகும்தண் சமாதியே''

என விளக்குகிறார்.

கற்பனையற்ற மௌன சமாதி நிலை அடைதலே முக்குணங்களையும் நீக்குவதற்கு உரிய நெறியாகும். இதை இன்னொரு வகையில் திருவள்ளுவர் ''சமன் செய்து சீர்தூக்கி நடுவு நிலையில் நின்று சரியான நிறையைக் காட்டும் த்ராசுக்கோல் போல எமது மனம் இருவினைச் செயற்பாடுகளாகிய நன்மை தீமை — பாவ புண்ணியம் — அறிவு அறியாமை — எனும் எதையும் சாராது — ஒருபாற் கோடாது — நடுவு நிலையில் நிற்றலே சமாதி எனத் தெளிவுபடுத்துகிறார். மனம் தனது நிறையில் சமநிலை அடைதலே சமாதியாகும். சமாதி நிலை அடைய விரும்புவோர் மூச்சைப் பிடித்துத் திணற வேண்டியதில்லை. சமாதி நிலை அடையும் போது தான் மனிதன் தனது அசுரத்தன்மையிலிருந்தும் விடுதலை பெறுதல் இயலும். புறத்தேயுள்ள எதிரிகளை அழிப்பதனால் மனிதனுக்கு மோட்சம் கிடைப்பதில்லை,

ஆத்ம நாயகனாகிய முருகன் உலகுக்குப் பொதுவானவன். எல்லோருக்கும் சொந்தமானவன் அவனை ஊரன் என்றும், அவனுடைய திருவருளை ஊருணி என்றும் தமிழ் உலகம் கூறும். இதில் யாவரும் மூழ்கி, ஊறித் திளைக்கலாம். தடையில்லை. இருவருளில் ஏகபோக உரிமை எவருக்கும் இல்லை. காதல் என்னும் அன்புநிலை, கற்பென்னும் அருள்நிலைக்கு உயரும் சிறப்பைத் தமிழ் உலகம் கண்டது போல வேறெந்த உலகமும் காணவில்லை. இவ்வுண்மையைக் கச்சியப்ப சுவாமிகள் வள்ளிநாயகி மூலமும் தெய்வநாயகி மூலமும் எடுத்துக்காட்டுகின்றார்.



களவியற்கு உட்பட்ட வள்ளிநாயகியின் மனம் காதலில் ஊசலாடுகிறது. ஐம்புலவேடருடன் வாழ்வதா? முருகனுக்குப் பின் செல்வதா? எனக் காற்றாடி போல அவளுடைய மனம் ஆடுகிறது; முருகனையே தொடர்வதெனக் காதல் மீதூர முடிவு செய்கிறாள்: இதற்காக ஐந்து நாட்கள் விரதமிருந்து, ஐந்து இந்திரியங்களையும் ஆறாவது நாள் விசேட தவமிருந்து மனத்தையும் துறக்கிறாள்: களவியலை இறுகப் பற்றி முருகனை அடைகிறாள்.

இப்பொழுது அவளுடைய மனம் ஊசலாடவில்லை. எனினும் சக்களத்தி உணர்ச்சி நீங்கவில்லை. ஊரனாகிய நாயகனைத் தனக்கே தனியுரிமை உடையவனாக்கிக் கொண்டாள். பிறபெண்கள் அவனிடம் காதல் கொள்ளுவதைக் கண்டு பொறுமைப்பட்டாள்; இது களவியலின் இயற்கையான குறைபாடு என்பதை அவள் உணரவில்லை.

காந்தர்வ விவாகத்துக்குப் பின் முருகன், வள்ளியை அழைத்துக் கொண்டு இந்திரலோகம் சென்றான். அங்கே இருவரும் தெய்வநாயகியைச் சந்திக்கிறார்கள். இக்கட்டத்திலேதான் தமிழ் உலகின் ஒப்பற்ற நாகரிகத்தை ஆத்மீகத் துறையில் கச்சியப்பர் எடுத்துக் காட்டுகிறார். களவியலில் நிற்கும் வள்ளிநாயகியுடைய மனம் உளவியல் ரீதியில் மாற்றாளைக் கண்டு எரிவு கொள்கிறது. இதற்குப் பதிலாகக் கற்பியலில் நிற்கும் தெய்வநாயகியுடைய இதயம் தெய்வீகரீதியில் பரிவு கொள்கிறது. அவளுடைய தூய இதயத்திலிருந்து அப்பொழுது வெளிவந்து புனிதமான சொற்கள் இதோ:

''எங்கொருதமியளாகி
இருந்திடு வேனுக்கு இன்றோர்
பாங்கிவந் துற்றவாறு நன்று''

எனப் பரிவு கூர்ந்தாள். இங்ஙனம் தெய்வநாயகி அவர்களை வரவேற்றாள். எரிவுக்குப் பதிலாக மாற்றாளைக் கண்டபோதும் கூடப் பரிவு காட்டி வரவேற்ற தெய்வநாயகியின் கற்புப் பண்பைக் கண்டு வள்ளிநாயகி தலைகுனிந்தாள். சக ஆத்மாவாகிய தெய்வநாயகியை அவள் கட்டித் தழுவி ''அக்கா! உன்னுடைய கற்பின் மகிமையை இன்று நேரிற்கண்டு உள்ளம் உருகுகிறேன். மனமாற்றம் அடைந்து உனது உத்தம கற்பின் பாங்கியாகும் பாக்கியத்தைப் பெற்றேன். ஊரனாகிய முருகநாயகன் ஊருக்குப் பொதுவான ஊருணியாக விளங்குவதை உணர்கிறேன். எனவே கந்தன் கருணை ஊற்றில் ஜீவாத்மாக்கள் யாவரும் மூழ்கி மனமாசு கழுவப் பெற்றுப் பேரின்பம் அடையட்டும்'' எனப் பிரார்த்தித்தாள். எமது கந்தசஷ்டிப் பிரார்த்தனையும் தமிழ் உலகம் கண்ட புனிதமான கற்பியலாகட்டும்!

''நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' — திருமூலர்

# நவராத்திரியின் விடிவு விஜயதசமியாகும்

ஒன்றன் முடிபிலே தான் மற்றது ஆரம்பமாகிறது. இந்த நியதியை அனுசரித்தே இந்துக்களிடையே நவராத்திரி பூசை கொண்டாடப்படுகிறது. இதை இன்னொரு வகையில் விளங்குவதாயின், திரோதன சக்தியின் முடிபிலேதான் சுத்த சக்தி ஆரம்பமாகிறதெனலாம். திரோதான சக்தி மனோ இயக்கத்தினால் பிரிவுற்று இச்சா சக்தியென்றும் ஞானா சக்தியென்றும். கிரியா சக்தியென்றும் புலப்படுகிறது. இம் மூன்று சக்திகளும் மனிதனிடம் சிந்தனை, சொல், செயல் என உளவியல் ரீதியில் உருவாகின்றன. இங்ஙனம் பிரிவினைக்கு உட்பட்டு இயங்குவதனால் மனிதனுடைய சக்தி வீணில் விரயமாகிறது. வீணில் விரயமாகிற சக்தியைச் சேமித்து ஒன்று படுத்தி வெற்றி காண்பதே விஜயமாகும். இந்த வெற்றியைத் தசமியாகிய பத்து குறிக்கின்றது. எனவே விஜய தசமி என்பது தமிழில் வெற்றிக்குரிய பத்தாகும். இது இருள் நீங்கி இன்பம் பயப்பதாகும்.

கணித உலகிலே பூச்சியமாகிய சைவரைக் கண்டுபிடித்த பொற்காலம் சிறந்ததாகும். சமயதத்துவ உலகிலே சூனியமாகிய பாழைக்கண்டுபிடித்த யுகம் மிகவும் உயர்ந்ததாகும். பூச்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றைய கணித உலகம் கணனி என்னும் கொம்பியூட்டர் புரட்சியுகத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் சூனியத்தை அடிப்படையாகக் கொண்டு சமய தத்துவ உலகம் முற்போக்கு அடையாது பிற்போக்கு வாதமாக அமைந்திருந்தல் எமது துரதிஷ்டமாகும். தமிழ் நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலர் என்னும் சிவஞானியர், சூனியத்தைக் கண்டு பிடித்து அதற்குப் பாழ் எனப் பெயரிட்டார். இதை அடிப்படையாகக் கொண்டு சக்தியாகிய அம்மன் பூசையை எப்படிப் புரிதல் வேண்டும் என்பதை உபதேசம் செய்துள்ளார். அதைக் கவனியுங்கள் :-

பற்றுவிட்டு, அம்மனைப் பாழ்பட நோக்கினால்
மொட்டுக் கட்டுவிட்டு மலர்தல் போலக்காணலாமே!



திருமூலர் நம் யாவரையும் சக்தியைப் பற்றின்றிப் பாழ்பட நோக்கும்படி வேண்டுகிறார். நமக்கோ பாழ்பட நோக்குதல் எவ்வாறு ஆகும்? என்பது சரிவர விளங்காது வில்லங்கம் ஏற்படுகிறது. இதன் உண்மை விளக்கத்தை வழுவறக் கூறிச் சாதனை செய்வதற்கு வழிகாட்டும் ஆசிரியர்களைக் காணுதல் அரிதாக உள்ளது. இதற்கு ஏற்றவகையில் சாதனா முறைகளை எடுத்து விளக்கும் நூல்களும் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை.

சூனியம், பாழ், சிற்றம்பலம், சிதம்பரம், தில்லையம்பலம் என்னும் பதங்கள் யாவும் பரம்பொருளாகிய பேரம்பலம் பராசக்தியுடன் கூடிப் பரவெளியாக வியாபித்து நிற்கும் நிலையை உணர்த்துவனவாகும். இதையே சுத்த சக்தி நிலையெனச் சைவ சித்தாந்தம் தெளிவுபடுத்துகிறது. மனிதனிடம் இந்த வியாபகமான சுத்த சக்தி என்ன காரணத்தினால் விளங்கித் தோன்றவில்லை? என்பதும், அதை நன்கு விளங்கித் தோன்றி இயற்கையாகவே செயற்படுவதற்கு எதை எப்படிச் செய்தல் வேண்டும்? என்பதும் தான் நவராத்திரி பூசை நாட்களில் நாம் புரிய வேண்டிய ஆய்வும் சாதனையுமாகும். இவற்றையெல்லாம் இள முருகன் தந்தையாகிய சிவனுக்கு உபதேசம் செய்வது போல, அருணகிரிநாதர் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளார் அவர் போதித்தபடி '' வெறும் பாழைப் பெற்ற வெறும் தனியைத் தெளிய '' இயலாது நாம் கந்தர் அலங்காரப் பாட்டில் மட்டும் களிப்படைகிறோம். உண்மையான மனோலயம் - திரோதான சக்தி இறப்பைப் பெற முடியாது புறப்பூசையுடன் திருப்தி அடைகிறோம். புறப்பூசைகளால் நாம் சிவ காரியங்களிற் சித்தியடைதல் கூடும். ஆனால் அவைகள் இருளாகிய அஞ்ஞானத்தை நீக்கி அருள் ஆகிய பேரின்பத்தை நல்க மாட்டா.

கணக்கியலில் பூச்சியத்துக்குத் தனி மதிப்பில்லை. அது ஒன்றாகிய இலக்கத்தைச் சார்ந்து அதன் பின்பு வரும் போது தான் அதற்கு மதிப்பு உண்டாகிறது. அது ஒன்றுக்கு முன்பு இடப்பட்டாலும் ( 01 ) மதிப்புப் பெறுவதில்லை. சமய தத்துவ இயலிலும் இங்ஙனமே சூனியத்துக்குத் தனி மதிப்பில்லை. அது பரம் பொருளைச் சார்ந்து அதன்பின்பு வரும்போதுதான் அதற்கு மதிப்பு ஏற்படுகிறது. சூனியத்தைப் பரம் பொருளுக்கு முன்பு வைத்தாலும் அதற்கு எவ்வித மதிப்பும் இல்லை. இவ்வுண்மையைச் சமய சாதகர்கள் நன்கு தெளிந்து அனுசரிக்க வேண்டும் என்ற நோக்குடன் மெய்கண்ட தேவர் தமது சிவஞான போதத்தின் சாதனை இயலில்


156912

முதலாவது முக்கிய வாக்கியமாக "யாவையும் சூனியம் சத்தெதிர்" என அமைத்து எமக்கு வழிகாட்டியுள்ளார். பரம் பொருளுக்கு முன்பு இடப்படும் பொருள்கள் யாவும் விளங்கித் தோன்றா என்பதே இதன் உண்மை விளக்கமாகும். இதற்கு முரணான வகையில் பரம் பொருளுக்கு முன்பு பல மயப் பொருட்களைப் படைத்த வேள்வி யாக பூசைகள் செய்து பரம் பொருளைத் திருப்தி செய்யலாம் எனக் கருதும் ஜைமினி முனிவரின் பூர்வ மீமாம்சைக்கொள்கை களைப் பிராமண உத்தமரான அருள்நந்தி சிவாச்சாரியார் தமது சிவஞான சித்தியாரின் பரப்பக்கத்தில் கண்டித்து மறுத்துள்ளார்.

நவராத்திரிப் பூசை திரோதான சக்தியை நீக்கிச் சுத்த சக்தியை நிலைநாட்டுவதற்கு ஆதாரமாக அமைதல் வேண்டும் "திரோதம்" என்னும் வடசொல், மறைத்தலாகிய தொழிலைத் தமிழிற் குறிப் பதாகும். ஆத்மாவிடம் சுத்த சக்தி பொலிந்து ஒளிபெறாது மறைந் திருப்பது திரோதான சக்தியாகும். இச்சக்திவழியாகப் பிறப்பது பாசஞானம் அல்லது சுட்டறிவாகும். சுத்த சக்தி மூலம் சுயமாக உள்ளிருந்து மலர்வது பதிஞானம் அல்லது மெய்யுணர்தலாகும். பாசஞானமும் பதிஞானமும் மனிதனிடம் ஒரே வேளையில் ஒருங்கே விளங்கித்தோன்றாதென்பது சைவ சித்தாந்த உண்மை விளக்க மாகும். பதிஞானம் பூரணமானது. வியாபகம் உடையது. அதை எவரும் பகுதி பகுதியாகச் சுட்டறிவைப் போலச் சம்பாதித்து மூளையிற் பதிவு செய்து ஞாபக முத்திரைகளாக மீட்டு எடுத்தல் முடியாது. சுட்டறிவு தொழில் நுட்பக்கல்விக்கு உதவுமேயன்றி மனஇந்திரியங்களுக்கு எட்டாத புதியனவற்றைக் கண்டுபிடிப்பதற்கு ஆதாரமாகாதென்பதை விஞ்ஞான மேதைகளும் மெய்ஞ்ஞானியார் களும் திட்டவட்டமாக அனுபவ வாயிலாகக் கூறுகின்றனர்.

இவற்றையெல்லாம் வழுவறத் தெளிந்த திருவள்ளுவர். சுட்டறிவைப் பெறும் முறைகளைக் கல்வி கேள்வி அறிவுடைமை யாகிய அதிகாரங்களில் விளக்கியதோடு அமையாது, இவற்றுக்குப் புறம்பான மெய்யுணர்தல் என்னும் தனி அதிகாரத்தை வகுத்து விசேடமாகப் பூரணமான மெய்ஞ்ஞானம் சுட்டறிவுச் சார்பற்ற நிலையில் மாசறு காட்சியாகவே பெறப்படும் எனச் சந்தேகத்துக்கு இடமின்றி விளங்கியுள்ளார். இதற்கு அரண் செய்வது போல நவீன விஞ்ஞான உளவியல் முழு உருவ அமைப்புக் கொள்கையா ளர்கள் பகுதிகளை ஒன்று சேர்ப்பதனால் பூரணத்துவம் உண்டா வதில்லை என்றும் அதை உணர்வதற்கு விழிப்புணர்வுடன் கூடிய உள்ளொளியைக் கொண்ட முழுமையான புலப்பாடே தேவை யென்றும் ஆய்ந்து கண்டு பிடித்தனர். இவ்வுண்மை விளக்கத்துக்கு அமையவே பண்டைத் தமிழர் சக்தி வழிபாட்டை ஆக்கினர்.



உலர்ககை தேய்ந்து உளிப்பிடியாகியது போல சக்திவழிபாடு இன்று இலட்சியச் சிதைவுக்கு உட்பட்டுள்ளது. உயர்ந்த இலட்சியங்களும் காலக்கிரமத்தில் தேய்ந்து போதல் இயற்கை நியதியாகும்.

தில்லைவெளியில் திருநடனம் புரியும் சிவசக்தி எமது இதயத் திலும் இயங்கவேண்டும் என்பதே சக்தி வழிபாட்டின் குறிக்கோ ளாகும். தட்டு முட்டுச் சாமான்கள் நிறைந்த அறையுள் தங்கு தடையின்றி இசை நடனம் நடாத்துதல் எங்ஙனம்? எமது இதயத்தில் சார்புக் கொள்கைகளும் இருமை வகை எண்ணங் களும் நிறைந்து எவ்விதவெளியும் இன்றி இருக்கும்போது அங்கே சிவசக்தி நடனத்துக்கு இடமேது? எனவே எமது இதயத்தைக் காலி செய்து சிற்றம்பல வெளியாக்கினால் அங்கே பேரம்பலவரின் பெருங்கூத்து நிகழ்தல் நிச்சயமாகும். இதற்குரிய உத்தமசாதனை அந்தர்யாக பூசையோடு கூடிய மோனசமாதி பெறுதலாகும். பெண்மையின் பெருமை கருத்தரித்தலும் தாய்மை நிலை அடைத லுமாகும். கருப்பையில் அழுக்கோ, அன்னிய பொருளோ இருப்பின் அங்கு கருத்தரித்தல் நிகழாது. இது விஞ்ஞானம் கண்ட உண்மை. இதே போலத் திரோதான சக்தி சம்பந்தமான சுட்டறிவு எமது இதயத்திலிருக்கும்போது, சுத்த சக்தியின் தூயகருத்துக்கள் அங்கு தரிக்கமாட்டாதென்பது சைவமெய்ஞ்ஞானம் கண்ட பேருண்மை யாகும். தாய்க்குத் தாயான கலைமகள் எமது இதயத்தில் என்றும் கருவுற்றுத் தூய உருப்பளிங்கு போலப் பிரகாசித்தல் வேண்டும் என்பதே எமது விஜயதசமிப் பிரார்த்தனையாகும். இருளாகிய அஞ்ஞானத்தையும் இருவினையாகிய கருமத்தையும் நீக்குதலே எமது நவராத்திரிச் சாதனை ஆகட்டும்.

**பண்டைய சீனரின் பண்பாடு!**

## இயற்கையோடு இசைந்து வாழும் யதார்த்தமான வாழ்க்கை

சீனப் பண்பாடு தனித்துவம் வாய்ந்ததென மேலைநாட்டு விஞ் ஞானிகளும், தத்துவ ஞானிகளும் ஆய்ந்து தெளிந்து உரைக்கின் றனர். நவீன அமெரிக்கத் தத்துவஞானி வால்ட் விற்மன் என் பவருடைய கொள்கைகள் சீனப்பண்பாட்டைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. கலிபோர்னியா சர்வகலாசாலைப் பேராசிரியர் பிறிட் ஜோவ் கப்றா என்பவருடைய பௌதிகவியல் உயர் சக்தி ஆய்வு களுக்கு ஆதாரமாகச் சீனத் தத்துவஞானி லாஷேயின் கொள் கைகள் உள்ளன என அவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இயற்கையோடு இசைந்து வாழும் யதார்த்தமான வாழ்க்கை நெறியையே சீனப்பண்பாடு எடுத்துக்காட்டுகிறது.

இயற்கை நெறியை பண்படுத்துதலே பண்பாடென அவர்கள் கருதினர். மனிதனின் இன்பியல் வாழ்க்கையை இயற்கை நியதிக்கு அமைய வகுத்து அனுசரிப்பதிலேதான் தங்கியுள்ளது. ஒருவன் கோடீஸ்வரனாக இருந்த போதும் அவன் இயற்கையுடன் இசைந்து இயற்கை நியதிக்கு அமைய வாழாதுவிடின் அவனுடைய வாழ்க்கையை அவன் ஆனந்தமாக அனுபவிக்க இயலாதென்பதே சீனதத்துவ ஞானமாகும். இதைத் திருவள்ளுவர் 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' எனத் தெளிவுபடுத்துகிறார். இதன் உண்மை விளக்கத்தைச் சரிவர உணராத உரையாசிரியர்கள் இரு வினைக்கு விசேடமாகப் பழைய பிராரத்த வினைக்கே முதன்மை கொடுத்து வலியுறுத்தி மக்களைத்திசை திருப்பி ஊழுக்கு அடிமையாக்குகின்றனர். இவர்கள் இயற்கைத் தர்மத்துக்கும் மனித கர்மத்துக்கும் உள்ள வேறுபாட்டைச் சரிவரத் தெளியாது தாமும் இடர்ப்பட்டுப் பிறரையும் இடர்ப்படத் தூண்டுவதையே நாம் அவதானிக்கலாம்.

மனிதன் ஆற்றுகின்ற கர்மங்கள் இயற்கை நியதிக்கு உட்பட்டதாயின் அவன் துன்பப்பட வேண்டிய அமைப்பு எதுவுமில்லை. ஆனால் அவன் அறியாமையினால் இயற்கை நியதிக்கு மாறாக தர்மத்துக்கு எதிராக முன்பு ஆற்றிய கர்மங்களின் தீய பலன்களைக் கட்டாயமாக அனுபவித்தே ஆகுதல் வேண்டும். பழைய கர்ம பலனுக்கு மனிதனிடைய எதிர்காலத்தை நிச்சயித்து நெறிப்படுத்தும் ஆற்றல் இல்லை. மனித கர்மம் என்பது தர்மத்தின் ஒரு கூறேயன்றிப் பூரணம் ஆகாது. அதுவும் செயற்கை நெறி நின்று மனோவிகாரங்களால் தூண்டப்பட்டு ஆற்றப்படும் கர்மமே ஊழ் எனப்படும். இதற்கு அடிமைப்பட்டோரை மேலைநாட்டு தத்துவஞானிகள் 'பேட்டலிட்' எனவும் அடிமைப்படும் இயல்பை பேட்டலிசம் எனவும் கூறுவர்.

இப்பண்பாடு இந்துக்களிடமும், புத்த மதத்தவர்களிடமும் சற்று அதிகமாகவே காணப்படுகிறது. சீனப்பண்பாட்டில் செயற்கை நெறிக் கர்மங்கள் வலியுறுத்தப்படவில்லை. நாம் நோக்க வேண்டிய பிரச்சினை வாழ்க்கையின் நோக்கம் என்ன? என்பதல்ல. எமக்கு இயற்கையாலோ அல்லது இறைவனாலோ கொடுக்கப்பட்ட வாழ்க்கையில் நாம் யாது செய்தல் வேண்டும்? எப்படி இன்பமாக வாழுதல் வேண்டும் என்பதே உண்மையான பிரச்சினையாகும். வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி கற்பனை செய்து நரகம் என்றும் சுவர்க்கம் என்றும் விலகி ஓடுதல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழியன்று. சமயத்தின் அக்கறை சுவர்க்கத்தைப் பற்றிக் கற்பனை செய்து அதற்கேற்ற செயற்கைக் கர்மங்களைச் செய்வதில் மட்டும் தனிய இருப்பின் மெய்யான சந்தோஷம் கிடைத்



தல் அரிதாகும். எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைகளை விட்டு நிகழ் காலத்தில் யதார்த்தமான இன்பியல் வாழ்க்கை வாழ்வதே சீனப் பண்பாடாகும். உலகாயதமும், ஆத்மீகமும், இயற்கையும் இசைந்து ஒன்று பட்டு வாழ்வதே அவர்களுடைய பண்பாடாகும். இயற்கையின் இருவேறு தன்மைகளை ஆய்ந்து வழி காட்டிய வள்ளுவன் பண்பாடும் இத்தகையதாகும். சீனர் சரித்திர காலத்துக்கு முன்பே திருமூலர் இதனைச் 'சும்மா இருக்கும் சுகம்' என விளக்கியுள்ளார். இப்பண்பாடு மனப் பிரயத்தனம் குறைந்து, ஆத்மீகப்பிரயத்தனம் இவ்வுலகிலேயே கூடுதலாகும். இதை மறை பொருளாகத் திருமூலர், 'சோம்பல் இருப்பது சுத்த வெளியிலே' என அறிவுறுத்துகிறார்.

சோம்பலைப் பற்றிச் சீனக்கவிஞன் போயூச்சியென் ''சோம்பலின் மாளிகை'' என்னும் தலைப்பில் இயற்றிய கவிதையை ஆங்கிலத்திலிருந்து தமிழ் ஆக்கஞ் செய்து இதோ தருகிறோம். சிந்தனையாளருக்கு நல் விருந்தாகவும் கர்மவீரர்களுக்கு உத்தம வழி காட்டியாகவும் இது அமைதல் கூடும். இதிலிருந்து சீனப்பண்பாட்டை யூகிக்கலாம்.

இலக்கிய நூல்களை வாசிக்க நான் மிகவும் சோம்பல் அடைகின்றேன். யாதெனின் வாழ்க்கை நெறி நூல்களில் வதிவதில்லை. சூத்திரங்களைப் பார்க்க நான் மிகவும் சோம்பலடைகின்றேன். யாதெனின் வாழ்க்கைக் காட்சி சூத்திரங்களிலும் ஆழமாகும். வாழ்க்கை நெறியின் சாரம் தெளிவான குளிர்ந்த வெறுமையில் உள்ளது. மூடனைப் போல முழுநாளும் இருப்பதேயல்லால் வெறுமையாது? கவிதைகளைப் பயில நான் மிகவும் சோம்பல் அடைகின்றேன். யாதெனின் இசைப்பதை நிறுத்தும் போது, கவிதைகள் மறைந்து விடுகின்றன. வீணை மீட்பதில் நான் மிகவும் சோம்பல் அடைகின்றேன். யாதெனின் சங்கீதம் பிறக்கும் நரம்பிலேயே இறந்து விடுகிறது. பழ மதுரசம் பருகுவதில் நான் மிகவும் சோம்பல் அடைகிறேன். யாதெனின் குடிகாரனின் கனவுக்கு அப்பால் நதிகளும் வாவிகளும் உள்ளன.

சதுரங்க விளையாட்டில் நான் மிகவும் சோம்பல் அடைகிறேன். யாதெனின் அதில் வரும் காலாட்களை விட வேறு பணயங்கள் உள்ளன. மலைகளையும் அருவிகளையும் நோக்க நான் மிகவும் சோம்பலடைகிறேன். யாதெனின் எனது இதயச் சுவர்களிலே சித்திரம் உள்ளது. சந்திரனுக்கும் தென்றலுக்கும் முகம் கொடுக்க நான் மிகவும் சோம்பலடைகின்றேன். யாதெனின் என்னுள்ளேயே அமரர்களின் தீவு உள்ளது. உலகக் காரியங்களைக்

கவனிக்க நான் மிகவும் சோம்பல் அடைகின்றேன். யாதெனின் என் அகத்திலேயே எனது குடிசையும் சேமிப்பும் உள்ளன. மாறும் காலங்களை அவதானிக்க நான் மிகவும் சோம்பலடைகிறேன். யாதெனின் தெய்வீக ஊர்வலங்கள் என்னுள்ளே உள்ளன. பாலை மரங்களும் பர்வதங்களும் காலப்போக்கில் உழுக்கக்கூடும். ஆனால் நான் நானாகவே என்றும் இயற்கையாக இருப்பேன். இதை நான் சோம்பலின மாளிகை என்பது பொருத்தமல்லவா?

விவேகம் உள்ளோர் சுறுசுறுப்பாக இருப்பதில்லை. சுறுசுறுப்பாக ஓயாது இருப்போர் விவேகிகளாவதில்லை. விவேகசூடாமணி என்பவன் ஓய்ந்து உலாவுபவனாகும். கண்ணாடிக் கூண்டிலேயுள்ள நீரில் அழகிய மீன்கள் சுறுசுறுப்பு ஓய்வு நிலையில் வாழும் அற்புதத்தை அவதானித்தால் சோம்பல் மாளிகையின் உண்மை ஓரளவுபுலப்படும். வசிக்கும் அறையில் காலி இடம் இல்லையாயின் அங்கு வாழ்தல் சங்கடமாகும். அதைப் போலச் சிந்திக்கும் மனத்தில் மௌனமும் வெளியும் இல்லையாயின் அங்கு ஆனந்தம் நிலவுதல் சங்கடமாகும். சத்சித்ஆனந்தம் வேண்டுமாயின தில்லை வெளியாக இதயத்தை அமைத்தல சீனர்களுக்கும் சைவர்களுக்கும் ஒத்த பண்பாடாகும். மும்மூர்த்திகளான புத்தர், கொன்பியூசியஸ், லாவோ (தோ) என்பவர்களின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதே சீனப்பண்பாடாகும். இயற்கைநெறிஎன்பது மனப் பிரயத்தனமற்ற ஆத்மீகச் சுய கட்டுப்பாடாகும். செயற்கையான மன இயந்திரக் கட்டுப்பாடு உண்மையான பண்பாடல்ல என்பதை நாம் தெரிந்து கொள்வோமாக. இன்றைய சீனர்களும் இதை அனுசரிக்கின்றனர்.



"இல்லாதது தோன்றாது, உள்ளது அழியாது"

# விஞ்ஞான மேதை ஐன்ஸ்ரின் கூறிய சைவ சித்தாந்த உண்மைகள்!

நவீன விஞ்ஞான மேதையான பௌதிக பேராசிரியா கலாநிதி ஐன்ஸ்ரின் அவர்கள் ''நான் காணும் உலகம்'' என்னும் ஆய்வு நூலில் பல தத்துவஞான உண்மைகளைத் தந்துள்ளார். அவை சைவ சித்தாந்த உண்மை விளக்கத்துடன் பொருந்துவதாகப் புலப்படுகின்றன.

''சத்தியின் பெருக்கம் சடமும் சடத்தின் பெருக்கம் சக்தியுமாகும்'' என்னும் உண்மை சைவ சித்தாந்தத்துடன் மிகவும் இசைந்துள்ளது.

சத்காரியவாதம் சுத்தமாயையில் இருந்து ஆரம்பிக்கிறது. அது மன இந்திரியங்களுக்குப் புலப்படாத நுண்ணியதாகும். அச் சத்தியின் பெருக்கமே சட உலகமாகக் காட்சியளிக்கிறது.

இக் காட்சி ஒரு வெறும் தோற்றமேயன்றி உண்மையல்ல; மெய்யாக உள்ளது இறை அருளுடன் கூடிய சுத்த மாயையின் சக்தியேயாகும். சிவனுடைய முத் தொழில்கள் தோன்றுவதும் நிலைப்பதுவும் மறைத்தல் போலவும் புலப்படுகிறது. சட உலகமென நிரந்தரமான பொருள் எதுவுமில்லை. இதை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவாகமங்கள் வெளியிட்டுள்ளன.

''அத்தன் அருளின் விளையாட்டிடம் சடம்'' என்பது திருமந்திரம்.

பேராசிரியர் ஐன்ஸ்ரின் கொள்கைக்கும் சத்காரியவாதத்துக்கும் உள்ள ஒற்றுமையை மேலும் சொற்பம் விரிவாகப் புரிந்து கொள்வோம். இல்லாதது தோன்றாது; உள்ளது அழியாதென்பது சத்காரியவாதம். இதிலிருந்து அளவை இலக்கணப் பிரகாரம் நாம் அனுமானிக்கக் கூடியது யாதெனின், சக்திதான் உள்ளதென்பதும் சடப்பொருள்கள் ஒரு போலித் தோற்றம் என்பதுமாகும்.

மாயையைப் பொய்யெனப் புறக்கணிப்பது சைவசித்தாந்தமல்ல. சடசக்தியைப் பொய்யெனக் கழிப்பது விஞ்ஞானமல்ல; இவ்விடத்தில் சைவ மெய்ஞ்ஞானமும் பௌதிக விஞ்ஞானமும் ஒருமித்துப் பரிணமிப்பதை உணர்ந்து உவகை கொள்கிறோம்;

விஞ்ஞான ஆய்வு முறைப்படி புதியனவற்றைக் கண்டு பிடித்தல் எப்படி? என்பதை விளக்கும் ஐன்ஸ்ரின் கூற்றைக் கவனியுங்கள். ''விஞ்ஞான ஆய்வுக்கு உந்துகோலாகவும், பிரதான பொறியாகவும் உள்ளது பராகாச அனுபவமாகும். அளவு கடந்த நிகரற்ற சக்தியைப் பணிந்து பாராட்டுவதிலேயே எனது சமயம் தங்கியுள்ளது.

கடவுளைப் பற்றிய எனது கொள்கையானது புரிந்து கொள்ள இயலாத இந்த உலகில் பரிணமித்து விளங்கும் வியர்சன சக்தியின் சிறு விபரங்களிலும் கூட நான் கொண்ட நம்பிக்கையாகும்.

இங்கே ஐன்ஸ்ரின் குறிப்பிடும் பராகாச அனுபவம் சுட்டறிவுக்கு அப்பாற்பட்டதாகும். வியாபக அறிவுக்கு உட்பட்டதாகும், சுட்டறிவினால் மனதுக்குப் புதிதான பூரணமான சக்தியத்தைக் கண்டு பிடிக்க இயலாதென்பது சிவஞான விளக்கமாகும். இங்கு சிவஞானமும் விஞ்ஞானமும் சந்திப்பதைக் கண்டு களிக்கிறோம்.

மேற்கொண்டு ஐன்ஸ்ரின் கண்டு பிடித்த சார்புக் கொள்கையைப் பற்றிச் சைவ சித்தாந்த அணுகு முறையில் நோக்குவோம். எந்த ஒரு புலப்பாட்டையும் சார்ந்து பாராது அதற்கு அப்பாலுள்ள நடுவு நிலையில் இருந்து உள்ளதை உள்ளவாறே விழிப்புணர்வுடன் அவதானித்தாலே அதன் உண்மை புலப்படும் என்பது சைவ சித்தாந்தத்துணிபாகும். ஐன்ஸ்ரின் அவர்களும் இத்தகையதோர் அணுகு முறையைக் கொண்டே புதிய சார்புக் கொள்கையைக் கண்டு பிடித்தார்.

அணுவைப் பிளந்து அதனுள்ளிருக்கும் இயங்கியும் இயங்காதும் தோன்றும் சக்திகளைக் கூர்மையாகக் கவனித்தார். என்ன ஆச்சரியம்? இயங்கும் சக்தியைக் கூர்ந்து ஆயும் போது அணு இயங்குவது போலத் தெரிகிறது. அதன் இயங்காத சக்தியைச் சார்ந்து நோக்கும் போது அது இயங்காதது போலப் புலப்படுகிறது.

அது பார்க்கிறவனின் சார்புநிலைப் பார்வையில் தங்கியுள்ளதென்பதை உணர்ந்தார். சார்புநிலை கெட்டற்றான் அணு இயங்கியும் இயங்காதும் உள்ளதென்னும் உண்மை புரியுமெனப் பகன்றார்.

அத்துவிதமான சிவசக்தியைத் தியான தாரணை சமாதி மூலம் சார்பற்ற நிலையில் அவதானித்த சிவஞானிகள் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே அது இயங்கும் பராசக்தியாகவும், இயங்காத பரம் பொருளாகவும் உள்ளதைக் கண்டுபிடித்தனர். இந்த உண்மையைக்



காணும் நுண்ணிய சார்பற்ற அறிவைத் தெய்வீகத் திருவள்ளுவர் செம்பொருள் காணும் (செறிவு) அறிவென மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அத்துடன் நில்லாது, மனித சமுதாயம் அனுபவிக்கும் துக்கத்துக்குக் காரணம், மனிதனுடைய மனச் சார்பு நிலையாகும் என்பதை அறிவுறுத்தி, அதற்குரிய பரிகாரமாக, "சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின், மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்'' என உலகை நெறிப்படுத்துகிறார்.

இதை ஞானப்பால் உண்ட திருஞான சம்பந்தன் என்னும் மூன்று வயதுக் குழந்தையே ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பு கண்டுபிடித்துத் தனது தந்தைக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்து உலகுக்கே விளம்பியது. "அதோ அந்த அர்த்த நாரீஸ்வரச் சிலை இருக்கிறதே! அதைச் சார்பற்றுக் கவனியுங்கள். அப்பா! அதன் ஒரு காதில் தோடும், மறுகாதில் குண்டலமும் பொலிகிறதே. சிதாகாசத்தில் இயங்கும் பராசக்தியைத் தோடும், கயிலையில் இயங்காது உள்ள தட்சணாமூர்த்தியாகிய பரம் பொருளைக் குண்டலமும் உங்களுக்குப் புலப்படுத்தவில்லையா? சக்தியும் சிவமும் ஒன்றாகி நின்றே எனக்கு ஞானப்பால் ஊட்டினார்கள். இக் கருத்துப் பொலிவே ''தோடுடைய செவியன்'' எனும் தேவாரமாகும்.

பாதி இயங்கியும் பாதி இயங்காதும் உள்ள அற்புத அர்த்த (பாதி) நாரீஸ்வர உருவம் உலகுக்கே புதுமையானது. இதை உலகுக்கு ஈய்ந்த சைவ சித்தாந்தம் வாழ்க! இதனைச் சரிவர விளக்கும் விஞ்ஞானம் வெல்க!

மக்களிடம் ஏற்படும் மெய்ஞ்ஞான போத மலர்ச்சியைச் சைவ சித்தாந்தம் தனியான பரிபாஷையில் சக்திநிபாதம் எனப் போற்றுகிறது.

இது மக்களுக்கு நிகழ வேண்டுமாயின் சுட்டறிவும் அதனால் விளையும் இருவினையும் முற்றாக அகலுதல் வேண்டும். பௌதிகச்சக்திச் சேமிப்புக் கோட்பாடு அற்புதமாக உள்ளது. இது சைவ சித்தாந்தத்திற்கு அரண் செய்வதாக அமைந்திருக்கிறது. அணுவானது தனக்குத் தேவைப்படும் சக்தியைச் சுயமாகவே சேமித்துக் கொள்ளும் சுய ஆற்றலைப் பெற்றதாகும்.

அது போலவே உயிரினங்கள் யாவும் தமது விருத்திக்கும், இயக்கத்துக்கும் பரிணாமத்துக்கும் வேண்டிய சக்தியைச் சுயமாகவே பெறும் ஆற்றல் இயற்கையாகவே உடையனவாகும் உயிரின் முன்னேற்ற மாறுதலை விஞ்ஞானம் பரிணாமக் கிரமம் அல்லது கூர்ப்பு



பொது சன நூலகம்

என விளம்பும். இத்தகையதோர் அற்புதமான கூர்ப்பு அமைப்பு ஒரு கொம்பியூட்டர் முறையில் சுயமாகவே இயங்கக் கூடியதாக நியமிக்கப்பட்டுள்ளது. சிவனுடைய முத்தொழில்களாகிய படைத்தல், காத்தல், மறைத்தல் என்பன ஒரே இயக்கத்தின் தொடர்நாடகமேயன்றித் தனித்தனியான நிகழ்ச்சிகள் அல்ல. மனச் சார்புடையோருக்கு முத்தொழில் வெவ்வேறாகப் புலப்படும்.

மக்கள் பரிணாமக் கிரமத்தில் பகுத்தறிவு படைத்த மனித கட்டத்தை அடைந்துள்ளனர். இத்துடன் இயற்கைக் கூர்ப்பு முற்றுப்பெற்று விட்டதாகப் பகுத்தறிவாளர் கொக்கரித்துக் குழப்பம் செய்கின்றனர். இவர்களால் உலகம் அல்லோல கல்லோலப் படுகிறது. இந்த இயற்கைப் பரிணாம நியதியின்படி பகுத்தறிவுக் கட்டத்தை அடைந்த மனிதன் இன்னுமொருபடி மேற் சென்று தெய்வீக நிலையடைய வேண்டும் எனச் சிவஞானம் வழிகாட்டுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக உலகில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே திருமுருகனை ஏழு படிகளில் நிறுத்தி உருவம் அமைத்துத் தமிழ் கூறும் நல்லுலகம் உயர்நெறி காட்டியுள்ளது. இது தமிழ் உலகின் தனிச் சிறப்பாகும். ஆறு அறிவைத் தாண்டிய மனிதனே திருமுருகனாகும். இன்றைய விஞ்ஞானம் சார்புக்கொள்கையையும் சக்திசேமிப்புக் கோட்பாட்டையும் ஒன்றிணைத்து வெற்றி காணப் பெரும் முயற்சி எடுத்து வருகிறது. அது நிறைவேறும் காலத்தில் சைவசமயமே மெய்ச்சமயமென ஆணித்தரமாக விஞ்ஞான ரீதியில் மேலும் நிருபிக்கப்படும்.

இயற்கைக் கோள்கள் இயங்கும் வெளிமண்டலம் ஆகாசம் என அழைக்கப்படுகிறது. அணுக்கள் இயங்கும் வெளியை அணு ஆகாசமென வியாக்கியானிக்கப்படுகிறது. உயிரினம் உலாவும் வெளியை வளிமண்டலம் என விளம்புகிறோம். வெளியில்லாத இடத்தில் சுதந்திரமான இயக்கம் இருத்தல் இயலாது. வெளியில் ஏதும் தடைகள் இருப்பின் இயக்கத்தின் சுதந்திரம் பாதிக்கப்படும். திசை வெளியில் கோள்கள் தங்குதடையின்றித் சுதந்திரமாக இயங்குவதற்குக் காரணம் அங்கு எவ்வித ஈர்ப்பு உரோஞ்சலும் எதிர்ப்புச் சக்தியும் இல்லாமையுமேயாகும். அணு மண்டல வெளியுள்ளும் தடைகள் ஏதுமின்மையால் அவைகள் சுதந்திரமாக இயங்குகின்றன. ஆனால் பரிணாமக் கிரமத்தில் படியேறி வந்த மனிதமூளை மண்டலத்தின் போக்கு இந்த இயற்கை நியதிக்கு மாறாக அமைந்துள்ளதைச் சைவ சித்தாந்த தத்துவ ஞானிகள் சரிவரத் தெளிந்தனர். இதற்குக் காரணம் மனித மன வெளியில் செயற்கையான ஈர்ப்பும் உரோஞ்சுதலும் பரிணாமக் கிரமத்தில் உருவாக்கியதை உணர்ந்தனர்,



இந்த ஈர்ப்புக்கும் உரோஞ்சலுக்கும் அடிப்படைக் காரணம் மனோவிகாரங்களாகும். இதை அறிவுறுத்தும் வகையில் அமைந்த சிவவாக்கியருடைய பாடல் இதோ -

மனவிகாரம் அற்றுநீர் மதித்திருக்க வல்லிரேல்
நினைவிலாத மணிவிளக்கு நித்தமாக நிலைத்திடும்
அனைவர் ஓதும் வேதமும் அகம்பிதற்ற வேணுமோ?
கனவு கண்டது உண்மை நீ தெளிந்ததே சிவாயமே!

பண்டைத் தமிழன் படைத்த ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியப் பேரிலக்கண நூலில் இந்த மனோ விகாரங்களை எட்டாகப் பகுத்து மெய்ப்பாடெனக் கூறப்பட்டுள்ளது.

காமம், வெகுளி, மயக்கம், அச்சம், துக்கம், சந்தோஷம், பொறாமை, வெறுப்பு ஆகியனவே எட்டு மனோ விகாரங்களாகும். இவற்றினாற்றான் மன வெளி பாதிக்கப்பட்டுள்ளது.

அவை தம்மிடையே எதிர்ப்புச் சக்திகளைக் கொண்டு ஈர்க்கப்பட்டும் உரோஞ்சப்பட்டும் வீசப்பட்டும் இயங்குவதால் இவற்றின் மூலம் உண்மை விளக்கமோ அமைதியான வாழ்க்கையோ பெற முடியாதென்பது மெய்ஞ்ஞானத் துணிபாகும். பொருட் சம்பாத்தியத்தையும் உடன்பாட்டு நிலையில் பெருக்குவதனால் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்தல் அரிதாகும்.

எதிர்மறை நிலையில் மனோ விகாரங்களை அகற்றி, மனிதனுடைய உண்மை விளக்க ஆற்றலைச் சுயமாகவே மலரச் செய்யும் கல்வி முறையே சகல பிரச்சினைகளையும் தீர்க்கும் ஔடதம் என்பதில் ஐயமில்லை. 'அறிவு ஞானத்தை விடத் தெளிவு ஞானமே கோடி சிறந்ததாகும்.

நாம் கண்டு உணர்ந்து அனுமானித்துத் தெளியக் கூடிய பொருள் மூன்று உள்ளதாகச் சைவ தத்துவ ஞானம் பகுத்துக் காட்டுகிறது. இவைகளின் மூலக்கூறு சக்தியென்பதை மறுப்பதற்கில்லை.

இவற்றை அறிவில்லாத பொருளென்றும், அறிவுடைய பொருளென்றும், தெளிவுடைய பொருள் என்றும் கூறலாம். இன்னொரு வகையில் இவற்றை உருவப் பொருள் என்றும், அருவுருவப் பொருள் என்றும், அருவப் பொருள் என்றும் அழைக்கலாம். இவற்றுள் அறிவில்லாத பொருள் மாயையாகும். அறிவுடைப் பொருள் ஆத்மாவாகும், தெளிவுடைய பொருள் சிவனாகும். இம்முப் பொருள் உண்மை எமக்குப் போதிக்கும் பாடம் என்ன? அதுவே முக்கள்

தெளிவு ஞானம் பெறுதற்கு மிக முக்கியமானதாகும். அறிவில்லாத பொருளால் அறிவைப்பெறுதல் முடியாது. ஆனால் அறிவுடைப் பொருளால் தெளிவைப்பெறுதல் இயலும் என்பதே சிவஞான போத விளக்கமாகும். அறிவு தெளிவை மயக்குவதாதலின், அறிவையும் தெளிவையும் ஒரே சமயத்தில் எவராலும் பெறுதல் அரிதாகும்.

மனித அறிவின் முடிபிலே தான் தெளிவு மலரும் என்பது ஒரு அற்புதமான நியதியாகும். இதற்கு அமையவே சிவஞான மாளிகை கண் கொள்ளாக் காட்சியளிக்கிறது. இக்காட்சியே சிவதரிசனமாகிய தத்துவ ஞானமாகும். இதைப் பெறுதற்கு எமது நற்சாதனையாகட்டும். மனச் சார்ப்பு நீங்கின் சார்தரா எய்நோய் துன்பமும்.

முடிவில் பேராசிரியர் ஐன்ஸ்ரீன் அவர்களுடைய பொன்னான போதனை ஒன்றை நினைவுகூர்கிறோம். "எந்த அளவிலும் கருத்திலும் மனிதன் மமதையிலிருந்து விடுதலை பெற்றுள்ளான் என்பதைக் கொண்டே அவனுடைய பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகிறது. அதாவது மனித ஆளுமையின் காக்காப் பொன் தோற்றம் உருக்குலைதல் வேண்டும்.

அப்பொழுது தான் ஆத்மாவின் சொரூபம் புலப்படும். இந்த போலி முகமூடி உருக்குலையும் போது தான் மனிதனால் அகங்காரமற்ற பூரணமான புரட்சி ஒளியின் பிராந்தியத்தை அணுக இயலும்"

## ஆளுமையைப் பெற வழி ஆக்கபூர்வ சிந்தனையை வளர்ப்பதே!

களிநடம் புரியும் கலாபமயில், கனிந்து கூவும் குயில், இயற்கை எழில் மிளிரும் நீர் ஊற்று, பூத்துக் குலுங்கும் பூங்கா, தண்ணொளி வீசும் வெண்ணிலா, கம்பீரமான குதிரை, கண்கவர் சௌந்தர்ய கன்னிகை, அகன்ட மார்பு திரண்ட தோள் உருண்ட கைகால் கொண்ட இளம் காளை, உள்ளொளி பொருந்திய மெய்ஞ்ஞானி முதலியன எமது உள்ளத்தைச் சூறையாகக் கொள்ளை கொண்டு விடுகின்றன. கவிஞர்களுக்கு இவை நல்விருந்தாகின்றன. அதனால் உயர்ந்த காவியங்கள் உருவாகின்றன. ஞானப் பால் உண்டு தேவாரம் பாடிய குழந்தை கூட இறைவனுடைய காட்சியில் மனம் வயித்து அவனை "உள்ளம் கவர் கள்வன்" என வர்ணிக்கிறது.



வசீகரமான காட்சியும், தோற்றமும் மக்களை ஈர்த்து இழுத்து லயிக்கச் செய்யும் ஆற்றல் படைத்தவை என்பதில் ஐயமில்லை. பிறர் நோக்கு விழைதலும், பாராட்டுப் பெறுதலும் வேண்டுமென்ற விருப்பம் சிறு வயதிலிருந்தே மனிதனிடம் உருவாகின்றது. இதன் பேறாகவே மனிதன் வசீகரமான தோற்றத்தைப் பெறப் பெரும் முயற்சி எடுக்கிறான். முற்றுந் துறந்த முனிவர் கூட ஆத்மீக ஆளுமையை விரும்பி வேட்பிடுவதை நாம் காண்கிறோம். ஆளுமை என்ற பதம் வசீகரமான தோற்றத்துக்குப் பதிலாக உளவியல் உலகில் இன்று பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆளுமையைப் பற்றிய உளவியல் நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. உலக நாடெங்கிலும் இலட்சக் கணக்காக விலைப்படும் உளவியற் சஞ்சிகையான "வாசகர்களின் ஜீரணம்" என்னும் மாதாந்த ஏடு ஆளுமையை அடிப்படையாகக் கொண்டே மக்களைக் கவர்கின்றது.

பண்டைத் தமிழர் ஆளுமையைப் பற்றி நன்கறிந்திருந்தனர். திருக்குறளில் ஆளுமைக்குப் பதிலாக எழில் நலம் என்னும் சொற்றொடர் உபயோகிக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். எழில் நலம் என்பது அழகுடைய நன்மை பயக்கும் தோற்றத்தைக் குறிப்பதாகும். இதனைத் திருவள்ளுவர் அகத்தோற்றம் எனவும், புறத்தோற்றம் எனவும் இருவகையாகப் பகுத்துள்ளார். புறத்தோற்ற அழகு ஆரோக்கியமான உடல்நலத்தாலும், அகத்தோற்ற அழகு ஆரோக்கியமான உளநலத்தாலும் உண்டாவதாகும்.

புறத்தோற்றத்திலும் பார்க்க அகத் தோற்றத்துக்கே தமிழ் உலகம் முதலிடம் கொடுத்து வருகின்றது. இவ்வுண்மையை எடுத்துக் காட்டும் திருக்குறள்;—

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று"

எனத் தெளிவுபடுத்துகிறது. மண்ணினாற் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்ட பாவைப்பிள்ளையுடைய அழகினைப் போன்று மட்டுப்படுத்தப்பட்டும் உபயோகமற்றும் உள்ளது மனநலத்தைக் கொடுக்கும் கல்வி அறிவில்லாதவனுடைய புறத் தோற்றம் என்பது வள்ளுவமாகும். இதை இன்னும் தெளிவாக விளக்கும் நாலடியார் இதோ:—

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாமெனும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு"

உடலை வெறும் ஒப்பனை செய்வதனால் வசீகரமான ஆளுமை பெற முயற்சிக்கும் மக்கள் இவ்வுண்மையை வழுவற விளங்கிக் கொள்ளுதல் பயனுடையதாகும். வெறும் ஏட்டுக் கல்வியால் பட்டம் பெற்று ஆளுமை அடைய முயற்சிப்போருக்கும் இது சிறந்த பாடம் புகட்டுகிறது. நடுவு நிலைமையுள்ள கல்வி அறிவைத் திருவள்ளுவர் செம்பொருள் காணும் சார்பற்ற மெய்யுணர்தல் என வியாக்கியானம் செய்கிறார்.

இவற்றிலிருந்து நாம் கிரகித்து உணரக் கூடியது முழுமையான ஆளுமை என்பது உடல்நலத்தையும், உளநலத்தையும் மட்டும் பொறுத்துள்ளது அல்லவென்பதாகும். அது கல்வி அறிவுக்கும் மேலான சார்பற்ற மெய்யுணர்தலையும் முக்கியமாகக் கொண்டிருத்தல் வேண்டும். உடலும் உள்ளமும் ஆன்மாவும் ஒருங்கே தூய்மை பெற்று அதன் பேறாக முழுமையான ஆளுமை பெற்றோரைத் தமிழ் உலகம் சான்றோர் எனப் போற்றி வணங்குகிறது. இத்தகைய பூரண ஆளுமைப் பொலிவுள்ள சான்றோர்கள் பண்டைத் தமிழ்நாட்டில் மலிந்திருந்தனர். அதனால் தமிழ்நாடு சீரும் சிறப்பும் அமைதியும், பண்பும், பயனும் பெற்றுத் திகழ்ந்தது. இன்று இத்தகைய சான்றோர்கள் இல்லாதிருப்பதாலேயே நாட்டில் பூசல் பிணக்குகள் பெருகி வருகின்றன. பூரணமான ஆளுமையுடைய சான்றோர்களாக எமது இளைஞர்களை வளர்த்து அவையத்து முந்தியிருக்கச் செய்தல் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் உள்ள பெரும் கடமையாகும்.

சான்றோர்களுடைய குணாதிசயங்களை மிகவும் சிறப்பாகச் சான்றாண்மை என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். குணநலம் அல்லாத பிறநலம் எதுவும் எழில் மிகும் ஆளுமை நலமாகாதென்பது அவருடைய முடிபாகும். தமிழர்களின் சால்பு எழில்மிகு ஆளுமை நலத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். சால்பு என்னும் கவின் மாளிகை ஐந்து தூண்களாகிய அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் குணாதிசயங்கள் மீது கட்டி எழுப்பப்பட்டதாகும். தூண்கள் பழுதடைந்தால் மாளிகை தகர்ந்து விடுதல் போலக் குணாதிசயங்கள் கேடுபட்டால் எழில் மிகும் சால்பு மாளிகையும் தகர்ந்து போதல் நிச்சயமாகும். எனவே பெற்ற குணாதிசயங்களைப் பாதுகாத்தல் எழில்மிகும் ஆளுமையைப் பேணுவதற்கு அத்தியாவசியமாகும்.

மக்களுடைய ஆளுமை பிறவியிலேயே அமைந்து விடுகிறதா அல்லது சிறந்த பயிற்சியாலும் உகந்த சூழ்நிலையாலும் முன்னேற்றம் அடைகிறதா? என்பதில் சிறு கருத்து வேறுபாடு நிலவி வருவதைக் காண்கிறோம். அரபிக்குதிரைக்குப் பிறவிக்குணம்



போகாதென்னும் பழமொழியை மேற்கோள் காட்டி ஒருசிறு சாரார் உளவியலுக்கும், தத்துவ ஞானத்துக்கும் முரணான கொள்கையைப் பரப்பி வருகின்றனர். இவர்கள் சாதி அபிமான மேலீட்டால் சாதியைப் பொறுத்தே மக்களிடம் குணாதிசயங்கள் அமைகின்றன என வாதாடுவர். இவர்கள் வருணதருமத்தை ஆதாரமாகக் கொண்டு மனிதனுடைய குணாதிசயத்தை மதிப்பீடு செய்ய முற்படுவர். இவர்கள் ஆரியன் என்போன் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவன் என வாதாடுவர். அவனிடம் பிறவியிலேயே நற்குணங்கள் ஏற்பட்டு விடுகின்றன எனப் பெருமை பாராட்டுவர். உண்மையில் உயர்ந்த ஒழுக்கமும் உன்னத குணாதிசயமும் கொண்டோர் யாவரும் ஆரியராவர்.

குழந்தைக் கல்வியில் மேன்மை பெற்ற உளவியல் ஞானி பியாஜே என்பவர் குழந்தைகள் யாவரும் பிறக்கும் போது நல்லவர்களாகவும் களங்கமற்றவர்களாகவும் அவதரிக்கிறார்கள் எனக் கூறுகிறார். சூழ்நிலையினாற்றான் குழந்தை தீயகுணங்களைப் பெறுகிறது என்பது அவருடைய விளக்கமாகும். எனவே எழில் மிகும் ஆளுமையானது பெரும்பாலும் சிறந்த சூழ்நிலையாலும் உத்தம பயிற்சியாலும் ஆக்கப்படுகிறதென்பது உறுதியாகும். எனினும் நூற்றுக்கு இரண்டு சதம் வரையுள்ள அசாதாரண குழந்தைகள் சிறந்த ஆளுமையைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாக இருப்பதும் உண்மையாகும். இக்குறைபாடு சாதி வித்தியாசத்தினால் ஏற்படுவதல்ல. பிறவியிலேயே ஏற்படும் விவேக ஈவுக் குறைவினால் இது உண்டாவதாகும்.

விஞ்ஞான ரீதியில் உளவியலாளர் ஆய்ந்து கண்ட உண்மையைத் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மெய்யுணர்தல் மூலம் தெளிந்து,

"பிறப்பொக்கு மெல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என அறிவுறுத்தியுள்ளார். பிறக்கின்ற போது எல்லா உயிர்களும் வேறுபாடு இன்றிச் சமமாகவே படைக்கப்படுகின்றன; ஆனால் அவர்களுடைய பெருமை காலக்கிரமத்தில் சமமில்லாத வளர்ச்சியடைகிறது. மக்களுடைய பெருமையையும் சிறுமையையும் மதிப்பீடு செய்வதற்கு அவரவர் ஆற்றும் செயல்களே உரைக் கல்லுப்போல உள்ளன. செயற்கை முறையில் ஆக்கப்பட்ட சாதி வேறுபாட்டைக் கொண்டு பெருமையைக் கொடுக்கும் ஆளுமையை மதிப்பீடு செய்தல் பேதமையாகும்.

குலத்தளவேயாகுமாம் தான் பெற்ற குணம் என்னும் கொள்கையை மாற்றிக் குணத்தளவேயாகுமாம் தாம் பெறும் பெருமையான குலம் என்னும் நியதியை ஆக்கிக் கொள்வதனுல் சிறந்த ஆளுமையை உருவாக்கும் சந்தர்ப்பம் சகலருக்கும் கிடைக்கச் செய்யலாம். செயலுக்கும் குணத்துக்கும் அடிப்படையாக உள்ளது சிந்தனையாகும். சிந்தனையை ஆக்க பூர்வமானதென்றும், அழிவு பூர்வமானதென்றும் உளவியலாளர் பகுத்தறிந்துள்ளனர். ஆக்க பூர்வமான சிந்தனைகளை வளர்ப்பதனுல் எழில் மிகும் ஆளுமையைப் பெறலாம். இத்தகைய சிந்தனைகளைத் தூண்டி மன அயர்வுப் புலத்திலே பதிய வைக்கலாம். இங்ஙனம் பதியப்பட்ட ஆக்க பூர்வமான சிந்தனைகள் நல்ல மனப் பான்மையை மக்களிடம் ஏற்படுத்துகின்றன. அழிவு பூர்வமான சிந்தனைகளை மன அயர்வுப் புலத்தில் பதியவைப்பதனுல் தீய மனப்பான்மை உருவாக்கிறது. மனப்பான்மைக்கு ஏற்கவே மக்களிடம் ஆளுமை உருவாகிறது. தீய மனப்பான்மை ஏற்பட்டு விட்டால் அதை மாற்றி அமைத்தல் அரிதாகும்.

தீய மனப்பான்மையை உண்டாக்கும் சிந்தனைகளைத் திட்டவட்டமாகத் திருவள்ளுவர் உளவியல் ரீதியில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் என நான்காக விளக்கியுள்ளார். இவைகள் எழில்மிகு ஆளுமையை அழிக்கும் தீய படைகளாகும். இவற்றின் தாக்கத்தில் இருந்து விடுதலை பெருதோர் உயர்ந்த சாதியிற் பிறந்தாலும் சிறந்த ஆளுமையைப் பெறுதல் இயலாது. வள்ளுவன் முன்பு காட்டிய வழியில் அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை முதலிய ஆக்கபூர்வமான சிந்தனைகளால் நல்ல மனப்பான்மையை உருவாக்குதலே எழில்மிகு ஆளுமையைப் பெறுவதற்கு உகந்த நெறியாகும்.

உடல் வளர்ச்சிக்கு உணவு தேவைப்படுதல் போல உள மனப்பான்மை வளர்ச்சிக்குத் தேவையான நான்கு பொருட்களை டபிள்யூ-ஏ-தொமஸ் என்னும் உளவியல் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். அவையாவன பாதுகாப்பு, ஆதரவு, பாராட்டு, புதிய அனுபவம் என்பனவாகும். இவற்றைச் சிறு வயதிலிருந்தே பிள்ளைகளுக்குக் கொடுக்கத் தவறினுல் அவர்கள் ஆளுமையுடன் சான்ருேர்கள் ஆக்குதல் முடியாத காரியமாகும். இவற்றை முறைப்படி சரிவரக் கொடுக்கத் தவறும் பெற்ருேர்களும், ஆசிரியர்களும் தமது கடமையில் இருந்து தவறியவர்களாவார்கள். இளைஞர் உலகம் இன்று தீய ஆளுமைக்கு இடமாக ஆக்கப்படுதல் அவர்களுடைய உளவளர்ச்சிக்குத் தேவையானவற்றைக் கொடாது விடப்படுதலேயாகும். அரசியற் கட்சிகள் தம்முள்ளே செய்து கொள்ளும் உடன்படிக்கையால் இளைஞர்களுடைய இத்தேவையைப் பூர்த்தி செய்தல் துர்லபமாகும். உடன்படிக்கையால் சிறந்த ஆளுமையை உருவாக்குதல் பூவில்லாது மாலை கட்டுதல் போலாகும்.



ஆக்கபூர்வமான மனப்பான்மையை உருவாக்குவதற்கு உளவியலாளர் ஓர் உபாயத்தைக் கையாளும்படி கூறுகின்றனர். இந்த உபாயம் சித்தாந்த தத்துவ ஞானிகள் கூறும் கருடோகம்பாவனை அல்லது சிலோகம்பாவனை போன்றதாகும். இதனை ஆங்கிலத்தில் ஓட்டோ சஜெஷன் என வழங்குவர். இதன் மூலம் பெறுதற்கு அரியவற்றைப் பெற இயலும். குணப்படுத்த இயலாத நோய்களைத் தீர்க்க முடியும். இந்த உபாயசாதனை நவீன உளவியல் நூல்களின் பிரசித்தி பெற்றுள்ளது. மெய்கண்ட சித்தாந்த சாத்திரங்களிலும் இது முதன்மை பெற்றுள்ளது. மனோசக்தியிற் பத்தில் ஒன்பது பங்கு சக்தியை உடையது மனத்தின் அயர்வுப் புலனாகும். நினைவுப் புலத்தாற் சாதிக்க இயலாத அரிய காரியங்களை அயர்வுப்புலம் சாதிக்க வல்லதாகும். எனவே சாதிக்க வேண்டியவற்றைத் திடநம்பிக்கையுடன் மனத் தூண்டுதல் மூலம் ஓயாது அயர்வுப் புலத்துக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தால் அது அவற்றை ஏற்று வேண்டியவற்றைச் சுயமாகவே செயற்படுத்தி உதவும். இப் பணியில் நினைவுப்புலத்துக்கு வேலையில்லை. அயர்வுப் புலத்தின் செயற்பாடு நினைவுப் புலத்துக்குட் புலப்படாது. எனவே நினைவுப் புலத்தால் கற்பனைகளைப் பெருக்குதல் ''ஓட்டோ சஜெஷன்'' என்னும் சுயபாவனையாகாது. சுயபாவனை திட நம்பிக்கை சங்கற்பத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இச்சாதனை நெறியைச் சிவஞான போதத்தில் மெய்கண்ட நாயனார் ''அவனே தானேயாகிய அந்நெறி'' யெனத் தெளிவுபடுத்துகிறார். உரை ஆசிரியர்கள் இதனைச் சிவோகம்பாவனை எனக் கூறுகின்றனர். இதனை வடமொழியில் ஸோகம் என வழங்குவர். அதாவது சிவனே நானாகியுள்ளேன் என்னும் திட சங்கற்பம் செய்து கொள்ளலாகும். இதை மீண்டும் மீண்டும் சங்கற்பம் செய்து மன அயர்வுப் புலத்தில் ஸ்திரப்படுத்துதலே சிவோகம் பாவனையாகும். இது சிவனைப் பற்றி நினைவுப் புலத்தால் கற்பனைகள் செய்து சிந்தனைகளை விருத்தி செய்தல் அன்று. இதை உளவியல் ரீதியில் விளக்குவதாயின் பெற வேண்டியதையே ஏற்கனவே பெற்று விட்டதாகவோ அல்லது அடைந்து விட்டதாகவோ திடசங்கற்பம் செய்து மன அயர்வுப்புலத்தில் ஸ்திரமாகப் பதிய வைத்தலாகும். இங்ஙனம் மன அயர்வுப் புலத்தில் ஸ்திரமாகப் பதியப்பட்ட சங்கற்பம் சுயமாகவே செயற்பட்டு வெற்றியீட்டிக் கொடுக்கும். மன அயர்வுப் புலம் ஒரு கற்பகதரு போன்றது. திட சங்கற்பத்துடன் அதிற் பதிவு செய்யப்பட்ட காரியம் நன்மையாகினும் சரி தீமையாகினும் சரி, பயன் கொடுத்தேதீரும். இதில் உள்ள மர்மம் யாதெனின் தீமையான எண்ணங்கள் மன அயர்வுப் புலத்தில் சுலபமாகப் பதிந்து விடுகின்றன. நன்மையான எண்ணங்களை கருடோகம் பாவனை மூலம் மீண்டும் மீண்டும் தூண்டியே சிரமப்பட்டுப் பதிவு செய்தல் வேண்டும்.

எழில்மிகும் ஆளுமையைப் பெற விரும்புவோர் தாம் அதைப் பெற்று விட்டதாகத் திருவருள் கூட்டித் திட சங்கற்பம் செய்து கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அதற்கு வேண்டிய அன்பு நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையாகிய சால்பை ஏற்கனவே திருவருளால் அடைந்து விட்டதாக உள்ளுணர்வுடன் திடசங்கற்பம் இடைவிடாது பூணுதல் வேண்டும். ''நான் வேறு ஆளுமை வேறு'' என்ற துவித பாவனை உடையோர் சிறந்த ஆளுமையைப் பெறுதலரிதாகும். நானும் நல்ல ஆளுமையும் ஒன்றே என்ற அத்துவித பாவனையே ''ஒட்டோ சஜெஷன்'' என்னும் சுயபாவனையாகும். இதனால் உள்ளொளி பொருந்திய கவர்ச்சிகரமான ஆளுமை பெறுதல் திண்ணமாகும்.

# செம்பைப் பொன்னாக்கும் இரஸவாதம்!

பண்டைக் காலத்து ரிஷிகளிற் பலர் பித்தளை உலோகத்தைப் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாக மாற்றும் ரஸவாத வித்தையை அறிந்திருந்தனர். பிற்காலத்துப் போலிச் சந்நியாசிகள் இந்த வித்தையைத் துர்ப்பிரயோகம் செய்து மக்களை ஏமாற்றிப் பணம் பறித்தனர். அதனால் இந்த வித்தையைப் பொய்யென மக்கள் நம்பினர். தாம் கற்ற சில வித்தைகளை ரிஷிகள் சீடர்களுக்குக் கற்பிக்காததால் நாளடைவில் அவ் வித்தைகள் அருகிப் போயின. அருகிப் போன காரணத்தால் ரஸவாத வித்தையைப் பொய்யெனவோ அல்லது ரிஷிகள் அறிந்திருக்கவில்லையெனவோ முடிவு செய்தல் கூடாது.

இரஸம் என்பது ஓர் உலோகப் பொருளாகும். அது வெள்ளை நிறம் உடையது. மற்றும் உலோகப் பொருளிலிருந்து ஒருவகையில் வேறுபட்டது. திரவப் பொருள் போல உருண்டோடக் கூடியது. இதை அநேகமாக உஷ்ணத்தை அல்லது வெப்பத்தை அளவிடும் கருவிகளில் உபயோகிப்பார்கள். மனிதனுக்கு ஏற்படும் காய்ச்சலை அளவிடுவதற்கு உபயோகிக்கப்படும் வெப்பமானிக் கருவிக்குள்ளே காணப்படும் வெள்ளைப்பொருள் ரஸமாகும். இதைத் தங்க ஆபரணங்கள் மீது தடவினால் அது தனது பொன் நிறத்தை இழந்து வெள்ளை நிறமாவதைக் காணலாம். ஆனால் தங்கம் தனது தன்மையை இழந்து விடுவதில்லை. நிறத்தை மாற்றும் சக்தியுள்ள ரஸத்தையே தங்கமாக மாற்றிவிடும் வித்தையை முதன் முதலாக ரிஷிகள் கண்டறிந்தனர். அதன் பிற்பாடு விலை குறைந்த பித்தளையையும் தங்கமாக மாற்றும் வித்தையைக் கண்டுபிடித்தனர்,



இவ்வித்தையை முன்னைய ரிஷிகள் அறிந்திருந்தார்கள் என்பதற்கு ஆதாரமில்லையெனக் கூறுவோர் திருமந்திரத்தின் 2709 ஆவது செய்யுளைப் படித்தால் இதனை மறுக்காது ஏற்றல் திண்ணம். அச் செய்யுள் இதோ:—

எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை உன்னி உருகு மனத்தராய்த்
தெளிய ஓதிச் சிவாய நமவென்னுங்
குளிகை யிட்டுப்பொன் ஆக்குவன் கூட்டையே.

இங்கே குறிக்கப்பட்ட குளிகையிட்டு வேறு உலோகத்தைப் பொன்னாக்கும் வித்தையே ரஸவாதமாகும். இதைத் திருமூலர் அறிந்திருந்தாரென்பது இதிலிருந்து புலப்படுகிறது. இதிற் சந்தேகமில்லை. திருமூலர் போன்ற மெய்ஞ்ஞானியர் போலிச்செப்படி வித்தை புரியும் மாந்திரிகர்கள் அல்லர். அற்புதங்கள் புரிந்து சைவ சித்தாந்த சமயத்தை அவர் வளர்க்க முற்படவில்லை. விஞ்ஞான எடுத்துக் காட்டை ஆதாரமாகக் கொண்டு மெய்ஞ்ஞான உண்மையை நிலைநாட்டுவதற்காகவே அவர் ரஸவாதத்தைக் கையாள்கிறார். அற்புதங்களைச் செய்து காட்டி மக்களுடைய மூளையைச் சலவை செய்து அவர்களை மந்தைகள் ஆக்க அவர் ஒருபோதும் முற்படவில்லை. இந்த உதாரணத்தைக் கொண்டு ஒவ்வொருவரும் சூக்கும பஞ்சாக்கரத்தை வழுவற ஓதிச் சாதனை செய்து விஞ்ஞானத் துறையில் ஏற்படும் ரஸவாத மாற்றத்தைப் போல மெய்ஞ்ஞானத் துறையிலும் ஆத்மீக மாற்றத்தைச் செய்து கொள்ள வேண்டுமென வழிகாட்டுகிறார்.

இன்றைய விஞ்ஞானம் ரஸவாதத்தை ஏற்கிறதென்பதை அறிந்து இந்துக்கள் பெருமை அடைதல் வேண்டும். அதன் உண்மை விளக்கத்தைச் சரிவரப் பெற்று அதன் பிரகாரம் சாதனை செய்து ஆத்மீகப் பரிணாமம் எய்துதல் வேண்டும். அற்புதங்களைச் செய்து காட்டும் பிறரைப் பின்பற்றுவதனால் மனிதன் தனது சொந்த விவேகத்தையும், ஆற்றலையும் இழந்து, கையேந்தி வாழும் பிச்சைக்காரனாகி விடுகிறான் என்பதை உணர்தல் அவசியமாகும். இரஸவாதம் மாயாவாதத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அதன் அத்திவாரம் சத்காரியவாதமாகும்.

இவற்றைச் சொற்பம் விரிவாக ஆய்தல் சாதகர்களுக்கு வழிகாட்டி உதவுவதாகும். மாயாவாதம் எனச் சைவ சித்தாந்திகள் கூறுவது மாயைப் பொருளைப் பொய்யெனக் கூறி நிராகரிப்பதன்று. அது பொய்யானதல்ல. அதன் தோற்றமே பொய்யாக மனிதனுக்குப் புலப்படுகிறதாகும். இன்றைய பௌதிக ரஸாயன இயல் இதை நன்கு தெளிவு படுத்துகிறது. உலகில் தோன்றும் மூலகங்கள் யாவும் பொய்யான ஒரு தோற்றமென விஞ்ஞானம் விளக்குகிறது.

உண்மையாக உள்ள பொருள் இயங்கும் சக்தியாகும். பராகாசத்தில் வியாபித்து நீக்கமற நிறைந்துள்ள சக்தியின் பல்வேறு இயக்கங்களே மூலகங்களாகப் புலப்படுகின்றன. இந்த மூலகங்களையே சைவ சித்தாந்தம் பிரகிருதி மாயையெனக் கூறுகின்றது. இது சுத்த மாயையாகிய இயங்கும் சக்தியின் வெறும் தோற்றமேயாகும். அணுசக்தியின் பல்வேறு இயக்கங்களே எமக்கு மூலகங்களாகப் புலப்படுகின்றன என்பது விஞ்ஞானம். மூலகங்களில் உள்ள அணுசக்தியின் எண்ணிக்கையை மாற்றி அமைப்பதனால் மூலகங்களையே மாற்றி அமைக்கலாம் என விஞ்ஞானம் நிரூபிக்கின்றது.

மூலகங்களின் தொகை நூற்றுக்கு மேல் உள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இவற்றின் தொகையை அவற்றுள் உள்ள அணுசக்தி எண்ணிக்கையைக் கொண்டே தீர்மானிக்கின்றனர். உதாரணமாக ஜலவாயுவை எடுத்துக் கொள்வோம். இதை ஆய்ந்து இதில் உள்ள அணுசக்தி எண்ணிக்கை ஒன்றெனக் கண்டு பிடித்தனர். பொன்னின் அணுசக்தி எண்ணிக்கை 79 ஆகும். "பிளாட்டினம்" என்னும் உலோகப் பொருளின் அணுசக்தி எண்ணிக்கை 78 ஆகும். பிளாட்டினத்தைப் பொன்னாக்குவது சுலபமாகும். ஏனெனின் அதனிடம் பொன்னிலும் பார்க்க ஒரேயொரு அணுசக்தி எண்ணிக்கைதான் குறைந்துள்ளது அந்த எண்ணிக்கையு ஒன்றினால் · கூட்டுதல் இலகுவான ரசாயன செயற்பாடாகும். இதில் விஞ்ஞானம் வெற்றி கண்டு பிளாட்டினத்தைப் பொன்னாக மாற்றும் வித்தையைக் கண்டுபிடித்துள்ளது. இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விரைவில் பித்தளை முதலிய உலோகங்களைப் பொன்னாக்கும் வித்தை விஞ்ஞானத்தால் கைகூடுமென நம்பப்படுகிறது.

எனவே இந்து ரிஷிகள் கண்ட ரஸவாதம் ஒரு கற்பனை அல்லவெனப் புலப்படுகிறது. இல்லாத ஒன்றைப் புதிதாக எவராலும் சிருஷ்டிக்க இயலாது. உலகம் சிருஷ்டிக்கப் படுகிறதெனின் அது சுத்த அரூபமான மாயா சக்தியிலிருந்தே படைக்கப்படுகிறதெனத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். இதேபோல உருவம் உடைய சீவன்கள் அருவமான ஆன்மாவையும், சுத்த சக்தியையும் ஒன்று சேர்த்தே சிருஷ்டிக்கப்படுகின்றன என்பது சித்தாந்தத் தெளிவாகும். மதிப்புக் குறைந்த பித்தளையானது ரஸவாதச் செயற்பாட்டினால் மதிப்புள்ள பொன்னாகுதல் போல மதிப்புக் குறைந்த மனித சீவன்கள் சூக்கும பஞ்சாக்கர செப தியானத்தால் மதிப்புமிக்க சீவன் முத்தர்களாகலாம் எனச் சிவனடியார்களைத் திருமூலர் நெறிப்படுத்துகிறார்.

இரஸவாத மாற்றத்தைச் செய்வதற்கு உபயோகிக்கப்படும் பாத்திரம் கருப்பக் கிருகம் போன்றதாகும். அது மிகவும் புனிதமாக இருந்தாற்றான் ரஸவாதம் சித்தியளிக்கும். இதற்காக



ரிஷிகள் ஒருவகையான குளிகையைக் கண்டறிந்தனர். அந்தக் குளிகை கருப்பக்கிருகத்தைச் சுத்தம் செய்வதுடன் ரஸவாதச் செயற்பாட்டையும் ஊக்குவிக்க உதவுவதாககும். இந்தக் குளிகையை நிகர்த்ததே சூக்கும பஞ்சாக்கரம் என்பது திருமூலருடைய துணிபாகும். அது இரட்டைச் செயலுடையதாகும்.

மனிதனுடைய நெஞ்சம் கருப்பக்கிருகம் போன்றதாகும். கருப்பக் கிருகம் என்னும் பதம் நுட்பமான மறை பொருளுடையதாகும். இது குறிப்பது ஒரு கருத்தரிக்கக் கூடிய ஸ்தானத்தையாகும். சைவசித்தாந்திகள் பரவெளியாகிய தில்லை வெளியைக் கருப்பக் கிருகம் எனக்கூறுவர்.

ஆன்மாக்கள் சீவன்களாகக் கருவுறும் இடம் பரவெளியாகும். இங்ஙனம் கருவுற்ற நுண்ணிய அருவமான சீவராசிகள் மழை மூலம் கழுவப்பட்டுப் பூமியை வந்தடைந்தனவாகும். சீவன்கள் முதன் முதலாகத் தோன்றிய இடம் நீர்நிலையங்களேயாகும் என விஞ்ஞானம் ஆய்ந்தறிந்தது. சிவனுடைய சடா முடியாகிய தில்லை வெளியில் வதியும் கங்கா தேவியுடைய அருள் ஊற்றே சிருஷ்டிகளுக்கு மூல காரணமெனச் சைவ சித்தாந்தம் பகர்கிறது. சித்தாந்த மறைபொருள் விஞ்ஞானத்தில் பொதிந்திருப்பதைச் சைவர்கள் தெளிந்துணரும் காலம் உருவாகி உள்ளது பெரும் மகிழ்ச்சியாகும். "வான் நின்று உலகம் வழங்கி வருகிற" தென்னும் சிறப்பை எடுத்துக் காட்டும் மேன்மை திருவள்ளுவனுக்கே உண்டு. சிவசக்தி கங்காதேவியாவாள். அவள்தான் சரஸ்வதி. அவளைத்தான் இறைவனுக்கு அடுத்தபடியாக வைத்துப் போற்றும் பண்பு தமிழ் உலகுக்கே தனித்த சிறப்பாகும்!

திருவருளாகிய தீர்த்தமானது சூக்கும பஞ்சாட்சரத்தில் பொதிந்துள்ளதாகத் திருமூலர் அறிவுறுத்துகிறார். இது ஒரு ரஸவாதக்குளிகை போன்றது. இது ஆத்மசுத்திக்கும், தெய்வீகக் கருத்தரிப்பை ஊக்குவிப்பதற்கும் ஒரு செயல் ஊக்கியாகும். திருவருளே உண்மையில் அருவமான சிவசக்தியாகும். இச் சக்தியைச் சைவசித்தாந்திகள் பெண்வடிவில் சித்திரித்துள்ளனர். இதைக் கூறும் திருமந்திரமாவது:—

சத்தியென் பாள்ஒரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்
பத்தியைப் பாழில் உகுத்த அப் பாவிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றாரே!

பாவிகள் நாய்போலக் கத்தித் திரிந்து பத்தியாகிய சக்தியை வீணில் விரயம் செய்யும் மூடர்கள். சத்தி ஒரு பெண் பிள்ளை என்பதையும், அவளே ஆன்மாவுக்கு விடுதலை அளிக்கும் தலைவி என்பதையும் அறியமாட்டார்கள் எனத் திருமூலர் அஞ்ஞானிகளை இடித்துத் திருத்தும் பாங்கு போற்றுதற்குரியதாகும். உரை

ஆசிரியர்கள் எவரும் ஆன்மாவையும் சுத்த சக்தியையும் எதற்காகச் சைவசித்தாந்திகள் பெண்ணாக உருவகப்படுத்தியுள்ளனர் என்பதை விஞ்ஞான தத்துவரீதியில் சரியாக விளக்கப்படுத்தியுள்ளதாகப் புலப்படவில்லை. சில உரையாசிரியர்கள் பசுவாகிய பெண்மாடு கயிற்றால் ஒரு தூணில் கட்டப்பட்டிருத்தல் போல் ஆன்மா பந்தபாசமாகிய கயிற்றினால் ஆணவமாகிய தூணிற் கட்டப்பட்டுள்ளதால் அது பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டுள்ளதென விளக்குவர்.

இவ்விளக்கம் ஓரளவு தெளிவைக் கொடுக்கின்றது. எனினும் இதன் சரியான விளக்கம் ரஸவாதத்தில் உபயோகிக்கப்படும் கருப்பக் கிருகத்தைக் கவனித்துக் கிரகிக்கும் போது வழுவறத் தெளிவாகும் என்பதில் ஐயமில்லை. கருத்தரிக்கக் கூடிய கருப்பாசயம் பெண்ணிடமேயுண்டு. ஆணிடம் அது இல்லை. ஆன்மா பந்த பாசங்களில் இருந்து விடுதலை பெற வேண்டுமாயின் அதுவும் பெண்ணைப்போல ( திருவருளைக் ) கருத்தரித்தே ஆகுதல் வேண்டும். பெண்ணுடைய கருப்பை அழுக்கடைந்திருந்தாலோ அல்லது அதற்குள் அந்நியபொருள் ஏதும் தங்கி இருந்தாலோ அது கருத்தரிக்கமாட்டாதென்பது வைத்திய விஞ்ஞானமாகும். கருப்பக்கிருகத்தைக் கொண்டுள்ள ஆன்மாவும் அதன் அசுத்த மாயை நிலையில் இருந்தால் திருவருளைக் கருவாகத் தரிக்கமாட்டாதென விளக்குவது சைவ சித்தாந்தமாகும். வேறு எந்த மதமும் இவ்வுண்மையை இத்தகைய சிறந்த உவமை மூலம் விளக்கியுள்ளதாகப் புலப்படவில்லை.

சைவசித்தாந்தம் சக்தியை இரு கூறாகப் பிரித்துத் திரோதான சக்தியென்றும் சுத்த சக்தியென்றும் காட்டுகின்றது. உலக வாழ்க்கைக்கு வேண்டியது திரோதான சக்தியாகும். இது அழுக்கடைந்திருப்பதனால் இதைத் தூல பஞ்சாக்கரமாகிய நமசிவாய என்னும் மந்திரத்தைச் செபதியானம் செய்வதால் பரிசுத்தமாக்க இயலும். சுத்தசக்தி மூலம் வீடுபேறு அடைய விரும்புவோர் தூல பஞ்சாக்கர செபதியானம் செய்தால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய செபதியானம் சூக்கும பஞ்சாக்கரமாகிய சிவ மந்திரத்தில் அடங்கியுள்ளது. இவைபாவற்றையும் திருமூலர் இயற்றியருளிய ஒன்பதாவது தந்திரத்தில் பஞ்சாக்கரம் என்ற தலைப்பில் 21 செய்யுள்களில் காணலாம். அக்கரைசேர முடியாது தத்தளிக்கும் அருங்கலமாகிய ஆன்மகப்பல் இனிதே கரைசேர வேண்டுமாயின் ஓரெழுத்தால் ஆகிய நாயோட்டுச் சூக்கும மந்திரத்தை நாய் போற் கத்தாது மௌனமாகச் செபதியானம் செய்தல் வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட இக்கட்டுரையில் பஞ்சாக்கர செபதியான சாதனாமுறைகளைச் சரிவர விளக்க இடமில்லை. இவற்றை அறிந்து அனுசரிக்க விரும்பும் சாதகர்கள் தகுந்த குருவிடம் நேரில் விசாரணை செய்தலே சிறந்ததாகும். இரஸவாதக் குளிகை போன்ற சூக்கும பஞ்சாக்கரம் சைவர்களை ஈடேற்றுவதாக!



# மூளைச்சலவையின் மர்மம்!

உடுதுணி அழுக்கடைந்தால் சலவை செய்கிறோம். வீட்டுச் சுவர் அழுக்கு பட்டால் வெள்ளையடிக்கிறோம். இவற்றை ஒரு தரம் செய்தால் மட்டும் போதாது. உடுதுணியும் சுவரும் மீண்டும் அழுக்கடைவதால் நாம் அவற்றுக்கு மீண்டும் மீண்டும் சலவை செய்தும் வெள்ளையடித்தும் வருகிறோம். வெள்ளைத் துணிகளை அடிக்கடி சலவை செய்வதனால் அவை ஒரு வகையான பழுப்பு நிறம் அடைந்து விடுகின்றன. இதை மூடி மறைப்பதற்கு - போக்குவதற்கல்ல - நீலம் உபயோகிக்கிறோம். சுவருக்கு வெள்ளையடிக்கும் போது கூட நீலத்தை உபயோகிக்கின்றோம். பணவசதி இல்லாவிடின் சலவை செய்வதையும் வெள்ளையடிப்பதையும் குறைத்துக் கொள்கிறோம். தாமதப்படுத்துகிறோம். இதற்கு முதலிடம் கொடுக்காது உணவுக்கே முதலிடம் கொடுக்கின்றோம். ஆனால் மூளைச் சலவை செய்வதை மட்டும் நாம் குறைத்துக் கொள்வதில்லை.

மூளைச் சலவை என்னும் சொற்றொடர் அண்மைக் காலத்தில் உளவியலிலும், தத்துவஇயலிலும் அரசியலிலும் பலமாக அடிபட்டு வருகின்றது. சமயத் துறையிற்றான் அது மிக மோசமாகவே உபயோகப்படுகிறது. பெரும் பான்மையான பொதுமக்களுக்கு மூளைச் சலவையைப் பற்றிய உண்மை விளக்கம் தெரியாது. தாம் மூளைச் சலவை செய்யப்படுகின்றோம் என்பதையே அறியாது அதற்கு அடிமையாகி விடுகின்றனர். அதனால் அவர்கள் பாமரராகவும், பிறரைப் பின்பற்றும் மந்தைகளாகவும், சுயாற்றலும், சுய விவேக விளக்கமும் இன்றிச் செயற்படுகின்றனர். துணிமணிகள் சலவை செய்யப்படுவதை நாம் சுலபமாகக் கண்டறிந்து கொள்கிறோம். மூளை சலவை செய்யப்படுவதை அவ்வளவு சுலபமாகக் கண்டுபிடித்தல் இயலாது. அதன் போக்கு புல்லின் கீழ் சர்ப்பம் போல மக்களைத் தாக்குகிறது. அது அழுக்கைப் போக்காது பூசி மெழுகி மறைக்கும் செயலாகும்.

புடைவைச் சலவையால் பெரும்பாலும் நாம் நன்மையே அடைகின்றோம். மூளைச் சலவையால் பெறும் பயன் அதிகமாகத் தீமையாகவே உள்ளது. மூளைச் சலவை செய்யப்பட்டோர் ஏவற் பசாசுகள் போலத் தாம் இன்னது செய்கிறோம் என்பதை அறியாது பல தீமைகளைச் செய்கிறார்கள். இவர்களுடைய நெஞ்சம் உட்சுவர் உழுத்திருக்கப் புறச்சுவர் பூசப்பட்டது போலாகும். வெளிப்பூச்சு உட்சுவரின் உழுத்தலை நீக்கி விடாது உழுத்தல் அதிகரித்துக் கொண்டே போகும். சுவரின் வீழ்ச்சிக்கு வித்தாகும் உழுத்தலையும், விரிசலையும் வெள்ளை அடிப்பதனால் நீக்கிவிடு

தல் இயலாது. அதே போல் மனத்தைப் பாதிக்கும் தீமைகளை மூளைச் சலவையினால் நீக்குதல் முடியாது. முளைசாலிகளான தலைவர்கள் மக்களை மூளைச் சலவை செய்து தமது காரியத்தில் வெற்றி பெறுகின்றனர். பேரும் புகழும் அடைகின்றனர். சுண்ணாம்பு வெள்ளைக்கு நீலம் உபயோகிக்கப்படுதல் போல மூளைச் சலவைக்கு அற்புதங்கள் உபயோகிக்கப்படுகின்றன. புடவைச் சலவைத் தொழிலாளர் ஏழைகளாக வாடுகின்றனர். மூளைச் சலவைத் தொழில் அதிபர்கள் இன்று உலகைப்பல துறைகளிலும் ஆட்டிப் படைக்கின்றனர். இவர்களுடைய மூளைச் சலவைக்கு உட்பட்டவர்களாலேயே மனித பிரச்சினைகள் பூதாகாரமாக உருவெடுத்து வருகின்றன. பயங்கரவாதங்களுக்கு இவர்களே முக்கிய காரணமாவர். தலைவர்கள் ஆக்கும் கட்சிகளில் கச்சை கட்டி நிற்போர் மூளைச் சலவை செய்யப்பட்டோராவர்.

புராண இதிகாச இலக்கிய சமய தத்துவ நூல்களில் ''மூளைச் சலவை'' என்னும் சொற்றொடர் இடம் பெற்றுள்ளதாகப் புலப்படவில்லை. எனினும் இலைமறை காய்மறையாக இதன் பொருள் பொதிந்த வேறு சொற்றொடர்கள் தமிழ் மொழியில் இருப்பதைக் காணலாம். இச் சொற்றொடரை நாம் இன்று ஆங்கிலம் மூலமாகவே பெற்றுள்ளோம். உளவியல் அறிவாளிகளே இதனைப் பெரிதும் அறிந்து போதித்து வருகின்றனர். கல்வியாளர்கள் இதில் போதிய கவனம் செலுத்தி இளைஞர்களை மூளைச் சலவையில் இருந்து பாதுகாத்தல் தமது முக்கிய கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். மூளைச் சலவையில் சுவை கண்டோருக்கு மனிதாபிமானமும் சுதந்திரவேட்கையும் கிடையாது. அவர்கள் மந்தைகளாவர்.

உளவியலாளர்கள் மூளைச் சலவையைப் பற்றி கூறும் வியாக்கியானத்தை முன்பு அறிந்து கொண்டு சித்தாந்திகளுடைய விளக்கத்தைப் பின்பு ஆய்தல் பயனுடையதாகும். எமது நோக்கம் மக்கள் யாவரும் மூளைச் சலவையிலிருந்து விடுதலை பெற்று சுயசிந்தனையும், சுயாற்றலும், சுயதெளிவும் பெற்றுச் சொந்தக் காலில் நின்று எதையும் சாதிக்கும் வல்லமை பெறுதல் வேண்டும் என்பதாகும். மூளைச் சலவையில் இருந்து விடுதலை பெறாதோர் இந்நிலை அடைந்து இனிது வாழ்தல் அரிது. மூளைச் சலவை யென்பது பூரணத்துவம் இல்லாத மனச் சார்புக் கொள்கைகளையும் மனோ விகாரத் தூண்டுதல் மூலம் மக்களுடைய மன அயர்வுப் புலத்தில் பதிய வைத்தலாகும். மன அயர்வுப் புலத்தில் இங்ஙனம் பதியப்பட்ட மனச் சார்புக் கொள்கைகளை மாற்றி அமைத்தல் அரிதாகும். இதனால் பலத்த மனப்பான்மை ஏற்படுகிறது. சுருங்கச் சொல்வதாயின் இத்தகைய மனப்பான்மையை



மனோ விகாரத்தூண்டுதல் மூலம் மக்களிடையே உண்டாக்குதல் மூளைச் சலவையாகும்.

இதைப் பற்றித் திருவள்ளுவர் மிகவும் தெளிவாகப் புல்லறிவாண்மை என்னும் அதிகாரத்தில் அறிவுறுத்தியுள்ளார். இதை அற்றம் மறைக்கும் புன்மைச் செயலென விளக்குகிறார். இந்த மூளைச் சலவையை வெண்மையென அழகாக வர்ணிக்கிறார். வெண்மையை விளக்கும் திருக்குறள் இங்கு தரப்படுகிறது.

''வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை உடையம் யாம் என்னுஞ் செருக்கு'' - ஆகும்.

மூளைச் சலவை செய்யப்பட்டவனே புல்லறிவாளனாவான். அவன் பிறரால் மன ஆதிக்கம் செய்யப்பட்டு ஏவப்படுபவனாவான். உண்மை தெளியான். அவனைப் பற்றி வள்ளுவர் மேலும் கூறுவதாவது.

''காணாதாற் காட்டுவான் தான் காணான் காணாதான்
கண்டானாம் தான் கண்டவாறு.''

என விளக்குகிறார். நடுவு நிலைமையாம் சார்புக் கொள்கை உடைய தேசிய, சமய இனவாதங்களுக்கு இவன் முதலிடம் கொடுப்பான். இவன் இங்ஙனம் நடந்து கொள்வதற்கு மூலகாரணம் மூளைச் சலவையாகும். சான்றோர்கள் உண்டெனக் கூறுவதை இவன் இல்லையென மறுப்பான். ''ஒன்றே குலம் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை'' எனத் திருமூலர் அறிவுறுத்திய உண்மையைக் கற்றறிந்த போதும் அதற்குத்தக நிற்க மாட்டான். நமனை நினைந்து அஞ்சிச் சாகாமற் சாவான். அச்சமே இவனுடைய ஆசாரமாகும். நிரந்தரமாக உலகில் ஏதுமில்லை என்பதை உணராது அவதார புருஷர்களிடம் நிரந்தரமானதைத் தேடி ஓடி மண்டியிட்டு அதைப் பெற வேண்டிப் பிரார்த்திப்பான்.

இத்தகைய மனப்பான்மை உடையவனை வள்ளுவர் அலகை யெனக் குறிப்பிடுகிறார். அலகை என்பவன் அற்றம் மறைக்கும் சமயமானவாவான். அவன் மெய்ஞ்ஞானத்தை மூடி மறைப்பவனாவான். அவன் மனித குலத்தையே கெடுக்க வந்த கோடாரிக் காம்பு போல்வான். கோடாரிப்பிடி மரத்தினால் செய்யப்பட்டதாகும். அது தனது குலத்தைச் சேர்ந்த பிறமரங்களை வெட்டி வீழ்த்த உதவுகிறது. அலகையின் செயலும் அத்தகையதாகும். மெய்ஞ்ஞானத்தை மூளையறிவு மறைக்கின்றதென்பதை இவன் ஒரு போதும் தெளிந்து உணரமாட்டான். மாயையின் உருவமே அறிவென்பதை மறுப்பான்.

''மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்''

என்னும் திருமந்திரம் இவன் செவியில் ஏறாது. மாயை கொண்டு செயற்படும் அற்புதங்களும், அறிவுரைகளும் இவனுடைய மூளையைச் சலவை செய்யும் போது இவன் மெய்ஞ்ஞானம் பெறுதல் எங்ஙனம் ஆகும்? அறிவு, அறியாமை இரண்டும் அகற்றிச் செறிவறி வாயெங்கும் நிற்கும் பரம்பொருளை மாயா உடம்பிற் கட்டுண்டு பிறந்து இறக்கும் அறிவாளிகளின் உபதேச வாக்கு மூலம் காணலாம் எனப் பகற் கனவு கொள்வான். இவன் எதைக் கற்றாலும், கேட்டாலும் இவனுடைய மூளையில் வெள்ளையடிக்கப்பட்ட அறிவே மேலோங்கும்.

''நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்'' எனும் குறள் இவனுக்கு எடுத்துக் காட்டாகும்.

இவனுடைய மனப்பான்மையை மாற்றி அமைத்தல் சுலபமாகாது. இவனை இன்னொருவகையில் உளவியலாளர் பிறர் மன நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவன் எனக் கூறுவர்.

புடைவைச் சலவைக்கும், மூளைச் சலவைக்கும் இடையே பெரியதொரு வித்தியாசம் உண்டு சலவை செய்யப்படும் புடைவை உயிரற்ற சடப் பொருளாகும். எனவே அது நன்மை தீமையாகிய இரு வினையாற் பாதிக்கப்படுவதில்லை. மூளைச் சலவை செய்யப்படும் மனிதன் பகுத்தறிவுள்ள சீவனாகும். அவன் மூளைச் சலவையினால் பெரிதும் பாதிக்கப்படுகிறான். அவன் பொய்யான வெண்மையடைந்து விட்டதாக அகங்காரம் மேலோங்கப்படுகிறான். அதனால் அவன் இருவினைகளை முடிவின்றி ஆற்றிய வண்ணம் சம்சார சாகரத்தில் ஆழ்கின்றான். தன்னிடம் ஏற்பட்ட மன நிபந்தனைகளை நீக்குதல் வேண்டும். புடவைச் சலவைத் தொழிளாளியுடைய செயலினால் புடவை தீய பாதிப்புகளுக்கு உட்படுவதில்லை. தொழிலாளி ஏதோ சொற்ப ஊதியம் பெறுகின்றான் அவ்வளவுந்தான்.

மூளைச் சலவைத் தொழிலாளி தன்னை ஒரு தொழிலாளியெனக் காட்டிக் கொள்வதில்லை. பெரும்பாலும் அவன் தன்னை மக்களுடைய தலைவனாகவும் மதகுருவாகவும், அவதார புருஷனாகவும் காட்டிக் கொள்வான். தனது மனோவசிய சக்தியினால் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வான். அதனால் பேரும் புகழும் அளப்பரிய இலாபமும் பெற்றுக் கொள்வான். இவனால் மூளைச் சலவையைச் செய்யப்பட்ட மக்கள் பெறும் இலாபமென்ன? இதைத் தூய திருக்குறள் மொழியில் கூறுவதாயின்.

''பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருளானாம்
மாணாப் பிறப்பு''

எய்துதல்தான் இவன் பெறும் இலாபமாகும். இது ஒருவன் பெற வேண்டிய உண்மையான இலாபம் அல்ல. பகுத்தறியும் சக்தியை



மூளைச் சலவை செய்யப்பட்டோர் இழந்து விடுகின்றனர். இவர்கள் போலிமதக் கொள்கைகளும் அரசியற் கோட்பாடுகளும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் தொண்டர்களாகவே கருதிக் தற்பெருமை தப்பட்டம் அடிக்கின்றனர். இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை இவர்களே சரிவர உணர்வதில்லை. மூளைச் சலவைக்குட்பட்ட சனநாயகம் விபரீதமாக வெளிப்படும்.

மூளைச் சலவைத் தொழிலாளிகள் உபயோகிக்கும் கருவிகளுள் முக்கியமானது மனோவசிய சக்தியென்பதை அறிந்தோம். இச் சத்தியினால் பல அற்புதங்களைக் கூடச் செய்து காட்டி மக்களுடைய மூளையை வெள்ளையடித்து விடுகிறார்கள். இதற்கு மேலாக கலை, கலாசாரம் என்ற போர்வையில் மூளைச் சலவை செய்கிறார்கள். இவற்றையெல்லாம் வழுவறத் தெளிந்து உணர்ந்த தத்துவஞான யேதை கிருஷ்ணமூர்த்தி இவற்றில் இருந்து விடுதலை பெறுவதற்கு வேண்டிய விவேகப் படைப்புச் சக்தி அல்லது மாசற்ற உள்ளொளியெனக் கூறுகிறார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகவும், பரம்பரை பரம்பரையாகவும் மக்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு வருகிறார்கள். உலகம் பூராவுள்ள பூசல் பிணக்குகளும் சண்டை சச்சரவுகளும் மனநிபந்தனைகளை உண்டாக்கும் மூளைச் சலவையாலேயே உருவாகின்றன. மக்களை மந்தைகளாக்கும் போலிக் கல்வியும் கலாசாரமும் நீக்கப்பட்டு மெய்யுணர்தலை நல்கும் தூய எதிர்மறைக் கல்வி முறை அனுசரிக்கப்படாவிடின் மக்கள் விமோசனம் பெறுதல் அசாத்தியமாகும்.

மூளைச் சலவை மூலம் பெறப்படும் சுட்டறிவு மாயவிளக்குப் போல நின்று மறைந்திடும் என்பது திருவருளால் பெறப்படும் வியாபக அறிவு சேய விளக்கினைப் போன்று நின்று சுடர் விடுமெனவும் திருமூல நாயனார் தெளிவுபடுத்துகிறார். எனவே நின்று சுடர் விடும் சேய விளக்கினைத் தான் தேடுவதாகவும் எம்மையும் அதைப் பெறும்படியும் அறிவுறுத்துகிறார். சித்தாந்தத்தாலே தான் மக்கள் மன நிபந்தனைகளிலிருந்து முத்தியாகிய விடுதலை பெறுவார் என்பது திருமூலரின் துணிபாகும். சித்தாந்தம் என்பது மாயா விளக்காகிய சுட்டறிவின் அந்தமாகிய முடிபாகும். சுட்டறிவின் முடிபிலேதான் முத்தி சித்திக்கும். இங்ஙனம் விடுதலை பெற்றோரே சிறப்பெனும் வியாபகமாகிய செம்பொருளாக விளங்குவர். மன அறிவின் முடிபே சித்தாந்தமாகும். நூல் அறிவின் முடிபு வேதாந்தமாகும். இவை இரண்டுமே சிவனாகிய மெய்ப்பொருளைக் காட்டும். இதனை விளக்கும் திருமந்திரம்:

சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாத்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாத்தங் காட்டுஞ் சிவனையே.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது மூளைச் சலவைக்கு முக்கிய இடம் கொடுக்கக் கூடாதென்பதாகும்.



156912

# மனதில் எதனையும் காவிச் செல்லாதவனே மெய்ஞ்ஞானி!

கோடிக் கணக்கான பணமும் நகைகளும் கொள்ளை! மக்கள் வங்கி இரும்புப் பெட்டி உடைப்பு! பாதுகாவலர் படுகொலை! துப்பறியும் நிபுணர் துருவி ஆய்தல் - கொள்ளையர் தடயம் எதுவும் விடாது தப்பிச்செல்லுதல்'' இப்படியான செய்திகள் பத்திரிகைகளின் தலையங்கமாக வருதல் இன்று சாதாரணமாக உள்ளது. கைதேர்ந்த கள்வர்கள் தாம் களவாடும் திட்டத்தில் தடயங்கள் எதுவும் விடாது தப்பிச்செல்லும் கலையை நன்கு கற்றுள்ளனர். களவு வித்தையில் இது ஒரு முக்கிய அம்சமாகும்.

உளவியல் ரீதியில் இத்தகையதோர் களவுவித்தையை நாயன்மார்கள் தெளிந்து கையாண்டு தமது வாழ்க்கையில் வீடுபேறு பெறுவதில் வெற்றி கண்ட வரலாற்றைப் பெரியபுராணம் கிளந்து தெளிவுறக் கூறுகிறது. மூன்று வயதுக்குழந்தை கூட அக்காலத்தில் ஞானப்பால் உண்டதன்பேறாக இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது. சைவசித்தாந்தம் கூறும் களவியலை மேற்கொண்ட அம்மை - அப்பன் ஞானக்குழந்தையின் முன்பு உள்ளங்கவர் கள்வனாகவே தோன்றினார். அந்த அற்புதமான ஆத்மீக கள்வன் தான் எப்படி வந்தேன்? எங்கிருந்து வந்தேன்? எங்கு செல்கிறேன்? என்னும் தடயங்கள் எதுவும் விடாமலே ஆளுடைப்பிள்ளையை ஆட்கொண்டு சென்றார்.

இதையுணர்ந்த திருநாவுக்கரசர் பெருமான், திருவையாறு ஸ்தலத்தைத் தரிசிக்கச் சென்ற போது எப்படிச் சென்று அங்கு கண்டறியாதனவற்றைக் கண்டு தெளிந்ததாக, ''மாதர்ப்பிறைக் கண்ணியானை'' என்னும் தேவாரத்தில் எமக்கு அறிவுறுத்துகிறார். இறைவனுடைய திருப்பாதங்களை அடைய முற்படும் அடியார்கள் அவனை முழுமையாகத் தரிசிக்க வேண்டும் எனின், அவனுடைய ஸ்தலத்துக்கு நிலத்திலே எவ்விதமான சுவடும் படாமல் நடந்து செல்லுதல் வேண்டும் என அறிவுறுத்துகிறார். நிலத்தில் மட்டுமல்ல, தமது இதயத்திலும் கூட எவ்விதமான எண்ணச் சுவடுகளையும் பதிக்காமற் செல்லுதல் வேண்டும் என்பது அவருடைய நல்லுபதேசமாகும்.

தம்மைத் தடுத்தாட்கொண்ட ஆரா அமுதனைச் சுந்தரமூர்த்தி நாயகனார் ''பித்தா'' எனப் போற்றிப்பரவசப்பட்டு விளித்துப் பாடுகிறார். உள்ளங்கவர் கள்வன் இங்கே பித்தாப்பிறை சூடியாகக் காட்சியளித்தல் எமது உண்மை விளக்கத்துக்கு உரியதாகும். சாதாரணமாக நாம் ஒருவனைப் பித்தன் என அழைத்தால்



அவனுக்கு எவ்வித கோபம் உண்டாகிறது? ஆனால் எம்பெருமானாகிய பரம்பொருளைச் சுந்தரமூர்த்தி நாயனார் பித்தனென விளித்துப் பாடிய பொழுது எவ்விதகோபமும் அடையவில்லை. ஏனெனின் பித்தனுடைய போக்கு எதையும் மனத்தில் சுவடுபடுத்தித் திட்டமிட்டுக் காவிச் செயற்படாமையாகிய அற்புதமான செயற்பாடாகும். இத்தகைய தன்மை சுட்டறிவாளரிடமில்லை. மெய்ஞ்ஞானியர் எதையும் மனத்தில் காவிச்செல்வதில்லை.

இதையே சுவடுபடாமல் செல்லுதல் என்பது மறைபொருளாகும்.

இதே உண்மையை மாணிக்கவாசகப் பெருமான் தமது கோயில் திருப்பதிகத்தின் ஏழாவது திருவாசகச் செய்யுளில் மிகவும் அற்புதமாக ''இன்றெனக் கருளி இருள் கடிந்துள்ளத்து - எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை, நினைப்பற நினைந்தேன்'' என விளக்குகிறார். சுவடுபடாமல் செல்லுதல், தடுத்தாட்கொள்ளுதல் - உள்ளம் சுவடுபடுதல் - நினைப்பற நினைந்தல் ஆகிய நான்கு உபதேசங்களும் நால்வர் வாயிலாக வந்த பீடுடைத் தேசிகன் பேரருளாகும். இவையாவும் சைவசித்தாந்தச் சாதனா நெறியை வழுவற விளங்குவனவாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வேறுபாடில்லாது நான்கு மார்க்கங்களிலும் சமமாக விரவி நின்று வழிகாட்டுவனவாகும்.

சைவசித்தாந்தமாகிய தேரின் அச்சாணி போன்ற இந்தச் சுவடுபடாமல் செல்லும் - சாதனாமுறை இன்று வழக்கு ஒழிக்கப்பட்டிருப்பதையே காண முடிகிறது. அச்சாணியற்ற தேர் ஆட்டம் கண்டு விட்டது. அது கழன்று வீழ்ந்து உடைந்து விடாமற் பாதுகாக்கப்படுதல் வேண்டுமாயின் கழன்ற அச்சாணியை நாம் மீண்டும் பொருத்துதல் வேண்டும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் முத்துக்களின் ஊடாகச் சென்று, அவற்றை ஒன்றிணைத்து வைக்கும் நூலை நாம் அறுத்து வீசிவிட்டுச் சிறு பிள்ளைகள் போல அறுத்த முத்துகளை வைத்து விளையாடுகிறோம். இந்த விளையாட்டில் முத்துமாலையைக் காணாது வருந்துகிறோம்.

புத்தபெருமான் கூடத் தமது தம்மபதத்தின் ஏழாவது அதிகாரத்தில் ''அறு ஹாத்'' சீவன் முக்தர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது யாதும் சுவடுபடாமல் சீவன் முக்தர்கள் தியானநெறியில் செல்ல வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். 'சீவன்முத்தர்களுடைய பாதை வெறுமையானதும். அடையாளம் அற்றதுமாகும். ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகள் காற்றில் எவ்விதமான சுவடுகளையும் விட்டுச் செல்வதில்லை அங்ஙனமே சீவன் முக்தர்கள் (சுட்டறிவுச்) சுவடுகளை இதயத்தில் பதித்து விட்டுச் செல்வ

தில்லை'' என்போதனை செப்புகின்றார். இது சைவசித்தாந்த சீவன்முக்தர்களுக்கும் ஏற்ற உபதேசமாகும்.

சிந்தனைகளையும், நினைவுகளையும் தொட்டுப் பற்றிப் பிடித்துச் செல்லும் பாதை இருவினையாளர்களுக்கே உரியதாகும். இதை இருள் சேர் மருட்பாதை எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். சிவன்முக்தர்களாகிய உண்மைத்துறவிகள், இல்லறத்திலும் வாழலாம். ஆனால் அவர்கள் இருசேர் இருவினை ஆக்கும் சுட்டறிவின் தன்மையைச் சரிவர உணர்ந்து அதனைச் சார்ந்து வடுபட நடவாது நீங்குதல் வேண்டும். இதுவே சிவன்முக்தர்கள் செய்ய வேண்டிய தாரணை, தியானம், சமாதியாகிய மூன்று முக்கியமான சாதனைகளாகும்.

இச் சாதனையை இன்னொரு விதமாக விளக்குவதாயின் தூய சைவசித்தாந்த நெறியில் தீக்கை எனலாம். தீக்கை என்பது மும்மல நீக்கத்தைப் படிப்படியாகச் செய்வதைக் குறிப்பதாகும். துரதிஷ்ட வசமாக அது இன்று புற அனுட்டானங்களையும் செய்யும் நெறியுடன் நின்று விடுவதைக் காண்கிறோம். மூன்று விதமான தீக்கைகள் அனுட்டானத்துக்கு உரியனவாகும். அவை சமயதீக்கை, விசேட தீக்கை, நிர்வாணதீக்கை என்பனவாகும். சமயதீக்கை ஆன்மாவின் மாயை நீக்கத்தையும், விசேடதீக்கை கர்மநீக்கத்தையும், நிர்வாண தீக்கை ஆணவ நீக்கத்தையும் கொடுப்பனவாகும்.

மூன்று மலங்களாலும் பிடிக்கப்பட்ட சாதாரண மக்களை சகலர் என்றும், இரண்டு மலங்களாற் பிடிக்கப்பட்டவர்களைப் பிரளயாகலர் என்றும், ஒரு மலத்தாற் கட்டுப்பட்டவர்களை விஞ்ஞானகலர் என்றும் மும்மலங்களையும் முறைப்படி தீக்கை முறைகளினால் அறுத்தவர்களையே சிவன்முக்தர் எனவும் சைவசித்தாந்தம் வழங்கும். மூன்று தீக்கை அனுட்டானங்களிலும் பொதுவாகச் சிறந்து விளங்குவது யாதும் வடுபடாமல் செல்லும் அற்புதமான சிவக்கலை நெறியாகும். இக்கலை எதிர்மறைக்கல்விப் பயிற்சி முறையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வருண தருமத்தில் ஊறிப்போன பிராமணர்கள் தமது பிள்ளைகளுக்கு உபநயனமும். மற்றும் சாதியைச் சேர்ந்த பிள்ளைகளுக்குத் தீக்கையும் வழங்கி வருவதை இன்று கூடச் சைவ உலகில் சாதாரணமாகக் காண்கிறோம். இங்ஙனம் உபநயனம் பெறும் பிராமணப் பிள்ளைகளாயினும் சரி, தீக்கை பெறும் சூத்திரப் பிள்ளைகளாயினும் சரி, மும்மலமும் நீங்கப்பெற்ற சிவன்முக்தர்களாக வருவதை மருந்துக்கேனும் காணோம். எனவே உபநயனம் பெரிதா? தீக்கை பெரிதா? என்னும் வீண்சர்ச்சையை இவண் கிளப்பிக் குளவிக் கூண்டுக்குக் கல்லெறியாது விடல் சிறப்பாகும். செய்வன திருந்தச் செய்யாவிடின் எக்காரியத்திலும் சித்தி பெறுதல் அசாத்தியமாகும் என்பதை நினைவு கூருகிறோம்.



உபநயனத்தையாயினும் சரி, தீக்கையாயினும் சரி உரிய முறையில் உண்மை விளக்கம் பெற்று அனுட்டித்தால் மக்கள் மலபரிபாகம் பெறுதல் நிச்சயமாகும். எனவே பொது மக்களுக்கு முக்கியமான தீக்கை அனுட்டானத்தைப் பற்றி விசாரணை செய்து உண்மை விளக்கம் பெறுவோம். சிவாகம விதிப்படி அனுட்டிக்க வேண்டிய மூன்று தீக்கை நெறிகளைப் பற்றியும் திருமந்திரம் எடுத்தோதுவதை இதோ தருகிறோம்:-

சமைய மலசுத்தி தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடமு மானமந் திரசுத்தி
சமையநிர் வாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞான மானார்க் கபிடேகமே

இவ்விடத்தில் தீக்கை என்பது அறநெறிக்கு உட்பட்ட மனமாசு நீக்கம் என்பதையும், அது வெறும் புறச் சடங்கு அல்லவென்பதையும் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். மன மாசுகளைச் சுத்தி செய்யும் அனுட்டான முறையையே திருமூல நாயனார் வலியுறுத்துவதைக் காணுகிறோம். மலசுத்தி செய்யும் மூன்று தீக்கையாக விளக்கும் திருமூலர் புறச்சடங்குகளை இங்கு சிறிதேனும் குறிப்பிடவில்லை. அவர் கூறுவதெல்லாம் மலசுத்தி மந்திரசுத்தி கலாசுத்தி ஆகிய தீக்கை முறைகளையுமேயாகும். தீக்கை வழங்கும் பிராமணக்குருக்கள் எவரும் இதைப் பற்றிச் சீடர்களுக்கு ஒன்றுமே உபதேசஞ் செய்யாது விடுதல் விசனத்துக்குரியதாகும்.

சுருக்கமாக விளக்குவதாயின் சைவ சித்தாந்த தீக்கை நெறி அத்துவாசுத்திக்கு முதலிடம் கொடுப்பதாகும். அத்துவா என்னும் வடசொல்லைத் தமிழில் வாயில்கள் எனக் கூறலாம். அதாவது மனிதன் இருவினையாகிய கன்மங்களைச் செய்வதற்கு வாயில்களாக உள்ளனவற்றையே அத்துவாக்கள் எனக் கூறப்படும். அத்துவாக்கள் ஆறாகும். அவையாவன எழுத்து, சொல், சொற்றொடர், நிலம், பொருள், செயல் என்பனவாகும். இவற்றுக்கு உரிய மூன்று கருவிகளாவன மனம், மொழி, மெய் ( உடல் ) என்பனவாகும். ஆன்மாக்கள் செய்யும் இருவினையாகிய பாவ புண்ணியமெல்லாம் இந்த அறுவகை அத்துவாக்களில் அடங்கி நிற்கும். இவற்றைத் தூய்மை செய்வதே உத்தம தீக்கையாகும்.

# சாம்பரில் உருவாகும் விநோத சிருஷ்டி!

வினோதமான சில பறவைகளைப் பற்றிப் பண்டைய இதிகாசங்களிலிருந்து புதுமையான கதைகளை அறிகிறோம். அவைகள் கவிஞரின் கற்பனையோ அல்லது பாரம்பரியமாக வந்த உண்மைகளோ என நிச்சயப்படுத்துதல் நமது நோக்கமல்ல. ஆனால் அவற்றின் மூலம் நாம் சில நல்லுபதேசங்களைப் பெறக்கூடியதாக உள்ளது. இராமாயணத்தில் வரும் சடாயுப் பறவை மக்களுக்குப் பலபோதனைகளைப் படிப்பிக்கின்றது. இராவணன் புரிந்த அநீதியைக் கண்டும் காணாததுபோல சடாயு சும்மா இருக்கவில்லை. தனது உயிரையே பொருட்படுத்தாது இராவணனை எதிர்த்துப் போர் புரிந்தது. வெற்றி பெறாவிடினும் வீரமரணம் எய்தியது. தியாகத்தின் சின்னமாகக் கம்பன்வாயிலாக அது இன்றும் திகழ்ந்து தமிழ் நாட்டில் வீரத்தாண்டு கோலாகத்திகழ்கிறது. அது இறக்கு முன்பு ஸ்ரீராமனுக்குத் தனது செய்தியை ஓரளவேனும் கூறிய பின்பே இயற்கை எய்தியது.

இராமாயண இதிகாசத்தில் வரும் சடாயுவைப் போலப் பண்டைய எகிப்திய நாட்டு இதிகாசத்தில் ஓர் அற்புதமான கற்பனைப் பறவையின் பெயர் வருகிறது. அது தான் பினிக்ஸ் என்பதாகும். அது பல நூற்றாண்டு காலம் வாழக்கூடிய ஆயுட்பலம் பெற்றிருந்தது. தனது மரண காலத்தை முற்கூட்டியே உணரும் வல்லமை கிடைக்கப் பெற்றது. எனவே அது தனது மரணத்தை அதி அற்புதமான முறையில் ஆனந்தமாக வரவேற்றது. தனது மரணச் சிதையைத் தானாகவே காய்ந்த சிறுவிறகுச் சுள்ளிகளால் அமைத்துக் கொள்ளும். தனது சிதையை இங்ஙனம் தானாகவே ஆக்கிக் கொண்ட பின்பு அதன் மேல் படுத்துக் கொள்ளும். தனது சிதைக்குத் தீ மூட்ட மக்களைப் போல எந்த உற்றார் உறவினரின் தயவையும் முற்கூட்டியே அது எதிர்பார்த்ததில்லை. விநோதமான முறையில் தனது சிதைக்குத் தானாகவே தீ மூட்டி இறந்து விடும். அது எங்ஙனம் தீ மூட்டிக் கொள்கிறது? அதை அறிவதே ஆச்சரியமாகும். சிதையில் இருந்தவண்ணம், அது தனது இறக்கைகளை மிகவேகமாக அடித்துக்கொள்ளும்.

அதன் இறக்கைகளில் என்ன இரசாயனப் பொருள் இருந்ததோ யார் அறிவார்? எந்த விஞ்ஞானியும் அதை ஆய்ந்ததில்லை. எனினும் இறக்கைகள் அடிக்கப்படும் வேகத்தில் காற்றுடன் உரோஞ்சுப்பட்டுச்சுயமாகவே இறக்கைகள் தீப்பற்றிக் கொள்ளும். இங்ஙனம் பற்றிய தீ அதன் சிதையைத்தாவி மூண்டெரியும். அந்த அக்கினிப் பிளம்பில் அது அமைதியாகக் கிடந்து பஸ்மம் ஆகிவிடும். முடி சார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பராவது போல அதன் கதியும் ஆகிவிடும். எந்த ஒரு மன்னரும் சாம்பரிலிருந்து மீண்டும்



உயிர்பெற்று இளமையுடன் எழுந்ததாக இதிகாசங்களில் இல்லை. ஆனால் பினிக்ஸ் பறவையோ எனின் தனது சாம்பரிலிருந்து யௌவன உருவத்துடன் மீண்டும் உயிர் பெற்று எழும் அற்புதத்தை எகிப்திய புராண இதிகாசத்திலிருந்து அறிகிறோம். சாம்பரிலிருந்து உயிரினம் சிருஷ்டியாகும் மர்மத்தை எகிப்திய பண்டைய அறிஞர் கண்டனர்.

இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் உயிரினம் உலகில் முதன் முதல் சாம்பர் மூலமே சிருஷ்டிக்கப்பட்டதெனும் உண்மையை ஊர்ஜிதப் படுத்துகின்றன. எரிமலைகளிலிருந்து வெளியே வீசப்படும் அக்கினிப் பாறைக்குழம்பு பூமியின் தரையில் வீழ்ந்து குளிர்ந்து சாம்பராகின்றது. இந்தச் சாம்பரில் உயிரினத்தை ஆக்கும் சக்தி இருப்பதை ருஷ்ய விஞ்ஞானிகள் அண்மையில் கண்டு பிடித்துள்ளனர். எரிமலைச் சாம்பர் மழைவெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுச் சமுத்திரத்துடன் கலக்கின்றது. இங்ஙனம் சமுத்திரத்தில் கலக்கப்பட்ட சாம்பரிலிருந்து தான் உலகில் ஒற்றைக் கலனுடைய அமீபா என்னும் ஜீவ அணு முதன் முதலாகச் சிருஷ்டிக்கப்பட்டதென அறிகின்றோம். இயற்கைப் பரிணாமக்கிரமத்தில் உயிரினம் விருத்தியடைவதற்குப் பல கோடி வருடங்கள் சென்றன. இயற்கைச் சிருஷ்டிதான் இறைவனின் அற்புதமான அமைப்பாகும். இந்த இயற்கை நியதிக்கு மாறான செயற்கையான ஒரு அச்சு வார்ப்பு மூலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான் என்னும் கொள்கை மெல்ல மெல்ல அருகி வருகிறது. இயற்கையிலேயே இறைவனைத் தரிசிக்கும் இந்தியதத்துவஞானிகள் இயற்கைப் பரிணாமக்கிரம முறைச் சிருஷ்டியை இறைவனுடைய அமைப்பெனவே கருதுகின்றனர்.

சன்மார்க்கமென்னும் சத்தியநெறியை அனுசரித்த தமிழ்நாட்டுத் தலைசிறந்த சமயகுரவரும் தத்துவஞானியுமாகிய மாணிக்கவாசக சுவாமிகள் பரிணாம உண்மையைத் தமது சிவபுராணத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். ''புல்லாகிப் பூடாகி'' எனத்தொடங்கி, ''முனிவராய்த் தேவராய்ச் செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' என அவர் குறிப்பிடுவது ஆய்வுக்குரியதாகும். பரிணாமக்கிரமத்தில் உயிரினம் சுயமாகவே விருத்தியடையும் சக்தியை இறையருளாலே பெற்றுள்ளது. இதை நன்கு உணர்ந்த மாணிக்கவாசகப் பெருமான் இறைவன் நேரடியாகவே மனிதனைத் திடீரென அச்சுவார்த்து உருவாக்கினான் எனக்கூறாது ''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' என எடுத்துக்காட்டியது விஞ்ஞானத்துக்கும் மெய்ஞ்ஞானத்துக்கும் மிகவும் பொருத்தமாக உள்ளது.

உயிரினம் மட்டுமல்ல மனிதனுக்கு மெய்ஞ்ஞானம் சிருஷ்டியாவதும் கூட, சாம்பரிலிருந்து தான் என்பதைச் சைவ சித்தாந்தம்

திருநீறு மூலம் புலப்படுத்தி மக்களை ஆத்மிகத்துறையில் நெறிப்படுத்துவதை நன்கு தெளிகிறோம். சாம்பரில் உருவாகும் விநோதச் சிருஷ்டியான மெய்ஞ்ஞானத்தைப் பற்றிய உண்மை விளக்கம் சரிவரப்பெறாது அதைச் செயற்கை அற்புதத்தால் திடீரெனச் சிருஷ்டித்து அணிவிக்கும் பேதைமையை என் சொல்வது? பசுவின் மலம் அக்கினியாற் சாம்பராக்கப்படும் போதே புனிதமான திருநீறு உருவாகிறது. இதேபோல ஆத்மாவின் மும்மலமும் திருவருளால் சாம்பராக்கப்படும் போதே தூய பூரணமான மெய்ஞ்ஞானம்— பீனிக்ஸ் பறவையைப் போன்று புதுமெனவனத்துடன் சிருஷ்டிக்கப்படுகிறது. திருநீறு உண்மை விளக்கத்துக்கு எடுத்துக் காட்டாக இருந்து சைவ மக்களை நெறிப்படுத்துவதாகும். பாசநீக்கத்துக்கு வேண்டிய சாதனை செய்யாது சைவ மக்கள் திருநீற்றைச் செயற்கையாகத் திடீரெனச் சிருஷ்டிக்கும் வைஷ்ணவ அற்புதத்தில் மதிமயங்குதல் மெய்ஞ்ஞானநெறியாகாது.

சாம்பரில் உருவாகும் விநோதமான புதியமெய்ஞ்ஞான சிருஷ்டியைப்பற்றி நவீன தத்துவ ஞானமேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1985 ஆம் ஆண்டு வெளியிட்ட ''காலத்தை முடிவுறுத்துதல்'' என்னும் நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார். இந்நூல் லண்டன் சர்வகலாசாலை பௌதிக இயற்பேராசிரியர் கலாநிதி டேவிட்போம் என்பவருக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் இடையே ஆறுமாத காலமாகத் தொடர்ந்து நடந்த 13 கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்டதாகும். இதன் ஐந்தாவது அத்தியாயத்தின் தலையங்கம் ''மனிதனின் மனமும் உயிரின் தாரகமும்'' என்பதாகும். இந்த அத்தியாயத்தின் முடிவில் கலாநிதி டேவிட்போம் எழுப்பிய வினாவுக்கு உகந்த விடையாக இவ்விளக்கம் அமைகிறது. ஆங்கிலத்திலுள்ள அதன் தமிழாக்கத்தை இவண் தருகிறோம்.

கலாநிதி டேவிட்:- சுட்டறிவு மூலம் மனிதன் ஒரு நிரந்தரமான தாரகத்தை உருவாக்க முயற்சித்துள்ளார். அறிவு ஒரு தாரகத்தைச் சிருஷ்டிக்க எத்தனித்தது. அது தான் நடந்துள்ளது.

ஜே. கி:- நாம் அறிவிலும், விவாதத்திலும் போட்டிகளிலும் மூழ்கியுள்ளோம். இவற்றில் நாம் மிகவும் விவேகிகள். ஒரு சிறு உண்மையை நாம் காண்பதில்லை. குருமார்கள் என்னிடம் மௌனம் அனுஷ்டிக்கும்படி கூறுகிறார்கள். மனித இனமே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இதை அப்பியாசித்து வருகிறது. இது என்னை எங்கும் இட்டுச் செல்லவில்லை. ஒரு காரியம் தான் விஞ்சியுள்ளது. அது யாதெனின் நான் செய்தனயாவும் உபயோகமற்றன என்பதைக் கண்டு பிடிப்பதாகும். சாம்பராகும்! இது பீனிக்ஸ் பறவையைப் போன்றதாகும்!



கலாநிதி:- சாம்பரிலிருந்து எழுவதாகும்!

ஜே. கே:- சாம்பரிலிருந்து சிருஷ்டிக்கப்படுவதாகும்! பூரணமான புதியதொன்று பிறப்பதாகும்.

கலாநிதி:- நீங்கள் முன்பு கூறியவாறு இது மனமென்னும் தாரகமாகுமா?

ஜே. கே;- மனமா? ஆம்! ஆனால் சிந்தனைப் பொதியாக உள்ள இந்த மனம் அல்ல. நான் கருதுவது உளவியல் மனத்தின் சாம்பரிலிருந்து சிருஷ்டியாகும் புதிய பூரணமனமாகும்.

கலாநிதி:- அது தெளிவாகிறது. தனது பொருளடக்கமாக உள்ள உளவியல் எண்ணங்களை எரித்த மனம்- ஒரு புதிய மனமாகும். அதுவே அகிலத்துவமான வியாபக மனமாகும். முடிவு: நா. செ. ஆம்! அது சைவ சிதாகாசமும் சிற்றம்பலமுமாகும். திருநீறே அதன் விளக்கமாகும்.

## இருளும் மருளும் அற்றதே அருள்!

ஐரோப்பிய நாடுகளைத் தனது குடை நிழற் கீழ்க் கொண்டு வந்தவன் வீரச் சக்கரவர்த்தி அலெக்ஸாண்டர். அவன் கிரேக்க நாட்டு முதுபெரும் முனி டயோஜிஸ் என்பவருடைய மகிமையைப் பற்றிக் கேள்விப்பட்டான். முற்றும் துறந்த அந்த மெய்ஞ்ஞானி ஓர் இருளடைந்த குகையுள்ளே தவ நிலையிலிருந்தான். குகையை விட்டு அவன் எங்கும் செல்லாதிருந்தபடியால் அவனைச் சந்திப்பதற்காக அலெக்ஸாண்டர் அவனுடைய குகைக்குச் சென்றான். குகை இருள் நிறைந்திருந்தபடியால் அதற்குள் செல்வதற்கு வழி காட்டும் பொருட்டு ஒரு கைவிளக்கை அவன் எடுத்துச் சென்றான்.

இருட்டிலிருந்த டயோஜினிஸின் முகத்தை நன்கு பார்க்கும் பொருட்டு சக்கரவர்த்தி கைவிளக்கை உயர்த்திப் பிடித்தான். விளக்கொளியை விரும்பாத ஞானி அங்கு எவரையும் விளக்கைக் கொண்டு செல்ல அனுமதிப்பதில்லை. தனது விருப்பத்துக்கு மாறாக யாரோ தன்னுடைய முகத்தில் விளக்கை பிடித்துப் பார்ப்பதை உணர்ந்த ஞானி, ''எதற்காக எனது முகத்தில் விளக்கைப் பிடித்துக் குழப்பத்தை உண்டு பண்ணுகிறாய்?'' நீ யார்? உனக்கு என்ன வேண்டும்? எனக் கேட்டான். அதற்கு விடை கூறிய சக்கரவர்த்தி நான் அலெக்ஸாண்டர் மகா சக்கரவர்த்தி. தங்களைத் தரிசிக்க வந்தேன். தாங்கள் எதற்காக இந்த இருட்டுக் குகைக்குள்ளிருந்து

கஷ்டப்பட வேண்டும்? தங்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுக்க நான் தயார். எது வேண்டுமானாலும் கேளுங்கள்' எனக் கூறினான். இதைக்கேட்ட ஞானி புன்னகை புரிந்து, சக்கரவர்த்தியே! நான் உன்னிடம் யாசிப்பதற்கு ஒன்றும் இல்லை. எனக்கு வேண்டியதைக் கொடுப்பதற்கும் உன்னிடம் எதுவும் இல்லை. இப்பொழுது நீ எனக்குச் செய்ய வேண்டிய உபகாரம் இந்த விளக்கை அப்புறப்படுத்தி நீ குகையை விட்டு அகன்று செல்வதாகும் எனக் கேட்டான். சக்கரவர்த்தி பதில் ஏதும் கூற முடியாது மௌனமாக ஆச்சரியத்துடன் அவ்விடத்தை விட்டு அகன்றான். அவனுக்கு அந்த தத்துவஞானியின் மெய்ஞ்ஞான விளக்கம் புரியவில்லை.

இக்கதையின் அகப் பொருளைத் தெள்ளத் தெளிய திருமூலர் 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் உலகுக்கு உணர்த்தியுள்ளார். மூளையிற் சம்பாதித்து வைத்த நினைவுகளாக மீட்கப்படும் அறிவை மாய விளக்கு என்றும், பூவினிற் கந்தம் போல இயற்கையாக உள்ளிருந்து திருவருளால் மலரும் மெய்ஞ்ஞானத்தை தூய விளக்கென்றும் அவர் தெளிவு படுத்துகிறார். நின்று நின்று மங்கி எரியும் காய விளக்கை விட்டுத் தொடர்ந்து பிரகாசித்து வியாபிக்கும் சேய விளக்கான மெய்ஞ்ஞானத்தைத் தான் தேடுவதாகக் குறிப்பிடும் திருமந்திரப் பாடல் இதோ:-

மாய விளக்கது நின்று மறைந்திடும்
தூய விளக்கது நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய விளக்கினைத் தேடுகின் றேனே!

கிரேக்க தத்துவஞானி டயோஜினிஸ் சேய விளக்கினைத் தேடி இருண்ட குகையில் தாரணை தியானம் செய்து கொண்டிருந்தான். சமாதி நிலையில் அவனுக்குத் தூய மெய்ஞ்ஞான விளக்கொளி தோன்றியது. அவனுக்கு மாய விளக்கைக் காட்டிய அலெக்ஸாண்டர் சக்கரவர்த்தியின் செயல் எத்தகையதென்பதை நாம் யூகித்து உணர்ந்து கொள்ளலாம். சூரிய ஒளிக்கு முன்னால் மின்மினிப் பூச்சியைக் காட்டினால் எப்படி இருந்திருக்கும்?

அந்தக் கிரேக்க தத்துவஞானி மெய்ஞ்ஞானத்தை உலக மக்கள் எங்ஙனம் பெறுதல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டி உபதேசிக்கவில்லை. திருமூலரோ தமது சுய அனுபவ வாயிலாகப் பெற்றதை மூடி மறைக்காது பரோபகார சிந்தையுடன் உலக மக்கள் அனைவரும் உய்யும் பொருட்டு மெய்ஞ்ஞானப் பெரும் நெறியைச் சிறப்பாக ஆயிரக்கணக்கான செய்யுள்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார். அவற்றுள் முக்கியமான சிலவற்றை மட்டும் நாம் இங்கு குறிப்பிடுகிறோம். இருளும் மருளும் அற்றதே அருளாகு



மென்று அருள் பெறுவாரே அரனடி கூடுவர் என்றும், அருட்கண் இலாதார்க்கு அரும் பொருள் தோன்றாதென்றும் எம்மைத் திருவருளை முதலிற் பெறும் வண்ணம் தூண்டுகிறார்.

மேலும் திருவருளை மக்கள் பெறாது தடுத்து நிறுத்துவது எது? இத்தடையை நீக்கி அருளைப் பெறுவது எங்ஙனம்? என்பதையெல்லாம் சிறப்பாக நெறிப்படுத்திக் காட்டுகிறார். இருளும் மருளும் தான் அருளுக்குத் தடையாயுள்ளன. இருளை அறியாமையென்றும், மருளை அறிவென்றும் தெளிவுபடுத்துகிறார். அறிவு அறியாமை இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்பது அவர் கூறும் விளக்கமாகும். மெய்ஞ்ஞானத்தை அவர் "செறி வறிவு" என்னும் சொற்றொடரால் குறிப்பிடுகிறார். செறிவறிவு அறிவு விருத்தியால் ஏற்படுவதில்லை. அது உண்மையில் இருளையும் மருளையும் அகற்றுவதனால் சக்திநிபாதம் என்னும் திருவருட் சக்தி இதயத்தில் பதியும் போது பிரகாசிப்பதாகும். சக்திநிபாதம் பெற வேண்டின் இருவினை ஒப்புநிலையைப் நாம் தாரணை தியானம் மூலம் அடைதல் வேண்டும். இருவினையாகிய பாவம் அறியாமையினாலும் புண்ணியம் அறிவினாலும் செயற்படுகின்றன. எனவே இருவினைகளினால் தொடரும் இறப்புப் பிறப்பை நீக்கி மோட்சம் பெற வேண்டின் அறிவு அறியாமை இரண்டையும் அகற்றிச் செறிவறிவாகிய மெய்ஞ்ஞானத்தைப் பெறுதல் வேண்டும் என்பது திருமூலர் துணிபாகும்.

இவ் உண்மையை விளக்கும் திருமந்திரமாவது:-

அறிவறி யாமை இரண்டு மகற்றிச்
செறிவறி வாய்எங்கும் நின்ற சிவனைப்
பிறிவறி யாது பிரானென்று பேணுங்
குறியறி யாதவர் கொள்ளறி யாரே!

என்பதாகும். இதை இன்னும் கூடுதலாக வலியுறுத்தும் பொருட்டுக் கற்றன விட்டேன் கழல் பணிந்தேனே' என எடுத்துக்காட்டுகிறார். செறிவறிவு பெறாதவர்கள் திருமந்திரத்தை அறிவுக் கொள்கைகளாக உரைச் செய்து அவற்றை நினைவில் இருத்தி, அறிவுக் கற்பனைகளை மேலும் விருத்தி செய்வதனால் மெய்ஞ்ஞானம் உண்டாகுமெனப் பகற் கனவு காண்கின்றனர். இவர்களின் கனவு செறிவறிவாகாதென்பதை நாம் தெளிந்து கொள்வோமாக. திருவருளாகிய குதிரையை மனமாகிய வண்டிக்கு முன்னே பூட்டுவோமாக. குதிரையை வண்டிக்குப் பின்னே பூட்டும் மடைமையை நீக்குவோமாக!

செறிவறி வாக நிரம்பிய பேரொளி
கற்பனை யின்றிக் கலந்து நின்றது;

# பிறை பார்த்தலின் மறை பொருள்

கார்த்திகைப் பிறை 'காணுதற்கு அரிது.' கண்டவர்க்கு மோட்சம்! என்பதில் அம்மாவுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. மாலைப் பொழுது கார்த்திகை மாத முகில் மூட்டம். மெல்லிய தென்றல் வீசுகின்றது. அதன் தாக்கத்தினாலோ என்னவோ முகில்கள் மெதுவாக அசைகின்றன. இந்த அசைவில் பூமியின் மேற்குத் திசையில் ஆங்காங்கே முகில்களிடையே சொற்ப இடைவெளிகள் ஏற்பட்டு மறைகின்றன. அன்று கார்த்திகை நோன்பிருந்த அம்மா பிறையைக் கண்டாற்றான் உணவருந்துவதாகப் பிடிவாதமாக இருந்து இந்த முகில்களின் இடைவெளியூடே கார்த்திகைப் பிறை புலப்படாதோ என அங்கலாய்ந்த வண்ணம் ஆகாயத்தையே அவதானித்தபடி இருக்கிறா. முகில் எப்போ விலகும்? பிறை எப்போ புலப்படும்? என விழித்த கண் மூடாது உற்று நோக்கிக் கொண்டிருந்தா. பிறை மூலம் பித்தா பிறை சூடியைத் தரிசிப்பதே அவவுடைய குறிக்கோள். எதற்காக? எல்லாம் குடும்ப நலனுக்காக.

அதிஷ்டவசமாக முகில்கள் சற்றே விலகின. மெல்லிய நகக்கீற்று போலப் பிறையானது ஒளிமயமாகக் காட்சியளித்தது. அம்மாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கைகூப்பி வணங்கிய வண்ணம் '' தம்பி! அக்காவையும் அப்பாவையும் கூட்டிக் கொண்டு ஓடிவா. பிறை தெரியுது. மறையுமுன்னம் ஓடிவா.'' என அவசரப்பட்டா. அப்பா பிள்ளைகளை முந்தியடித்துக் கொண்டு அம்மா நின்ற பின்முற்றத்துக்கு ஓடினார். பிறையைத் தரிசித்த அப்பாவுக்கு ஏதோ ஞானம் பிறந்து விட்டது. உற்சாகம் மேலிட்டது. அவர் அம்மாவை நோக்கி ''என்னம்மா? வைத்த கண் வாங்காமல் பிறையையே பார்த்துக் கொண்டு வழிபடுகிறாயே! இப்பொழுது உனக்கு முகில்கள் தெரியவில்லையா? என்றார். என்னங்க கேள்வி இது? என அம்மா வியப்படைந்தா. அவவுக்கு அப்பாவின் சித்தாந்தம் புரிந்ததோ என்னவோ தெரியாது. எனினும் சாதுர்யமாக நான் பிறையையல்லவோ தரிசிக்கிறேன். முகில்களை அல்லவே!' என விடை கூறினா.

எனினும் அம்மாவை அப்பா விட்டபாடில்லை '' முகிலைத் தானே முன்பு கனநேரம் பார்த்துக் கொண்டிருந்தாய். இப்போ முகிலைப் பார்க்கவில்லை என்கிறாய். நான் உன்னைக் கேட்பதென்ன வென்றால் பிறையைப் பார்க்கின்றபோது உனக்கு முகில்கள் புலப்படுகின்றதா? அல்லது முகிலைப் பார்த்துக்கொண்டிருந்த போது உனக்குப் பிறை தெரிந்ததா? என்பதாகும். சுருக்கமாகக் கேட்பதாக இருந்தால் உன்னால் ஒரே நேரத்தில் பிறையையும் முகிலையும் காண இயல்கிறதா? உள்ளதைச் சொல்லு! என அப்பா



கண்டிப்பாகக் கேட்டார். ''அதெப்படி இயலும்? பிறையைப் பார்க்கும் போது முகிலைக் காண முடியவில்லையே! இவை இரண்டையும் என்னால் ஒரே வேளையில் காணமுடியவில்லை. ஒன்றைத் தான் ஒரு வேளையில் காணமுடிகிறது.'' என்பது அம்மாவின் விடையாகும்.

''ஒன்றை விட்டுத்தான் மற்றதைப் பார்க்க முடியும் என்பதை ஒப்புக்கொள்கிறாயல்லவா? அப்படியாயின் கடவுள் வழிபாட்டுக்கும் இது பொருந்தும் அல்லவா? ஆனால் நீ கடவுள் வழிபாட்டில் இதைக் கடைப் பிடிப்பதாக இல்லையே! புருஷன் பிள்ளை பந்த பாசம் ஐசுவரியம் என்றெல்லாம் ஒட்டிக் கொள்கிறாய். அதேவேளையில் கடவுளிடம் அன்பு செலுத்துவதாகக் கூறிப் பிறை பார்க்கிறாய். இல்லற பாசமும் வேண்டும். கடவுட் பக்தியும் ஒரே வேளையில் வேண்டும் என வழிபடுகிறாய். இது எப்படி ஆகும்? கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்றால் இரண்டும் கெட்ட நிலை தான் கிட்டும். இதை விளங்கிக் கொள்ள ஏன் மறுக்கிறாய்?''

''என்னுடைய நிலையையும் நீங்கள் சொற்பம் புரிந்து கொள்ளாமல் நீங்கள் எனக்குப் போதனை செய்து என்ன புண்ணியம்? நான் தனிய எனக்காகவா இப்படியெல்லாம் வழிபடுகிறேன். அதற்காகவே உங்களையும் பிள்ளைகளையும் பிறை பார்க்கக் கூப்பிட்டேன். அதற்கு நீங்கள் ஏதேதோ சித்தாந்தம் பேசுகிறீர்கள்; எனக்கு அது தேவையில்லை.''

இதைக் கேட்ட அப்பாவுக்கு சிரிப்பு ஏற்பட்டது. ''என்னம்மா? நீ அம்மா ஆவதற்கு முன்பு கன்னியாக இருந்த போது சொற்ப காலம் பிறையே பார்க்காது மறுத்து இருந்தாய். இப்போ பிறை பார்க்கத்துடிக்கிறாய்: ஏன் இந்த மாற்றம்? இரட்டை வேடம் எதற்காக?'' எனப் பரிகாசமாகச் சிரித்தார்.

ஐயையோ! நான் கன்னியாக இருந்தபோது பிறை பார்த்து வழிபட மறுத்த கதையை அறிந்து விட்டீர்களா? தோழி தங்கம்மா தான் அந்தக் கதையை உங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும்; உண்மைதான்! நான் கன்னியாக இருந்து உங்களைக் காதலித்த போது பிறை பார்க்க மறுத்தது உண்மைதான். காதலிக்குமுன்பு பிறை பார்த்தேன்: அதன் காரணத்தைக் கூறாது தோழிக்கு மறைத்தேன். சாக்குப் போக்குச் சொல்லி அவள் என்னைப் பிறை பார்க்க வரும்படி கூப்பிட்ட பல வேளைகளில் நான் கடத்தினேன்: அவளுக்கு என் மீது சந்தேகம் ஏற்பட்டது. காதலனைத் தரிசிக்கும் கன்னியர்கள் கல்யாணம் ஆகும் மட்டும் பிறை பார்க்கும் பழக்கம் இல்லையாம். எனவே நான் பிறை பார்க்க மறுத்த காரணம் எனக்கு ஏற்பட்ட காதல்தான் என அவள் யூகித்துக்

கொண்டாள். படுத்தாத பாடுபடுத்தி என்னிடமிருந்து உண்மையை அறிந்து விட்டாள்.

ஓகோ! அதுவா சங்கதி! பிறை பார்க்காமல் விடுவதற்கும் கன்னியர் புரியும் காதலுக்கும் என்ன தொடர்பு? புரியவில்லையே! அதை எனக்கு விளக்க மாட்டாயா? என்பது அப்பாவின் வினா.

நாணிக்கோணி இதற்கு அம்மா கொடுத்த விளக்கம் அப்பாவைத் தூக்கி வாரிப் போட்டது. அதையும் சொற்பம் கேட்கிறீர்களா? "உங்களை முதன் முதலாகக் காதலிக்குமுன் அந்தப் பிறையைப் பார்த்தேன். அதன் ஒளியிலும் அழகிலும் அருளிலும் மயங்கினேன். உண்மைதான். உங்களுடைய முகத்தைப் பார்த்துக் காதலித்த பின்பு பிறையின் முகத்தைப் பார்ப்பது எங்ஙனம்? தரிசிப்பது எப்படி? அதனால் அப்பொழுது பிறை பார்க்க மறுத்தேன்.

உன்னுடைய நியாயம் வேடிக்கையாக உள்ளது. அப்படியாயின் கல்யாணமாகிய பின் பிறை பார்க்க விரும்புவது ஏன்? இப்பொழுது எனது முகம் உனக்குச் சலித்து விட்டதோ? பிறையின் முகம் பெரிதாகி விட்டதோ? இது கற்புக்கு அழகா? சைவமங்கையருக்கு இது பொருந்துமா? பிறையைத் தரிசிப்பது போல வேறு யாரையும் நீ தரிசிக்கத் தொடங்கினால் என்பாடு என்ன ஆகும்? என அப்பா கேட்டபோது அவரிடம் பொறாமை உணர்ச்சி மேலிட்டது. அம்மா தெய்வீக உணர்வில் பேசினா: சித்தாந்தம் பேசும் அப்பா பொறாமை உணர்ச்சி நிலைக்கு இறங்கி விட்டார். பிள்ளைகள் என் செய்வார்கள்?

இதை உணர்ந்த அம்மா அப்பாவை நோக்கி "நான் மாதவியுடைய நிலைக்கு இறங்கி அவள் கோவலனுடன் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழாவின் போது கலையைப் பற்றிய விவாதம் செய்தது போல நான் இப்போ உங்களுடன் விவாதிக்க விரும்பவில்லை. கண்ணகியைப் போலக் காதல் விடயத்தைப் பற்றி வீண் சர்ச்சை புரியாது இருப்பதையே விரும்புகிறேன். நீங்கள் கோவலனைப் போல வழிக்கு வருவீர்கள் என நம்புகிறேன். பிறை பார்க்கும் பழக்கத்தின் மறைபொருளைச் சரிவரப் புரிந்து சந்தேகத்தை நீங்களே நீக்கிக்கொள்வீர்கள். அதை விசாரணை செய்து உண்மை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் உங்களிடம் உண்டு. நான் சொல் வன்மை அற்றவள். அதனால் நான் சொல்லுவது உங்களுக்குப் பொய் போலத் தோன்றக்கூடும். நான் என் செய்வேன். இந்தப் பிறைக்கு அப்பால் ஏதோ ஒரு பேருண்மை மறைந்துள்ளது. அதைச் சொல்லத்தான் எனக்கு இயலவில்லை. உங்களுடன் தொடங்கிய காதல் விரிவடைந்து பிள்ளைகள் இடம் பரவுகின்றதே. அது குடும்பத்துடன் நில்லாது மெல்ல மெல்ல மேலும் விரிவடைகிறதே! அயலவர்கள்- சமுதாயம் என்றெல்லாம் காதலின் விரிவினால் அன்பு



7240CC

பிறக்கிறதே! முகிலைப் பார்த்துப் பிறையைப் பார்த்தேன். அதன் பின் உங்கள் முகத்தைப் பார்த்தேன். இப்போ எதையோ பார்க்க முயல்கிறேன். அதை என்னென்று சொல்லமுடியவில்லை. கன்னிப் பருவத்தில் இருந்த காதல் வேட்கை இப்போ என்னிடம் இல்லை. எனவே பொறாமைக் கண்ணுடன் என்னைச் சந்தேகம் கொண்டு பார்க்க வேண்டாம் எனப் பணிவுடன் கேட்கிறேன்."

அம்மாவின் பேச்சைக் கேட்டதும் அப்பா அசந்து போனார். கோவலன் மாதவியுடன் கிண்டலாகப் பேசப்போய் ஏற்பட்ட விபரீதத்தை உணர்ந்தார். அம்மா தனக்கு நல்ல பாடம் படிப்பித்ததாகத் தெளிந்தார். சைவ சித்தாந்தம் கூறும் சன்மார்க்கத்தில் கூறப்பட்ட நாயகி நாயகோ பாவனைக்கு உட்பட்டு நின்றே அம்மா பிறை பார்ப்பதைப் பற்றி விளக்கினர். எனவே இது தொடர்பான அகப்பொருட்தெளிவு பெற வேண்டும் என்னும் நோக்குடன் திருக்கோவையார் இறையனார் அகப்பொருள்- திருக்குறளின் காமத்துப் பால், திருமந்திரத்திலுள்ள சன்மார்க்க நெறிகள் யாவற்றையும் துருவி ஆய்ந்து உண்மை விளக்கம் பெற முயன்றார். அதில் வெற்றியும் பெற்றார். பாலியல் சம்பந்தமான காதலுடன் பொறாமை உணர்ச்சியானது பாலுடன் கலந்து மறைந்துள்ள நெய்போல் அன்னியம் இன்றி இருப்பதை அனுபவரீதியாக விளங்கினார். எனவே காதலிலும் பார்க்க அன்பு உயர்ந்திருப்பதை அறிந்தார். அன்பிலும் பார்க்க அருள் நிலை உயர்ந்திருப்பதையும் வழுவறத் தெளிந்தார்.

அருள் நிலையில் இதயத்தில் பொறாமை உணர்ச்சியும், அதனுடன் கூடிய அவா, வெகுளி, இன்னாச்சொல் எதுவும் உருவாகாது, புனிதமாக இருப்பதைக் கண்டார். காதலாகிக் கசிந்து உருகும் இதயம் காதலை விட்டுத்தான் அருள் பொங்கப்பெறும். ஆம்! காதலைப் பார்க்கும் போது அருள் புலப்படாது, காதலை விட்டு அருளைப் பார்க்கும் போது காதல் புலப்படாது. அம்மா படிப்பற்றவதான். ஆனால் அவ எங்கேயோ போய்விட்டா. அவ அப்பாவின் முகத்தை விட்டுப் பிறையின் முகத்தை மீண்டும் பார்க்கிறா: ஆனால் அந்தப்பிறையையும் விட்டு அவ வேறெங்கோ பார்க்கிறா? அது எங்கே? அதைத்தான் அவவாற் சொல்ல முடியவில்லை. ஆம்! அது பரம்பொருளின் அருளையே என்பதை அப்பா நன்கு புரிந்து கொண்டார். பொறாமை உணர்ச்சியும் சந்தேகமும் அப்பாவை விட்டு நீங்கின. அம்மா ஒரு கண்ணகித்தெய்வம் தான்!

திருக்கோவையாரிலே மாணிக்கவாசகர் சித்தரித்த ஒரு காட்சியிலே தலைவியானவள் பிறை பார்க்க மறுத்துத் தோழிக்குப் பொய்க் காரணங்கள் கூறுவதைக் காணலாம். உண்மைக் காரணத்தைத் தமிழ் மரபுப்படி யூகித்தறிந்த தோழி தனது தலைவி காதல் வலையில் சிக்கியிருப்பதை உணர்ந்து கொள்கிறாள். முகிலை முதற்

பார்த்துப் பின்பு அதனை விட்டு அதற்கப்பால் உள்ள சந்திரனைப் பார்த்தல் வேண்டும். இதே போலச் சந்திரனைப் பார்த்து அதைக் கடந்து அதற்கப்பாலுள்ள பரம்பொருளைக் காணவேண்டும் என்பது சைவ சித்தாந்த உபதேசமாகும். இதைத் திருவள்ளுவர் வேறொரு விதமாக விளக்குகிறார். அதாவது

''எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.'' என்பதாகும்.

தலைவி ஒருத்தி தனது கண் புருவத்துக்கு மை தீட்டும் பொருட்டு பிரஸ் ஆகிய கோலை எடுக்கிறாள். அதை நன்றாகப் பார்த்து அதிற் போதியளவு கருமையை எடுக்கிறாள். அப்பொழுது தெளிவாகப் புலப்படும் கோலானது, அவள் நிலைக்கண்ணாடியைப் பார்த்துத் தீட்டத்தொடங்கும் போது மறைந்து விடுகிறது. மைதீட்டும் போது கண்புருவம் மட்டும் தான் அவளுக்குத் தெரிகிறது. இந்திரிய உளவியற்படி இங்ஙனம் ஒன்று புலப்படுவதும் மற்றது மறைதலும் ஏன்? என்பதை ஆயின் ஓர் உண்மை புலப்படும். கண்ணுக்கும் மனதுக்கும் ஒரு வேளையில் இரு பொருள்களைத் தெளிவுறப் பார்க்கும் சக்தி இல்லை என்பதே அவ்வுண்மையாகும். தலைவிக்குக் காதல் மிகும் போது தலைவனின் குற்றம் புரிவதில்லை.

தலைவனிடம் குற்றங் காணும்போது காதல் புரிவதில்லை. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்பது இதை விளக்கும் பழமொழியாகும்.

இவ்வுண்மையைத் திருமூலர் இன்னொரு வகையில் விளக்கி இருப்பதைக் கவனியுங்கள்.


மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமும் இல்லை கருத்தில்லை தானே!

அசுத்தமாயா சம்பந்தமான சுட்டறிவு குற்றம் உடையதாகும். இருவினைக் குற்றமுடைய சுட்டறிவு செம்பொருளாகிய மெய்யுணர்தலை மறைத்துள்ளது. மறைக்கும் இயல்புடைய சுட்டறிவு மறையும் போதுதான் மெய்யுணர்தல் புலப்படும். எனவே சுட்டறிவைப் போக்கக் கூடிய சமய சாதனையே பேரறிவையும் பரம்பொருளையும் காட்டும். சுட்டறிவுப் போதனையும் சமய பரீட்சையும் ஏராளமாகப் பாடசாலையில் நடத்திப் பிரசாரம் செய்வோர் மெய்யுணர்தல் இல்லாதாரே யாவர். காலம், இடம், சந்தர்ப்பம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டே இன்றைய சமய பரீட்சை வினாக்கள் அதிகமாக அமைந்திருப்பதைக் காணலாம். மாணவரிடையேயுள்ள உண்மையைக் கிரகிக்கும் ஆற்றலை



யும் விளக்கத்தையும் விருத்தி செய்து, விவேக அடிப்படையில் இல்லாத சமய போட்டிப் பரீட்சைகள் விழலுக்கிறைத்த நீராகும். மறை பொருளைச் சீடர்கள் சுயமாகவே கிரகித்துத் தெளியும் விவேக ஆற்றலை வளர்க்காத சமயக் கல்வி சுக்கான் இல்லாத கப்பல் போன்றதாகும்.

மாயை மறைக்க மறைந்த சந்திரன் தக்கன் செய்த மாய வேள்வியில் கலந்து கொண்டான். அவ்வேள்வியைச் சிவன் அழித்த போது எல்லோரும் தப்பி ஓடினர். ஆனால் சந்திரன் சிவனுடைய திருவடியில் அகப்பட்டு நசிந்தான். நசிந்த சந்திரன் தனது ஒளியிழந்து இருளானான். அந்நிலையில் தனது தவறை உணர்ந்து சிவனிடம் பரிந்து மன்னிப்புக் கோரினான். பச்சாத்தாபத்துடன் சந்திரன் கோரிய பாவ மன்னிப்பை ஏற்ற சிவன், அவனை எடுத்து மீண்டும் ஒளிவளர் விளக்காகத் தனது சடாமுடியில் அணிந்து கொண்டார். பிறை பார்த்தலின் மறைபொருள் இதன் மெய்யுணர்தலைச் சிவதியானத்தால் உணர்ந்து விடுதலை பெறுதலாகும்.







# ஆனை அருட்பா.

பயங்கரவாதம் என்னும் பிடியிற் சிக்கி அல்லற்பட்டு அழுது வாழும் சிறீலங்காப் பொதுமக்களுக்குப் பாதுகாப்புப் பூரணமாகக் கொடுக்கக்கூடியது எது? என்பதை விசாரணை செய்ய முற்படும் போது அகக்கண்முன்னே புலப்படுவது இருபெரும் அறநெறி நூல்களாகும். ஒன்று ஔவையார் அருளிய நன்னெறி. மற்றது புத்த பெருமான் போதித்த தம்மபதமாகும். நடுவு நிலையிலிருந்து இவற்றைச் சரிவரச் சீர்தூக்கிப் பார்க்கும் போது இவற்றில் அருள் மிகு ஆனையே கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. தமிழ்மூதாட்டி ஔவைப் பிராட்டி தமது நூலின் ஆரம்பத்திலேயே பாதுகாப்புக்குரியவர் ஆனைமுகனென வணக்கம் தெரிவிக்கிறார். கருணாமூர்த்தியாகிய புத்தபெருமானே "தம்மபதம்" என்னும் நூலின் 23 ம் அதிகாரத்தில் அறமே மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடியதாகவும் அதற்கு எடுத்துக்காட்டாக ஆனை அருட்பாவையும் புனைந்துள்ளார்.

இவை இரண்டையும் சமன் செய்து சீர்தூக்கி ஆய்ந்து உண்மை விளக்கத்தைத் தமிழ் இந்துக்களும் சிங்களப்புத்த மதத்தவர்களும் வழுவறப் பெறுவார்களாயின், இருசமுதாயத்தினருமே அறத்தால் பாதுகாப்புப்பெற்றுச் சமாதானத்துடனும் சாந்தியுடனும் வாழ ஏதுவாகும் என்பது நிச்சயம். தமிழன் கண்ட நன்னெறிக்கும், புத்த பிரான் கண்ட தருமத்துக்கும் அடிப்படையானது தூய அறமேயாகும். அறத்துக்கு அற்புதமான அணி இலக்கணமாக ஒளிர்வது ஆனையாகும். எனவே இந்துக்கள் போற்றும் அறமும், புத்தமதத்தவர் பின் பற்றும் தருமமும் ஒன்றே என்பது தெள்ளிதாகப் புலப்படுகிறது. இந்தவகையில் இந்துமதத்துக்கும் புத்தமதத்துக்கும் உள்ள புனிதமான ஒருமைப்பாடு வேறெந்த மதங்களுக்கும் இடையே காணுதல் அரிதினும் அரிதாகும். இவ்விதமான இறுகிய சம்பந்தமுடையோர் முரண்படுவதேன்?

## விபரீதமான விலங்கு நீதி.

இது இவ்வாறாக, இலங்கைச்சமுதாயத்துப் பூர்வப்பெருங்குடி மக்கள் அறநெறியைவிட்டு, "தகுதியுடையோர் தான் உலகில் சீவிக்கவேண்டியவர்" என்னும் வனவிலங்கு நியதியை மேற்கொண்டதேன்? காட்டு ஆனைகளாகவும் சிங்கங்களாகவும் புலிகளாகவும் மாறியதேன்? ஒரு ஆனை மற்ற ஆனையைப் பூனையாக நினைத்தால் விளைவது விபரீதமாகும். பூனையாக மதிக்கப்படும் ஆனை வங்கத்துக் கடும் வேங்கைப்புலிபோல் ஆனையின் மத்தகத்தில் பாய்தல் ஆச்சரியமன்று. ஏனெனின் தகுதியுடையோர் மட்டும் வாழ்வதற்கு உரிமை உடையோர் என்னும் இந்து பௌத்த அறநெறிக்கு மாறாக உள்ள காட்டுநீதி தலைதூக்குதலே காரணம் என்க.

கண்டங்காயைச் சுரைக்காய் போலப் பருப்பிக்காது விடயத்துக்கு வருவோம். புத்தபெருமான் அருளிய தம்மபதத்தில் வரும் ஆனை அருட்பா பாளிமொழியிலே '' நாகவக்க '' எனக்கூறப்பட்டுள்ளது. நாக என்னும் பதம் ஆனையையும் வக்க என்னும் பதம் மலர்ச்செய்யுளையும் குறிப்பனவாகும். இங்கே மலர் குறிப்பது மலரின் நறுமணத்தையாகும். இதிலிருந்து புத்தபெருமான் போதித்த கருணைக்கடலாகிய தருமம் நறுமணம் உடையதெனப்பெறப்படுகிறது. இந்த உண்மையைப் புத்தபிரானே பிறிதோர் இடத்தில் மலரின் நறுமணம் காற்றுக்கு எதிராக வீசும் ஆற்றலுடையதன்று எனவும் அறத்தின் நறுமணமோ திமைக் காற்றுக்கு எதிராகவும் வீசும் வல்லமையுடையதெனவும் எடுத்துக்காட்டியுள்ளார். அறத்துக்கு அடிப்படை அருள் என்பது இந்து மதத்துக்கும் புத்தமதத்துக்கும் பொதுவான பொருளாகும். எனவே '' நாகவக்க '' என்னும் பாளிமொழிச் சொற்றொடரை இந்து மக்களும் ஏற்கும் வகையில் '' ஆனை அருட்பா '' எனத்தமிழாக்கம் செய்தது பொருத்தமுடையதெனக் கருதுகிறோம்.

### பயிற்றப்பட்ட யானை.

ஆனை அருட்பாவின் முதலாவது சூத்திரத்திலேயே புத்தபெருமான் உவமை அணியாக எடுத்துக்கொண்ட ஆனை காட்டிலே மதம் பிடித்து அலைந்து பிறரைத்தாக்கும் ஒன்றல்ல என்பதை நன்குத்தெளிவு படுத்தியுள்ளார். அவர் கருதுவது வாழ்க்கையாகிய யுத்தமுனையில், மனிதசமுதாயத்தின் நடுவில் உள்ள கஜதுரக ரதபதாதியின் முன்னணியில் நிற்கும் சதுரங்கத்தில் தென்படும் பயிற்றப்பட்ட யானையையேயாகும். இந்த யானையானது எதிரிகளால் எய்யப்படும் அம்புகளையெல்லாம் மிகப்பொறுமையுடன் வரவேற்கப் பயிற்றப்பட்ட கட்டுப்பாடு உடையதாம். '' இந்த யானை போல '' மக்களுடைய நிந்தனைகளை நான் சகித்துக்கொள்கிறேன் என அவர் எமக்குப் போதிக்கிறார். மேலும் '' நிச்சயமாகச் சொல்கிறேன். மக்களுட்பெரும்பாலோர் நிந்தனையைச் சகித்துக்கொள்ளும் பயிற்சியற்றவர்களாக உள்ளனர். பண்புடையோர் நிந்தனையைச் சகித்துக் கொள்வார்கள். சகிப்புத்தன்மையில் பயிற்சி பெற்றுத் தம்மை கட்டுப்படுத்துபவன் பாக்கியசாலியாவான். அவனுடைய பண்பு பயிற்றப்பட்ட ஆனையுடையதை விட மேலானதாகும் என்பது தம்மபதம்.

மக்களைப் பாதுகாக்கும் உமாபதி மைந்தனாகிய ஆனைமுகன் இந்து மத முதல் நூல்களிலெல்லாம் பொறுமையின் சிகரமாகவும் பண்பின் உச்சியாகவும் திகழ்வதையே காண்கிறோம். தேவமகன் பண்பில் திகழ்கிறான் எனப் பரணி பாடுவதில் யாது பிரயோசனம். தேனே! நீ இனிப்பாயாக! என எவரும் சொல்லவேண்டியதில்லை. உண்மையாக நாம் கூறுகிறோம். மனிதமகன் பொறுமையின் பண்பே சொரூபமாகினால் அவனை நாம் தேவமகனிலும் பார்க்க மேலானவனா



கக் கருதுவோம். கசந்திடும் வேம்பு இனித்திடும் தேனாகமாறினால் அதற்கு ஒரு தனிமதிப்புண்டு என்பதைக் கூறவும் வேண்டுமோ? தருக்கரீதியில் புத்தபெருமானுடைய பொறுமைப் பண்பு ஆனைமுகனுடையதை விடக்குறைந்ததல்ல எனப்புலப்படுகிறது. மனிதன் தெய்வ நிலையடைவதைப் போற்றவேண்டுமே யொழியத்தெய்வம் மனிதநிலையடைதலைப் போற்றுதல் எங்ஙனம்? புத்தபிரானையும் ஆனைமுகனையும் சிங்களவரும் தமிழரும் ஒருமைப் பாட்டுடன் போற்றும் கல்வி அறிவு பெறுவார்களாயின் நாட்டில் பூசலும் பிணக்கும் மறைந்து போதல் நிச்சயமாகும்.

### சேற்றிற்புதைந்த யானை.

இதற்கு அடுத்ததாக ஆனை உவமை அணியைக்கொண்டு புத்தபெருமான் எமக்குச்செய்யும் உபதேசத்தை எடுத்துக்கொள்வோம். இது சேற்றிற்புதைந்த ஆனையை எடுத்துக்காட்டாக உள்ளதாகும். இதை ஒரு சிறு உவமைக்கதை மூலம் விளக்குகிறார். அக்கதை இதோ:- '' ஓர் ஆனை சேற்றில் புதைந்துவிட்டது. அதை மீட்பதற்கு ஆனைப்பாகன் பல முயற்சிகளை எடுத்தான். பலிக்கவில்லை. கடைசியாக அந்த ஆனைப்பாகன் போர்க்கோலம் பூண்டு ஆனைமுன் தோன்றினான். போர்முரசு கொட்டப்பட்டது. இவற்றின் சங்கநாதம் ஒலித்தது. நாதத்தைக்கேட்ட ஆனை தூண்டப்பட்டது. புதியசக்தியும் தென்பும் பெற்றது. உற்சாகம் உயர்வடைந்தது. அது தனது சுயமுயற்சியாலேயே தன்னைச் சேற்றிலிருந்து மீட்டுக்கொண்டது. '' இந்த உதாரணத்திலிருந்து நாம் கருதி உணரும் உண்மையாது? தன்னிடமுள்ள உயர்ந்த சக்தியை ஆனை சரிவர உணராமல் உள்ளது. அது இசையின் நாதத்தால் தூண்டப்படும் போது மறைந்துள்ள தனது சக்தியாலேயே தன்னை மீட்டுக்கொள்ளும் தன்மையைப் பெறுகிறது. அந்நியருடைய சக்தி அதற்கு வேண்டியதில்லை.

ஆனைமுகன் நாதத்தின் சொரூபமாகும். அவனைக் கணபதி என இந்துக்கள் அழைப்பர். கணபதி என்பவன் செவிக்கு முதல்வனாகும் அதைஎடுத்துக்காட்டுவதற்கே கணபதியுடைய செவி ஆனைக் காது போலப்பருமனாக உள்ளது. இதன் தத்துவப்பொருள் கணபதியாகிய முதல்வன் ஆனையைப் போன்ற நாதசக்தி உடையவன் என்பதாகும். முதல்வனுக்கு இத்தகைய சக்தி வெளிப்படையாக உள்ளது. மனிதனிடம் இது மறைந்துள்ளது. இச்சக்தியை விஞ்ஞானம் உளவியல் விவேகப்படைப்புச்சக்தியென விளக்குகின்றது. இனித இன்னிசை நாதத்தின் தூண்டுதலால், வெளிக்கொணர்ந்து மனிதன் பந்த பாசமாகிய சேற்றிலிருந்து சுயமாகவே விடுதலை செய்து கொள்ளலாம் என்பது இந்து தருமமும் கருமமுமாகும். கணபதி முந்திவந்த ஆனைச்செவி. புத்தபெருமான் பிந்தி வந்த ஆனைத்தந்தம். இவை இரண்டும் பாதுகாப்புக்குரியனவாகும்.

## சமாதானச்சங்கநாதம்.

ஆனைச்செவியும் ஆனைத்தந்தமும் தம்முள்ளே முரண்பட்டுச் சுயபாதுகாப்பை இழக்குமேயானால் யாருக்கு வேட்டை? குள்ளநரிக்கெனக் கூறவும் வேண்டுமோ? சிறீலங்காவாகிய ஆனையின் செவியும் தந்தமும் இங்ஙனம் எது உயர்ந்தமதெனப்போட்டியும் பொறாமையும் காட்டும்போது நடப்பதென்ன? அந்நிய நாட்டின் தலையீடும் ஆதிக்கத்தொல்லையும் தான். பிச்சை எடுக்கச்சென்றவன் மீது நாயை முதலாளி ஏவி விடக்கண்டதும் “ ஐயா, பிரபு! பிச்சை வேண்டாம் நாயைப்பிடியுங்கோ ” எனக்கூச்சலிடும் நிலைக்கு இலங்கை மக்கள் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள். ஆத்மீக உலகிலும் நாம் இத்தகையதோர் அவஸ்தையில் அகப்பட்டு அல்லல் உறுகிறோம. கட்டுப்பாடற்ற வாழ்க்கையால் சாத்தனிடம் மண்டியிடுகிறோம். அவனிடம் பிச்சை கேட்கிறோம். அவன் கொடிய மன இந்திரிய நாய்களை ஏவுகிறான். நாம் அதோகதி அடைகிறோம். இந்தப் பசாசுகளையும் நாய்களையும் விரட்டி அடிக்க நாம் செய்ய வேண்டியதென்ன?

இதோ புத்தபெருமானும், ஔவைப்பிராட்டியும் திருவள்ளுவனும் ஊதும் அறச்சங்க நாதத்தின் புத்தொலி எமது — ஆம் தமிழ் சிங்கள மக்களின் கூர்மையான காதுகளிற் புகுகின்றது. புத்துயிர் அளித்து எம்மைப் போட்டி பொறாமைச்சேற்றிலிருந்து சுயமாகவே பிறர்தலையீடின்றி மீட்டுக்கொள்ளும்படி ஓங்காரமாக ஒலிக்கிறது. இந்த ஓங்காரச் சமாதானச் சங்க நாதத்தை அனுசரித்து நாம் அனைவரும் தூண்டப்படுவோமானால் பூசற் சேற்றிலிருந்து விடுதலை பெறுதல் திண்ணம். சிறிலங்கா மாதா சாந்தியடைதல் சத்தியமாகும்.

## தனித்து வாழும் காட்டுயானை.

இக்கட்டுரை முடிவில் புத்தபெருமான் சுட்டிக்காட்டிய ஆனையின் இன்னும் ஓர் இயல்பைப் பற்றிக்குறிப்பிட விரும்புகிறோம். அது தனித்து வாழும் காட்டுயானையைப்பற்றியதாகும். காட்டிலே கூட்டமாக வாழும் யானைகளை விடத் தனித்து வாழும் யானையே கூடிய சக்தியுள்ளதாகப் புத்தபெருமான் அவதானித்துள்ளார். ஆனையைப்போலத்தனித்திருந்து வாழப்பழகினால் மக்கள் அபாரமான சக்திபெறுவார்கள் என்பது புத்தரின் துணிபாகும். தனித்து வாழப்பழகுதல் அறநெறியின் தவசாதனையாகிய தியான அப்பியாசத்தைக்குறிப்பதாகும். தியானத்தாற் பெறக்கூடியது சமாதியாகும். சமாதி என்பது செயலற்றுக்கல்லுப் போலக் கிடப்பதன்று. சமநோக்கினாலோ அல்லது திருஷ்டியினாலோ பெறப்படும் ஓர் அற்புதமான அறச்சக்தியினுடைய புனிதமான இயக்கமே சமாதியாகும். சம மனோநிலையில் சுயமாகவே மக்கள் இதயத்தில் மலர்ந்து மிளிர்ந்து சாந்தியையும் சமாதானத்தையும் உலகுக்கு நல்குவதே தியான



சமாதியாகும். இது ஒரு சடங்கைப் பிரார்த்தனை அல்ல. இந்துக்கள் கூறும் அட்டாங்கயோகத்தின் கடைசி மூன்றுபடிகளும் தாரணை, தியானம், சமாதி என்பனவாகும். இந்துக்களையும் புத்த மதத்தவர்களையும் இங்ஙனம் தனித்திருந்து தியானநெறியில் வெற்றி பெறத்தூண்டும் ஆனை அருட்பாவும், விக்கினத்தை நீக்கும் விநாயகர் நன்னெறிப்பாவும் வாழ்க!

## சமநோக்கு ஜனநாயக மாளிகையாகும்.

கிளிக்கு நாக்குத்தடித்தால் பேசக்கற்பித்தல் சாத்தியமாகாது. மன நிபந்தனைகளாற் கட்டுப்பட்ட வயது வந்தோருக்குத் தியான சமாதி சாதனையைப்பயிற்றுதல் சுலபமான காரியமல்ல அவர்கள் பூண்ட மனப்பான்மையை மாற்றும் வகையில் சமயக்கல்வி அமைதல் வேண்டும். மேலும் சிறுர்களுடைய பிஞ்சு மனம் மாசுபடாத வகையில் சமய சமரச் சன்மார்க்க தியானசமாதி சாதனைப்பாடம் கல்வி நிலையங்களிலே சரிவரப்புகுத்தப்படுதல் வேண்டும். அவர்களைச் சமநோக்கு உள்ளம் படைத்தவர்களாக வளரவிடுதல் வேண்டும். இத்தகையதோர் சமரச கல்விப் பணியை இப்பொழுது இருந்தே தொடங்கினால் இதன் பலனைப் பத்து வருடங்களின் பின்புதான் சரிவரப் பெறலாம். அப்பொழுது சட்டமும் அடக்குமுறையும் இன்றிச் சிறீலங்கா மாதா சுயமாகமே வேண்டிய சாந்தி அடைவாள். இத்தகையதொரு பொற்காலம் மலரவேண்டும் எனப்பிரார்த்தித்து நிற்கிறோம். சமநோக்கின் அடிப்படை புத்தர்களும் இந்துக்களும், சிங்களவரும் தமிழரும் சமநிலையுடையோர் என்னும் சமத்துவமாகும். இதுவே சுதந்திரத்தின் அத்திவாரம்; சகோதரத்துவத்தின் ஆணிவேர்; ஜனநாயகத்தின் மாளிகையாகும். இந்த வகையில் மனப்பான்மை மாற்றம் செய்யக்கூடிய சமயகல்வித்திட்டத்தை வகுத்து அமுலாக்கல் பலனுடையதாகும்.

——பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



# மூண்டெரியும் அனலில் மெய்ஞ்ஞானத்தைப் பார்க்கவிழையும் விமலா தக்கர்!

"முடிவில்லாத பயணம்" என்னும் தமது கன்னி நூலில் விமலா தக்கர் என்னும் தத்துவஞானி மூண்டெரியும் அனல் என்னும் ஓர் அத்தியாயத்தை அமைத்துள்ளார். இவர் விநோபாஜியினால் செல்லமாக விமலாஜி என அழைக்கப்பட்டவர். சர்வோதய பூதான இயக்கத்தில் இவர் எட்டாண்டுகள் அல்லும் பகலும் அரும்பணி புரிந்தவர். உள்ளத்தில் ஒரு பூரணமான புரட்சி உடனடியாக அவசியம் தேவை என்பதை இவர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியிடம் தெளிவாகப் பெற்றார். சத்தியத்தை ஒவ்வொருவரும் சுய விழிப்புணர்வு ஆற்றலினால் கண்டு பிடித்தல் வேண்டுமென்பது இவர் துணிபு.

உண்மை விளக்கம் பெறவேண்டிய ஆற்றல், ஒவ்வொருவரிடமும் பெரும்பாலும் இயற்கையாகவே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது மனிதனிடம் மறைந்துள்ளது.

மாண்புடைய இவ்வாற்றலை முறைப்படி வெளிக் கொணர்வதற்கு வேண்டிய சாதனை தியானமேயாகும் என உபதேசிக்கிறார். இருவினைச் சார்பற்ற நடுநிலையில் நின்று எதையும் கூர்மையாக அவதானிக்கும் விழிப்புணர்வு தான் தியானமென இவர் விளங்குகிறார்.

தியானம் செய்வதற்குத் தனியான இடமோ குறித்த காலமோ குரு உபதேசமோ அல்லது பல்சமய வேதாகம ஆய்வோ தேவையில்லை. விமலாஜி வேதாகமக் கட்டளைகளை ஏற்க மறுத்துப் பூதான இயக்கத்திலிருந்து விலகினார். இதை விரும்பாத விநோபாஜி விமலாஜியை ஓர் ஆபத்தான எல்லைக்குள் பிரவேசிக்க முற்படுவதாக எச்சரித்தார். இதனைப் பொருட்படுத்தாத விமலாஜி சர்வசேவா என்னும் சஞ்சிகைக்கு ஒரு பகிரங்கக் கடிதம் அனுப்பினார். அதன் தமிழ் ஆக்கம் இதோ: இக்கடிதம் இவருடைய நூலின் மூண்டெரியும் அத்தியாயத்தில் ஆங்கிலத்தில் வருகிறது.

ஒரு பெரிய தயக்கத்தின் பின்பு இக்கடிதத்தை வரைகின்றேன். தயக்கம் ஏனெனின் உங்களுக்குக் கூறும் செய்தியை நான் வார்த்தைகளில் வடிக்கும் போது வெற்றி எய்துவேனோ என்ற வியப்பாகும். எனினும் நான் எழுத வேண்டி உள்ளது. எனது முழுமையான புது அனுபத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற கட்டாய தூண்டுதலுக்குப் பணிந்து எழுதுகிறேன். என்னுடைய வாழ்க்கைச் சரிதத்தை நீங்கள் அறிவீர்கள். எனவே, எனது அந்தரங்கங்களை அறிந்த உங்களுக்கு நான் அவற்றை நினைவு படுத்த வேண்டியதில்லை. நான் உங்கள் இயக்கத்தில் எதற்காகச் சேர்ந்தேன் என்பது உங்களுக்கு விளங்கும். சர்வோதய தத்துவத்தைப் பற்றி நான் பூண்ட மனப்பான்மையை நீங்கள் உணர்வீர்கள். ஆதலின் இதைப் பற்றி எதுவும் கூறேன். சென்ற எட்டு மாதங்களில் என் மனத்திலே ஏற்பட்ட பாரிய பூகம்பங்களையும், புரட்சிகளையும் எரிமலைக் காந்தளிப்புகளையும் உரைக்க விடுங்கள். நான் இப்பொழுது அனுபவித்து வரும் அனுபவங்களின் ஆழத்தையும் உக்கிரத்தன்மையையும் விபரிக்க வார்த்தைகள் இல்லை. சகலதும் மாறி விட்டது. நான் புதிய பிறவி எடுத்துள்ளேன். இது கற்பனையோ அல்லது நோயின்றும் குணமடைந்ததன் பேறாகப் பெற்ற உணர்ச்சிப் பிரதிபலிப்போ அல்ல. இது ஒரு ஆச்சரியமான புலப்பாடாகும். ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது நான் உங்கள் இயக்கத்துடன் கொண்ட தொடர்பு முடிவடைந்து விட்டது. இன்று எனக்குப் புலப்படுவது யாதெனின், எமது உண்மையான பிரச்சனை, நாம் பூரணமாக விடுதலை பெறுதல் வேண்டும் என்ற பிரச்சனையாகும். கூட்டணிகளை ஆக்கி எமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் எம்முடைய சக்தியை நாம் விரயம் செய்வோமாயின், அக்கூட்டணிகளே தனி மனிதனை அழுக்கி விடும். கூட்டணியைப் பாதுகாக்கும் பொருட்டு, அதன் அங்கத்தவர்களின் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடிய புதிய அறநெறிகளை உருவாக்க நேரிடும். தனி நபரின் சுதந்திரம் மட்டுமே மெய்யான அர்த்தம் உடையதாகும்.

மேல் நாடுகளில் சில மாதங்களைச் செலவிட்டு விஞ்ஞானம், தத்துவஞானம் சம்பந்தமான நூல்களைப் பயின்ற பின்பு நான் முக்கியமான புரட்சி எது? என்னும் பிரச்சினையைப் பற்றி சிந்திக்கலானேன். அதன் பேறாக பரிணாமத்தின் மூலவேர் சுதந்திரத்திலே இருப்பதாக முடிவு எடுத்தேன். சகல பந்தங்களில் இருந்தும் விடுதலை அடைவதிலேயே மனித ஆளுமையின் விருத்தி தங்கி உள்ளது. எனக்குரிய ஒரேயொரு அறநெறி நீக்கமற எங்கும் புலப்படும் பரிணாம நியதியுடன் இசைந்து இங்ஙனம் சுதந்திரமாக வாழ்வதேயாகும்.

இதைவிட மேலான அமைதியும் திருப்தியும் எனக்கில்லை. ஒரு உன்னதமாக மனிதப்புரட்சி அன்றி வேறு வழியில்லை. சுய நலனும், தேசிய நலனும் இன நலனும் கொண்டுள்ள சகல கற்பனைச் செயற்பாடுகளில் இருந்தும் ஒருவன் தன்னைத்தானே விடுதலை செய்தலே மனிதப் புரட்சியாகும். தீமையின் உற்பத்தி எமது மன உணர்ச்சிகளின் பொருளேயாதலின், நாம் அதைத் தீர்த்துக் கட்டுதல் வேண்டும். பல நூற்றாண்டு காலமாக மக்களுடைய மனத்திலே புகுத்தப்பட்டவை பூரணமாக நீக்கப்படுதல் வேண்டும். இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய முழுமையான ஒரு நெறியை நாம்

அனுசரித்தல் வேண்டும். நான் இதற்குரிய நடவடிக்கையை எடுத்துள்ளேன். பழையது விலகி விட்டது. அதை நான் பொருட்படுத்தாது விட்டுள்ளேன். தயவு செய்து தப்பிதமாகக் கருத வேண்டாம். நாம் கர்வம் கொள்ளவில்லை. இது உண்மையின் ஒரு சாதாரண வெளியிடாகும். நான் யாது செய்யப் போகிறேன் என்பதை மனத்தால் அறியேன். எனினும் சர்வோதய இயக்கத்தில் உள்ள எனது நண்பர்களுக்கு நான் நல்லாசியும் பிரியாவிடையும் கூறுகிறேன். எமது நட்புறவு ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால் நாம் ஒன்றாகப் புரிந்த பிரயாணம் முற்றுப்பெற்று விட்டது. நான் அதிலிருந்து விலகி விட்டேன். இவ்விளக்கம் விநோபாஜிக்கு அமைதி அளித்தது. ஓர் உளவியல் விசாரணையே தன்னை இயக்கத்திலிருந்து விலகச் செய்ததை அவர் உணர்ந்தார்.

இதன் பிற்பாடு ஒருநாள் நான் சாந்தமாகப் படுக்கையில் சாய்ந்திருந்த போது ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டது. படுத்த வண்ணம் நான் தெளிவான நீலவானத்தையும் சூரிய ஒளியில் மூழ்கிய விருட்சங்கள் நளினமாக ஆடுவதையும் விழிப்புணர்வுடன் அவதானித்தேன். விருட்சங்களின் இலைகள் முறுவலித்தபோது மெல்லிய தென்றல் அவற்றிடம் சில இசை மெட்டுக்களை முணுமுணுத்தன. ரமணீயமான இச்சூழ்நிலையில் எனது உணர்வின் ஊடாகத் திடீரென சில சொற்றொடர்கள் மின்னின.


நான் ஒரு கவிஞர் அல்ல. கவிஞராக வேண்டுமென முயற்சித்ததும் இல்லை. ஆனால் அவ்வரிகளின் ஏதோ ஒரு கவித்தவ மதிப்பு இருப்பதாக மயக்கமின்றி உணர்கிறேன். அவ்வேளை மின்னி மறைந்த சொற்றொடர்களை நினைவு கூர்ந்து ஒரு கடதாசியில் பென்சிலால் குறித்துள்ளேன்.

ஒருவகையில் கவி உருவம் பெற்ற அச்சொற்றொடர்கள் ஆங்கிலத்தில் உள்ளன. அதன் தமிழாக்கம் பின்வருமாறு:

வாழ்க்கையின் ஆலிங்கனம் அழிவாகும்
மனத்தின் முடிபேயன்றி அது உடலின் இறப்பல்ல
பந்தத்தை மனம் சுயமாகப் படைக்கிறது:
சொந்த விடுதலையை அதுதானாகவே காண்கிறது:
156912
மரணத்தின் மிருதுவான சாம்பலிலே
இரகசியமான சுகந்த வாழ்க்கை உள்ளது
வாழ்க்கையின் ஊற்றைப் போதுமெனப் பருகினேன்,
மேலும் என்னிடம் தாகமில்லை.

மனோலயம் பெற்ற விமலாஜீயின் விழுமிய முன்மாதிரியைச் சுதந்திர தாகம் கொண்டு மனித உரிமைக்காகப் போரிடும் இளைஞர்களும் அதை மறுத்துச் சாக்குப் போக்குச் சொல்லும் வயோதிபர்களும் அவதானித்துச் செயற்படுதல் நல்ல பயன் உடையதாகும். மூண்டெரியும் அனலில் மெய்ஞ்ஞானம் மிளிரட்டும்!

# திருவடி சேர வாரீர்!
## ஆசிரியர்



சித்தாந்தச் சுடரொளி
திரு. நா. செல்லப்பா அவர்கள்

செந்தமிழில் ஆங்கிலத்தில் மேடை ஏறித்
தேன்சொட்டும் சிவஞானம் சொல்ல வல்லோன்
சந்ததமும் திருவருளே கண்ணாய்க் கொண்டு
சால்புமிகும் மறைஞானம் வளர்க்கும் வள்ளல்
பந்தவினை பாரிடத்திற் பாய்ந்தே யோடப்
பல்சுவைசேர் கட்டுரைநூல் பலவுந் தந்தோன்
சிந்தையெலாம் சிவமயமாய்க் கொண்ட செல்வன்
சிறப்புமிகு செல்லப்பா நாமத் தோனே.

—சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை